காங்கேயனோடை.

கே- வீட்டு முற்றத்தில் கோலம் போடுவதன் நோக்கம் என்ன?

ப- மூன்று நோக்கங்கள்! ஒன்று. வீட்டு மருமகள் அதிகாலையில் எழுந்திருக்க மாமியார் செய்யும் சதி! இரண்டு, மருமகளின் கைவண்ணத்தை பக்கத்து வீட்டு மாமி பார்த்து வயிற்



வேறு நோய்களாலும் உங்களுடைய *பாலுறுப்பு வீரியமின்மை *பலவீனம் *விரைவில் விந்து வெளியேறுதல் *பிள்ளைப் பேறு இன்மை ஆகியவற்றால் உங்கள் குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படுகின்றதா? அவற்றிற்கு இடம் வைக்காதீர்கள்! இந்தியாவில் மன்னர்கள் பாவித்து ஆயிரக்கணக்கான பெண்களின் நன்மை பெற்றது. பிரஸ்தாப மருந்துகளைப் பாவித்தே- உங்களுக்கு பாலுறுப்பு வீரியமில்லாமையால் அவஸ்தைப்படுகிறீர்களா? அப்படியானால் தாமதியாமல் பெறுமதியான ஔஷதங்களைப் பாவித்து சந்தோஷத்தையும், நீண்ட குடும்ப சுகத்தையும் அனுபவியுங்கள்.

இருபத்தைந்து வருட காலத்திற்கும் அதிகமாக பழைய புதிய பெறுமதியான ஔஷதங்களை முறைப்படி தயாரித்துள்ளோம்

இம்மருந்துகளைப் பாவித்த வெளிநாட்டவரும், உள்நாட்டவரும் பாவித்துப் பலன் பெற்ற ஆயிரக்கணக்கானோர் அனுப்பி வைத்துள்ள கடிதங்கள் உங்களை வியப்பில் ஆழ்த்தும். திருமணம் செய்ய எண்ணியுள்ளீர்களா? திருமணம் செய்யப் பயப்படுகிறீர்களா? திருமணமாகிய பின் மனைவியைத் திருப்திப்படுத்த முடியாமல் ஆண் உறுப்பு வீரியமின்மை, வெகு சீக்கிரம் விந்து வெளியேறுதல், உணர்ச்சியின்மை முதலிய நோய்களால் கஷ்டப்படுகின்றீர்களா? தாமதியாமல் உடனடியாக மருந்தை வாங்கிப் பாவித்து தாம்பத்திய வாழ்க்கையை நன்றாக அமைத்து நீண்ட நேரம் பாலுணர்ச்சியில் ஈடுபட்டு சந்தோஷம் அடையுங்கள்- இன்றேஎழுதிப் பெற்றுக் கொள்ளுங்கள்-

மென்மெட்டோன் சிரப் 14 நாட்களுக்கு ஒரு போத்தல் ரூபா 82/50

எம் பி ஒயின்மென்ட் 14 நாட்களுக்குப் பாவிக்க வேண்டிய குப்பி விலை ரூபா 42/50

பாலுறுப்பு வீரியமின்மை, உறுப்புகள் வீரியமின்மை இவற்றிற்கு வெளிப் பூச்சு மருந்து, சுகத்திற்கு கெடுதி இல்லாதது- இந்த இரண்டு மருந்துகளையும் ஒரே சமயத்தில் எடுத்துப் பாவித்தால் மிகவும் நல்ல பலன் அடைவீர்கள்- வி பி பி யில் பெற்றுக் கொள்ள 8/-க்கு முத்திரை அனுப்புங்கள்- மணியோடர் போஸ்டல் ஓடர்களைப் பதிவுத் தபாலில் அனுப்புங்கள்- செக்குகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது- மேற்குறித்த இரண்டு மருந்துகளுடன் கடுமையான பெரிய வியாதிகளுக்கு எங்களிடம் அதிவிசேஷ மருந்துகள் உண்டு- நேரில் வந்து பரிசோதித்துப் பெற்றுக் கொள்ளலாம்- சிரப் ஒயின்மன்ட் இரண்டிற்கும் வி பி பி சார்ஜ் ரூபா 8/- முத்திரைகள்-

வேறு மருந்துகளைப் பாவித்து பலன் இல்லாமல் திட்டமிட்ட சுகவாழ்க்கையையும் உதறித் தள்ளி விட்டு தற்கொலை செய்ய எண்ணியிருந்தோர் பலர் என்னை நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி குறிப்பிட்ட தினத்திற்குள் நோய்களைச் சுகப்படுத்தி பரிசில்களையும் வழங்கி உள்ளனர்- ஆனபடியால் உடனடியாக என்னைச் சந்தியுங்கள் அல்லது தபாலில் தொடர்பு கொள்ளுங்கள்-

விவாகம் செய்வதற்கு வயது வந்த இளைஞர்களும் யுவதிகளும் தமக்குள்ள இரகசிய நோய்களைப் பெற்றோர்களுக்கு கூற வெட்கப்பட்டு தமது திருமண வாழ்க்கையை ஒத்திப் போட வேண்டியதில்லை. தங்களுடைய நோய்களைப் பற்றிக் கவலைப்படாது என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள்- அதற்கேற்ற மருந்துகள் என்னிடம் தயாராக உள்ளது- நேரில் விஜயம் செய்து பாருங்கள் உண்மை விளங்கும்- வி பி பியில் மருந்துகளுக்கு எழுதும் போது ரூபா 8/- க்கு முத்திரை சேர்த்து அனுப்ப வேண்டும். கடிதங்களுக்கு பதில் வேண்டுமானால் -/75 சத முத்திரையுடன் அனுப்ப வேண்டும்.

### பெண்களுக்கு

தாமதமான மாதவிடாய்க்கு நீங்கள் எடுத்த சிகிச்சை பலனளிக்காவிட்டால் உடனடியாக ஆபத்தற்ற விஷமற்ற "சாந்தி வில்லைகள்" வாங்குங்கள். விலை ரூபா 40/- வி பி பி மூலம் ரூபா 8/- க்கு முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். இன்னும் நேரில் சந்தித்தால் பரிசோதித்து விசேஷ மருந்து கொடுக்கப்படும். கர்ப்பப்பை கோளாறுகளுக்குத் திறமான மருந்துகள் உண்டு. நேரில் வரவும்.

பீனிசம் மயுரா கல்யாணி தைலம்

தலை எண்ணெய் போத்தல் ரூபா 40/- வி பி பி ரூபா 8-00 புராதன ஆயுள்வேத தைலம் மிக உன்னதமான சிறந்த பரிகாரம் கொடுப்பது. தலையிடி, கண்பார்வைக் குறைவு. நரை மயிர் தலை வழுக்கை. முகப்பரு. மூக்கடைப்பு இவற்றிற்குச் சிறந்தது. மயிலின் தோகை போன்ற தலைமயிர் வளரவும் உடம்பு ஆரோக்கியமாகவும் கிடாத்திரமாகவும் வளர மயுரா கல்யாணி தைலம் ஓர் சஞ்சீவி.

### பெண்களைப் பற்றி

பெருமை பெற்ற பெண் வர்க்கத்தினருக்கு விந்து வெளியேறல், முடி உதிர்தல், முடி பழுத்தல், மயக்கம், உடம்பு மெலிதல், நின்ற இடத்தில் விழுதல், அழகின்மை ஆகியவற்றைப் பாதுகாக்க ஜீவக சிரப் பாவியுங்கள். போத்தல் ஒன்றின் விலை 102/50.

வி பி பியில் பெற்றுக் கொள்ள ரூபா 8/- க்கு முத்திரை அனுப்புங்கள். மற்றும் பெண்களுக்கு உண்டாகிய சகல நோய்களுக்கும் வெவ்வேறு சிகிச்சைகளுடன் மருந்துகளும் உண்டு. உடம்பு முழுவதும் பூரண சுகம் தருவது. நேரில் சந்திக்கவும்.

நோயாளரை பரிசோதிக்கும் நேரங்கள்- வார நாட்களில் சனிக்கிழமை உட்பட காலை 9 மணி முதல் பகல் 1-30 மணி வரை. மாலை 4 மணி முதல் இரவு 7-30 மணி வரை ஞாயிறு காலை 9 மணி முதல் பகல் 1-00 மணி. (பௌர்ணமி தினங்களில் முற்றும் மூடி இருக்கும்)

காலஞ்சென்ற டாக்டர் வில்பர்ட் அபேவர்த்தனவின்குமாரர்

**டாக்டர் ரஞ்சித் அபேவர்த்தன தொலைபேசி : 32446**

**LATE DR. WILFRED ABEYWARDENA'S SON DR. RANJIT ABEYWARDENA T'PHONE: 32446**


இல 77 பஞ்சிகாவத்தை ரோட் (டவர் ஹோல் அருகில்) மருதானை கொழும்பு—10

**77, Panchikawatte Road. (near Tower Hall), Maradana (Next to Soma Tea Room)**

# தென் ஆபிரிக்கா: விடுதலையில் விரிசல்

விடுதலையில் விழுந்தது விரிசல், தென் ஆபிரிக்க இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிராக பல்லாண்டு காலம் போராட்டம் நடத்தி வந்த விடுதலை இயக்கங்கள் மத்தியில் கிளம்பியிருக்கும் போட்டியும் புகைச்சலும் பூசல்களும் இப்படிச் சொல்ல வைக்கின்றன.

ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த தென் ஆபிரிக்க கறுப்பர் சமூகத் தலைவர் நெல்சன் ஹொலிஹ்லஹ்லா மண்டேலா



மண்டேலா

28 வருட கால சிறை வாசத்தின் பின்னர் கடந்த 11 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டார்.

உலக நாடுகளின் எதிர்ப்புக்கும் நெருக்கடிக்கும் நிர்ப்பந்தத்திற்கும், விடுதலை போராட்ட வேகத்திற்கும் தாக்குப் பிடிக்க முடியாது தென் ஆபிரிக்க வெள்ளையர் சிறுபான்மை இன ஒதுக்

கிரஸ் அதன் தலைமையகத்தை தன்சானியாவில் அமைத்து செயல்பட்டு வருகிறது. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஸம்பியாவில் தலைமையகத்தைக் கொண்டிருக்கின்றது.

## கடும் போக்காளர் மீது

## கண்டனக் கணை

கடந்த மாதம் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் வெளிநாட்டு விவகாரப் பேச்சாளர் தாபோ எம்பெகி அனைத்து ஆபிரிக்க காங்கிரஸின் கும் [illegible] மட்டந்து தள்ளினார்.

தன்சானிய பல்கலைக்கழக கூட்டம் ஒன்றில் அவர் பின்வருமாறு சொன்னார்.

அனைத்து ஆபிரிக்க காங்கிரஸ் போராட்டத்தின் பாதையை விட்டு விலகி விட்டது. விரோத

தால் காங்கிரஸுக்குள் கருத்து வேறுபாடு கிளம்பியது.

காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்றவர்கள் 1959 இல் அனைத்து ஆபிரிக்க காங்கிரஸை உருவாக்கினார்கள். வெள்ளையர்களை இந்த போட்டி இயக்கம் ஒதுக்கி வைத்தது.

வெள்ளையர் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் முழுக்க முழுக்க கறுப்பர்கள் சொந்தக் காலிலேயே நிற்க வேண்டும் தென் ஆபிரிக்கா என்ற பெயரை அஸானியா என்று மாற்றி அமைக்க வேண்டும் இது அதன் கோரிக்கை.

1960 இல் இந்த இரண்டு இயக்கங்களுமே தடை செய்யப்பட்டு விட்டன. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் "உம்கொன்டோ வீ சிஸ்வே (இனத்தின் ஈட்டி) என்ற இராணுவப் பிரிவு ஒன்றை உருவாக்கியது. ஸம்பியாவில் தளம் அமைத்துக் கொண்டது.

அனைத்து ஆபிரிக்க காங்கிரஸ் தன்ஸானியாவில் இருந்து இயங்க ஆரம்பித்தது.

## வேறுபாடுகளை மறந்து

## கம்யூ வுடன் கூட்டு

இதேவேளை 1921 இல் ஸ்தாபிக்கப்பட்ட தென் ஆபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சியுடன் கொண்டிருந்த கருத்து வேறுபாடுகளை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அதனுடன் அணிசேர்ந்து கொண்டது. வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக ஆயுதப் போராட்டத்திற்குத் தயாரானது.

இவ்வாறாக தென் ஆபிரிக்க இன ஒதுக்கல் வெள்ளையர் சிறுபான்மை அரசு மீது ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நெருக்கடிகளைத் தணிக்க ஆரம்பித்தது.

வெளிநாடுகளின் பொருளாதாரத் தடை கலாசார விளையாட்டுத்துறை பகிஷ்கரிப்பு ராஜதந்திர ரீதியாக தனிமைப்படுத்தல் ஆகிய வழிமுறைகளை அது கையாண்டது.

காய்த்த மரத்திற்குத்தான் கல் எறி விழும். ஆபிரிக்க தேசிய காங்கிரஸுக்கு இப்போது சொல்லடிகள் விழ ஆரம்பித்திருக்கின்றன.

மண்டேலா 1918 ஜூலை 18 ஆம் திகதி கிழக்கு கேப் மாநிலத்

தென் ஆபிரிக்காவின் மொத்த சனத்தொகை ஒரு கோடி 41 லட்சத்து 67 ஆயிரத்தில் இவர்களே பெரும்பான்மை.

இவர்களை விட கேப் மலாயர், கிழக்கு ஆபிரிக்க அடிமைகளின் வழித்தோன்றல்கள் டச்சுக்காரர்களின் உறவினால் உருவான ஹொட்டன்டொட் மக்கள் ஆகியோரை உள்ளடக்கிய கலப்பின மக்களின் எண்ணிக்கை 13,19,000

இந்தியர்கள் இந்திய வம்சாவளியினர் ஆகியோரை உள்ளடக்கிய ஆசியாக்காரர்களின் எண்ணிக்கை 4 லட்சத்து 31 ஆயிரம்.

கறுப்பர் சமூகத்தவர்களின் குல வேறுபாடு ஆதிக்க போட்டி ஆகியவற்றுக்குப் புறம்பாக இந்தியர் எதிர்ப்பு கலவரங்களும் இப்போது உத்வேகம் கொண்டிருக்கின்றன.

## இந்தியர்கள் மீது

## வன்முறை கட்டவிழ்ப்பு

கடந்த 10 ஆம் திகதி டர்பனில் கறுப்பர் சமூக கும்பல்கள் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டன. இந்தியக் குடியிருப்பாளர்களுக்கு எதிரான இந்தத் தாக்குதல்களில் இரண்டு இந்திய இளைஞர்கள் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார்கள் 10 பேர் காயமுற்றார்கள்.

வாட்டர் அவெனியூ சந்தைத் தொகுதியில் சுமார் 400 கறுப்பர் சமூகத்தவர்கள் இந்தத் தாக்குதல்களை நடத்தினார்கள் என்று பொலீஸ் பேச்சாளர் பாலா நாயுடு தெரிவித்தார்.

வன்முறைக் கும்பல்கள் தாக்குதல்களிலும் சூறையாடல்களிலும் இறங்கின பொலீஸார் மீதும் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

ஸுலு குல மக்களின் பழைமைப் போக்குக் கொண்ட இன்கதா

## பூலோக சஞ்சாரம்

**எஸ்.எஸ்.எஸ்**

இயக்கத்திற்கும், இடதுசாரி ஐக்

தென் ஆபிரிக்கா நான்கு மாநிலங்களை அதாவது நன்னம்பிக்கை முனை, நத்தால், டிரான்ஸ்வால் ஓரேன்சு சுதந்திர மாநிலம் ஆகியனவற்றை உள்ளடக்கியிருக்கிறது.

## டச்சுக்காரர்களின்

## கிழக்கு இந்திய கம்பனி

டச்சு கிழக்கு இந்தியக் கம்பனியினர் 1652இல் நன்னம்பிக்கை முனையில் குடியேற்றத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தினார்கள்.

18ஆம் நூற்றாண்டில் அவர்கள் மத்திய ஆபிரிக்காவிலிருந்து வந்த பலதரப்பட்ட கறுப்பர் இன ஜாதியினர்களின் தாக்குதல்களைச் சமாளிக்க வேண்டியதாயிற்று.

நெப்போலியன் யுத்தங்களை அடுத்து 1814இல் பிரிட்டிஷ் முனை காலனி அமைக்கப்பட்டது.

1833இல் அடிமைத்துவம் ஒழிப்பு, பிரிட்டிஷ் ஊடுருவல் ஆகியனவற்றால் அதிருப்தியுற்ற டச்சு மக்கள் (இவர்களை போவர்கள் அல்லது ஆபிரிக்கனர்கள் என்றும் அழைப்பார்கள்) வடபகுதி நோக்கி நகர ஆரம்பித்தார்கள்.

அவர்கள் இவ்வாறு தென் ஆபிரிக்க குடியரசு அல்லது டிரான்ஸ்வால் என்ற பகுதியையும், ஒரேன்ஜ் சுதந்திர ராஜ்யத்தையும் சென்றடைந்தார்கள்.

1899இல் பிரிட்டிஷாருக்கும் இவர்களுக்கும் இடையே யுத்தம் வெடித்தது. 1902இல் டச்சு மக்கள் சரணாகதி அடைந்தார்கள். பிரிட்டிஷ் பிரஜை ஆனார்கள்.

## தென் ஆபிரிக்கா

## உதயம்

ஆயினும் அவர்களுக்கு சுயாட்சி வாக்குறுதி அளிக்கப்பட்டது. 1909இல் பிரிட்டன் ஒரு அரசமைப்பை உருவாக்கி அதனை நிறைவேற்றியது. தென் ஆபிரிக்க சட்டம் நிறைவேறியது. இவ்வாறாக 1910இல் தென் ஆபிரிக்க யூனியன் என்ற நாடு உருவாகியது.

1958இல் வலதுசாரி நாஸிக் கட்சியான தேசியக் கட்சி பதவிக்கு வந்தது. அது நிற அடிப்




① மாலாவி; ② சுவாஸிலாந்து; ③ லெஸொதோ

இரண்டு– கறுப்பர் சமூகத்தவர்கள்.
மூன்று– கலப்பின மக்கள்.
நான்கு– ஆசியாக்காரர்கள்.

தென் ஆபிரிக்க சிறுபான்மை வெள்ளையர்களின் அரசு 3 கோடி 70 லட்சம் மக்களை (தற்போதைய சனத்தொகை) இவ்வாறு பிரித்து அவர்களுக்கு இடையிலான தொடர்புகளை அற்ப சொற்பமாக்கியது.

இதன் மூலம் அது தொட்டில் முதல் சுடுகாடு வரை வெள்ளையர் ஆதிக்கத்தை நிலைநாட்டியது. கலப்பின, கறுப்பர் சமூகங்களுக்கு வாக்குரிமையை மறுத்தது.

இன ஒதுக்கல் சட்டத்தின் மூலம் தென் ஆபிரிக்காவின் மொத்த சனத் தொகையில் 14 சத வீதமானவர்களான வெள்ளையர்களுக்கு மொத்த நிலப்பரப்பில் 87 சத வீதம் ஆதிக்க உரிமை வழங்கப்பட்டது.

கம் தருகிறார்.

கடந்த 4ஆம் திகதி அவர் தொலைக்காட்சியில் பின்வருமாறு தெரிவித்தார்.

எதிர்க் கட்சியினர் மீதான தடைகளை தளர்த்துவது என்ற எனது முடிவு ஆபத்து நிறைந்தது தான். ஆயினும் புரட்சியைத் தவிர்க்க இது அவசியமானதாகும்.

அவருடைய விளக்கம் இது.

முன்னர் ரொடீசியாவை வெள்ளையர்கள் ஆண்டு வந்தார்கள். இப்போது அது கறுப்பர் சமூகத்தவர்களின் ஆட்சியின் கீழ் ஸிம்பாப்வேயாக பரிணமித்திருக்கிறது அல்லவா?

தென் ஆபிரிக்காவும் ரொடீசியாவின் பாதை வழி செல்கிறதா என்ற [illegible] கேள்வி தொடுக்கப்பட்டது. அவர் சொன்ன பதில் உண்மை நிலைமையைத் தெளிவுபடுத்துகிறது. அவர் கூறினார்—

ரொடீசியாவில் தவறு நிகழ்ந்து விட்டது ஆக்கபூர்வமான

முடியாது தென் ஆபிரிக்க வெள்ளையர் சிறுபான்மை இன ஒதுக்கல் அரசு மண்டேலாவை விடுதலை செய்து விட்டது-

இந்த விடுதலையினால் தென் ஆபிரிக்க போராட்ட இயக்கங்கள் மத்தியில் விரிசல் விழுந்திருக்கிறது-

அரிய்து செய்த எளியதற்கு ஏமாந்து திரிதல் என்று சொல்லும் அளவுக்கு தென் ஆபிரிக்க விடுதலை இயக்கங்களின் போக்கும் பூசல்களும் குல பேதங்களும் வெளிவர ஆரம்பித்திருக்கின்றன-

## பிரிந்து நிற்கும்

## தென் ஆபிரிக்கர்கள்

தென் ஆபிரிக்க இன ஒதுக்கலுக்கு எதிராக உலக நாடுகள் ஒன்றுபட்டிருக்கின்றன, உலகத் தலைவர்கள் ஒன்றுபட்டிருக்கிறார்கள்- தென் ஆபிரிக்கர்கள் மட்டும் பிரிந்து நிற்கிறார்கள்-

இன ஒதுக்கல் எதிர்ப்பு போராட்டத்தில் மண்டேலாவின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸும் அனைத்து ஆபிரிக்க காங்கிரஸும் முன்னணி வகிக்கிறது-

போராட்ட நோக்கம் ஒன்றாக இருந்த போதிலும் இவை இரண்டும் நேர்மாறான தத்துவார்த்த போட்டி இயக்கங்கள்-

இவை இரண்டும் இப்போது ஒன்றன் மீது ஒன்று சேற்றை வாரி வீச ஆரம்பித்திருக்கின்றன-

இன ஒதுக்கலுக்கு முடிவு கட்டுவதற்கான சமரசப் பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என்று தென் ஆபிரிக்க ஜனாதிபதி எப் டபிள்யூ கிளார்க் அழைப்பு விடுத்திருக்கிறார்-

ஆனால் இந்த இயக்கங்களுக்கு இடையிலான விரிசல் வரவர அதிகரிக்க ஆரம்பித்திருக்கிறது- இன ஒதுக்கல் அரசின் தடையை அடுத்து சுமார் 30 வருட காலம் தலைமறைவாக இயங்கிய இந்த இயக்கங்கள் இப்போது குழாய் அடிச் சண்டையில் இறங்கி இருக்கின்றன-

மண்டேலாவின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸில் இருந்து 1959 ஆம் ஆண்டு பிரிந்து சென்ற அனைத்து ஆபிரிக்க காங்கிரஸ் போராட்டத்தின் பாதையை விட்டு விலகி விட்டது- விரோத சக்திகளினால் அது ஆட்டுவிக்கப்படுகிறது-

தென் ஆபிரிக்க அரசு எம் மீது (ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்) குண்டுத் தாக்குதலை நடத்தியது அண்டை நாடுகளில் உள்ள எம் மீது வேட்டைகளை கட்டவிழ்த்து விட்டது- எமது போராளிகளை தூக்கில் போட்டது- ஆனால் அனைத்து ஆபிரிக்க காங்கிரஸ் மீது ஒரு போதுமே தாக்குதலை நடத்தவில்லை-

இப்படி அவர் சொன்னார்-

அனைத்து ஆபிரிக்க காங்கிரஸ் அதன் செயலாற்று செயலாளர் ஜோ எம்கெவானாஸி மூலம் கடுகடுப்பாக பதில் அளித்திருக்கிறது- கடந்த மாதம் 2 ஆம் திகதி அவர் ஒரு கடிதத்தை வெளியிட்டார்-

ஆபிரிக்க தேசிய காங்கிரஸில் தென் ஆபிரிக்க பாதுகாப்பு ஒற்றர்கள் ஊடுருவி இருக்கிறார்கள் என கடிதத்தில் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது-

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் 1912 இல் மத்தியதர வர்க்கத்தினரால் உருவாக்கப்பட்டது- பிரிட்டிஷ் பாணியிலான வாக்குரிமையை படிப்படியாக பெற வேண்டும் என அதன் ஆரம்பகாலத் தலைவர்கள் விரும்பினார்கள்-

1948 இல் வெள்ளையர் சமூக ஆபிரிக்க தேசிய கட்சி தேர்தலில் வெற்றி அடைந்ததையடுத்து இளம் தீவிரவாதிகளான நெல்சன் மண்டேலாவும் வால்டர் சிசுலுவும் காங்கிரஸின் தலைமையை பொறுப்பேற்றார்கள்-

அரசின் இன ஒதுக்கல் கொள்கையை எதிர்த்து 1952 இல் ஆபிரிக்கர்களான கறுப்பர் சமூகத்தவர்கள் கைதானார்கள்- ஆபிரிக்க தேசிய காங்கிரஸே இதற்கான இயக்கங்களை நடத்தியது-

## சுதந்திர சாஸனத்தால்

## இரு முகாமகள்

1958 இல் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் "சுதந்திர சாஸனம் ஒன்றை நிறைவேற்றியது- இன பாகுபாடற்ற ஜனநாயகத்தை வலியுறுத்தும் இந்த சாஸனத்

மண்டேலா 1918 ஜூலை 18 ஆம் திகதி கிழக்கு கேப் மாநிலத்தில் மண்குடிசையில் பிறந்தவர் சோஸா என்ற குலப்பிரிவின் தலைவர் ஒருவரின் மகன் அவர்-

## ஸுலு குலத் தலைவர்

## குற்றச்சாட்டு

அவருடைய ஆபிரிக்க தேசிய காங்கிரஸ மீது ஸுலு குல மக்களின் தலைவரான மங்கோசுது புதெலஸி பின்வரும் குற்றச்சாட்டைக் கடந்த 10 ஆம் திகதி தெரிவித்தார்-

கறுப்பர் விடுதலை இயக்கமான ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மீது சர்வதேச நாடுகள் நெருக்கடிகளைத் திணிக்க வேண்டும்-

தென் ஆபிரிக்க அரசின் சமரசப் பேச்சுவார்த்தையை ஏற்றுக் கொள்ளும்படி ஆபிரிக்க தேசிய காங்கிரஸைத் தூண்ட வேண்டும்-

இன ஒதுக்கலுக்கு எதிரான போராட்டத்தில் வன்முறைகளோ, வெளிநாட்டு தடைகளோ ஆகாது-

வெள்ளையர்களிடம் இருந்து கைமாறும் அதிகாரங்கள் அனைத்தையும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தனது கைக்குள் வாரிச் சுருட்டிக் கொள்ள முயல்கிறது-

பல கட்சி ஜனநாயக முறைமை ஒன்றைக் கட்டி எழுப்ப மேற்கு ஐரோப்பிய நாடுகள் உதவ வேண்டும்-

இது ஸுலு குல மக்களின் தலைவரின் உள்ளக் கிடக்கை-

## நிறம் ஒன்றானாலும்

## குலம் வேறு

நிறம் ஒன்றானாலும் தென் ஆபிரிக்க கறுப்பர் சமூகத்தவர்கள் மத்தியில் பல்வேறு குலங்கள், இனங்கள், வேறுபாடுகள் காணப்படுகின்றன-

ஸுலு, பஸுடோ, ஸோசா பொண்டோ இப்படி பலப்பல குல வித்தியாசங்கள் நிலவுகின்றன- இப்பிரிவுகள் எல்லாம் பண்டுஸ் என அழைக்கப்படுகின்றன- 1957 இல் இவற்றின் சனத்தொகை 94,69,000-

இயக்கத்திற்கும், இடதுசாரி ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கும் இடையிலான அரசியல் நெருக்கடியே இந்தியர்கள் எதிர்ப்பு கூலவரமாக வெடித்திருக்கிறது-

இன்கதா இயக்கத்தின் பத்திரிகையான இலங்கா (உதயம்) கடந்த 9 ஆம் திகதி ஆசிரியர் தலையங்கம் ஒன்றைத் தீட்டியிருந்தது-

தத்தால் இந்திய காங்கிரஸ் அங்கம் வகிக்கும் ஐக்கிய ஜனநாயக முன்னணி இன்கதா சமூகத்தவர்கள் மீதான எதிர்ப்பு உணர்வுகளை கிளறி வருகிறது என்று அது குற்றம் சாட்டியிருந்தது-

## புற்றீசல் போல்

## அனாமதேய பிரசுரங்கள்

இந்தியர்களுக்கு எதிரான அனாமதேய துண்டுப் பிரசுரங்களும் புற்றீசல் போல விநியோகிக்கப்பட்டிருந்தன-

இந்தியர்களுக்கு எதிராக ஸுலு மக்களை தூண்டி விடும் வகையில் அவற்றின் வாசகங்கள் அமைந்திருந்தன-

எமது பிள்ளைகள் படிப்பறிவு அற்றவர்களாக இருப்பதையே இந்தியர்கள் விரும்புகிறார்கள்

எமது தொழில்களை எல்லாம் தமது பிள்ளைகளே எடுத்துக் கொள்ள வேண்டும் என இந்தியர்கள் விரும்புகிறார்கள்-

நாம் தொழில்களை இழந்து விடும் வகையில் வேலை நிறுத்தங்களை நடத்துவதற்கு வாய்ப்பாக இந்தியர்கள் தொழில்சங்கங்களுக்கு லஞ்சம் கொடுக்கிறார்கள்-

அந்தத் துண்டுப் பிரசுரங்களில் இப்படி இனவாதம் கக்கப்பட்டிருக்கிறது.

நிறபேத அடிப்படையில் வெள்ளையர்களின் இன ஒதுக்கல் ஒரு புறம். கறுப்பர்கள் மத்தியில் குல பேதம், இன பேதம் மறு புறம். இருண்ட கண்டத்தின் விடிவில் குறுக்கே கருமேகங்களாக படருகின்றன.

இவை சிந்தின வீட்டிலே சேராது. மங்கின வீட்டிலே வாராது என்பதற்கான அறிகுறிகளே என்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள்.

கட்சியான தேசியக் கட்சி பதவிக்கு வந்தது. அது நிற அடிப்படையிலான இனங்கள் தனித்தனியாக வாழும் இனப் பிரிவினையை அதாவது இன ஒதுக்கலை வலியுறுத்தி வந்தது.

17ஆம் நூற்றாண்டு முதலே தென் ஆபிரிக்க சமூகங்கள் நிற அடிப்படையில் தனித்தனி தொகுதியாக சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள்.

## இன ஒதுக்கல்

## அறிமுகம்

இதற்கு நாஸிக் கட்சியான தேசிய கட்சி சட்ட அமுத்தங்களை சங்கிலித் தொடராக கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

வெள்ளையர்களின் தேசியக் கட்சியினால் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டங்கள் தனித்தனியான சமத்துவ சந்தர்ப்பத்தை வழங்குவதாக காட்டின. ஆயினும் அவை 79 சத வீத வெள்ளையர் அல்லாத மக்களை வெகுவாகப் பாதித்தன. பின்வரும் வகையில் அவை வெள்ளையர் அல்லாதோருக்கு பாதகமாக அமைந்தன—

* அரசியல் உரிமைகள்
* இடத்திற்கு இடம் செல்லும் சுதந்திரம்
* இருப்பிடம், சொத்துகள் ஆகியனவற்றை தெரிவு செய்யும் உரிமை
* விரும்பிய தொழிலை தெரிவு செய்யும் உரிமை
* விரும்பிய ஒருவரை திருமணம் செய்து கொள்ளும் உரிமை

சுருக்கமாகச் சொல்லப் போனால் இந்தச் சட்டங்கள் வெள்ளையர்களின் மேலாதிக்கத்தை வலுப்படுத்தின. ஏனையோரை தீண்டாதார் பட்டிக்குள் தள்ளின-

## நிற அடிப்படையில்

## நான்கு பிரிவினர்

இன ஒதுக்கல் கொள்கை தென் ஆபிரிக்க மக்களை நான்கு பிரிவுகளாக வகுத்து தனிமைப்படுத்தியது. அவை வருமாறு—

ஒன்று— வெள்ளையர் சமூகத்தவர்கள்.

ஆதிக்க உரிமை வழங்கப்பட்டது.

சனத்தொகையில் எஞ்சிய நான்கில் மூன்று பங்கு ஏனைய மக்களுக்கு எஞ்சிய அற்ப சொற்ப நிலங்கள் கிடைத்தன.

வெள்ளையர்களுக்கு என்று பிரிக்கப்பட்ட பகுதிகளில் கறுப்பர் சமூகத்தவர்கள் காணி உரிமை கொண்டிருக்க முடியாது. தொழிலும் நடத்த முடியாது.

சினிமா, பூங்கா, நூலகம் நீச்சல் தடாகம், கழிவறைக் கூடங்கள் அத்தனையிலும் இன ஒதுக்கல்.

## உலக நாடுக்ள்

## பொருளாதார தடை

இன ஒதுக்கலுக்கு எதிராக உலக நாடுகள் விதித்த பொருளாதார தடைகள், மேற்கொண்ட புறக்கணிப்பு நடவடிக்கைகள், வீசி எறிந்த கண்டனக் கணைகள் இவற்றை எல்லாம் தாக்குப்பிடிக்க தென் ஆபிரிக்க வெள்ளையர் சிறுபான்மை அரசினால் முடியவில்லை.

அதற்கு மேலாக கறுப்பர் சமூகத்தவர்களின் விடுதலை வேட்கையும் போராட்டங்களும் உக்கிரமடைய ஆரம்பித்து விட்டன.

தென் ஆபிரிக்க அரசு ஆட்டம் கண்டது. புரட்சி வெடித்த விவகாரமே தலைகீழாகி விடலாம் என அஞ்சியது. முடிவு ஒன்றுக்கு வந்தது.

சுமார் 28 வருட காலம் வெஞ்சிறையில் அடைத்து வைக்கப்பட்ட கறுப்பர் மிதவாத தேசியத் தலைவர் மண்டேலாவை கடந்த 11ஆம் திகதி விடுதலை செய்தது. சமரச பேச்சுவார்த்தைகள் மூலம் சீர்திருத்தங்களை மேற்கொள்ளலாம் என்று அழைப்பும் விடுத்தது.

## வெள்ளையர் அரசுக்கு

## ஏன் இந்த அவசரம்?

வெள்ளையர் சிறுபான்மை அரசுக்கு ஏன் இந்த அவசரம்? அதற்கு தென் ஆபிரிக்க ஜனாதிபதி எப் டபிள்யூ கிளார்க் விளக்

ரொடீசியாவில் தவறு நிகழ்ந்து விட்டது ஆக்கபூர்வமான சமரசப் பேச்சுவார்த்தைகளுக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்தத் தவறி விட்டார்கள்- ரொடீசிய அரசு நீண்ட காலம் காத்துக் கிடந்து விட்டது-

அந்தத் தவறை மீண்டும் விட்டுவிடக் கூடாது என்று நாம் முடிவு செய்திருக்கிறோம்-

## தன் பாதையில்

## சட்டம் செல்லும்

ஆயினும் அரசியல் குற்றவாளிகளுக்கு எதிராக நாம் வழக்குகளை தொடருவோம்- சட்டம் தன் பாதையில் செல்லும்-

இப்படி அவர் தெரிவித்திருக்கிறார்-

இது எதனை உணர்த்துகிறது தென் ஆபிரிக்காவில் இன ஒதுக்கல் தொடரும் என்பதை உணர்த்துகிறது-

மண்டேலாவுக்கு விடுதலை கிடைத்திருக்கிறது- இது போராட்ட வேகத்தை தணிக்க உதவும் என்பதை உணர்த்துகிறது-

இன ஒதுக்கலின் கீழ் கறுப்பர் சமூகத்தவர்கள் அத்தனை பேருக்கும்மே தென் ஆபிரிக்கா ஒரு சிறைக்கூடம்தான் என்பதை உணர்த்துகிறது-

அரசியலை அலசுபவர்கள் இப்படிக் கூறுகிறார்கள்-

நிலைமை இப்படி இருக்க கறுப்பர் சமூகத்தவர்கள் மத்தியில் குலபேதமும், இன பேதமும் தலைதூக்கியிருப்பதை விடுதலையில் விழுந்த விரிசலாகவே கருத வேண்டி இருக்கிறது-

கறுப்பர் சமூகத்தவர்களின் போராட்டங்கள் வெண்ணெய் திரண்டு வரும் போது தாழி உடைந்த கதையாகி விடக் கூடாது-

சமாதானத்திற்கும் இனங்கள் மத்தியிலான இசைவான வாழ்வுக்கும் இனபாகுபாடற்ற ஜனநாயக தென் ஆபிரிக்காவே ஒரே வழி- மண்டேலாவின் இந்த விடுதலை முழக்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதே இருண்ட கண்டத்தின் விடிவுக்கு மார்க்கமாகும் என்பதை சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது-

(ண)

# தேவ பயம் எம்மில் காணப்படட்டும்

கிருபா அரசரெத்தினம்

மனிதர்கள் எவ்வளவுதான் பெரியவர்களாக இருந்தாலும பல காரண காரியங்கள் வாயிலாக ஏதோ ஒரு பயம் உள்ளத்திலே உள்ளவர்களாகக் காணப்படுகின்றார்கள்–

பெரும்பாலானோர் பல வேளைகளில் தமக்கு உள்ள எதிரிகளால் தம்மைச் சூழ உள்ள மக்களால் பகைக்கப்படும் போது உள்ளத்திலே அவர்களை அறியாமலே ஒருவித பயம் ஏற்படுகிறது–

நான் செய்கின்ற நல்ல காரியங்களுக்கு இவர்கள் தடையாய் இருக்கிறார்களே– எனது முன்னேற்றத்தை தடை செய்து விடுவார்களோ– எனக்கு கிடைக்கவிருக்கின்ற உத்தியோகத்தை யாராவது செல்வாக்கு உள்ளவர்கள் புகுந்து கிடைக்காமல் செய்து விடுவார்களோ–

நான் நேசிக்கிறவர்கள் என்னைக் கைவிட்டு விடுவார்களோ– நோயுற்ற இருக்கிற என்னை அன்பானவர்கள் விட்டுப் பிரிந்து போய் விடுவார்களோ–

ஏன் என்னுடைய பகைவர்கள் என் மீது உள்ள கோபத்தினால் என் உயிரைக் கூடப் பறித்துவிடுவார்களோ– என்றெல்லாம் பயம் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்–

ஆனாலும் இன்று சிலர் தங்கள் உயிருக்குக் கூட பயப்படாதிருக்கிற நிலையைக் காண்கிறோம்–

இவ் உலகிலே பயந்து வாழ்கின்ற கிறிஸ்தவ மக்களைப் பார்த்து திருமறை கூறுகிறது பயப்படாதிருங்கள்– ஏன் எனில் எமது ஆண்டவர் உலகத்தை ஜெயித்தவர்–

"பயப்படாதிருங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன்" ஆம் எவ்வளவு ஆறுதலான வார்த்தை இன்னும் நாம் பார்ப்போமானால் நாளாகமம 20–15 நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்துக்குப் பயப்படாமலும் கலங்காமலும இருங்கள்–

யோசுவா 1–9 நான் உனக்குக் கட்டளை இடவில்லையா பலங் கொண்டு திட மனதாயிரு திகையாதே கலங்காதே நீ போகும் இடமெல்லாம நான் உன்னுடன் கூட இருப்பேன்–

எமக்கு விரோதமாக எமக்கு வேலை செய்கின்ற இடங்களிலே இருப்பவர்கள் தீங்கு செய்ய முயற்சிக்கின்ற வேளைகளிலே நாம் செய்கின்ற நல்ல செயல்களுக்குத் தேவையற்ற அர்த்தம் கற்பிக்கின்ற வேளைகளிலே எம்மை ஏதாவது ஆபத்தில் மாட்டி விட்டு வேடிக்கை பார்ப்பதற்காகவே இருக்கின்ற கூட்டங்களின் செயற்பாடுகளினால் என்ன செய்யலாம்?

எவ்வாறு இவற்றை மேற்கொள்வதற்கு யாரின் உதவியை நாடலாம்? எனத் திகைத்து நிற்கின்ற வேளையிலே –

"நீ பயப்படாதே நான் உன்னுடனே இருக்கிறேன்– திகையாதே நான் உன் தேவன்– நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்– என் நீதியின் வலக்கரத்தினால் உன்னைத் தாங்குவேன்–

இதோ உன்னிலே எரிச்சலாய் இருக்கின்ற யாவரும வெட்கி இலட்சையடைவார்கள்– உன்னுடன் வழக்காடுகின்றவர்கள் நாசமாகி ஒன்றுமில்லாமல் போவார்கள்–

உன்னுடன் போராடுகிறவர்களைத் தேடியும் காணாதிருப்பாய்– திகிலுக்குத் தூரமாவாய் உன்னுடன் யுத்தம் பண்ணுகிற மனுஷர் ஒன்றுமில்லாமல் போவார்கள்–

உன் தேவனாகிய கர்த்தராக இருக்கிற நான் உன் வலது கையைப் பிடித்துப் பயப்படாதே– என்று சொல்கிறேன். கொடுமைக்குத் தூரமாவாய் பயமில்லாதிருப்பாய் திகில் உன்னை அணுகுவதில்லை–

உனக்கு விரோதமாக எழும்பும் எந்த ஆயுதமும வாய்க்காத போம்– உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும எந்த நாவையும் குற்றப்படுத்துவாய் ஏசாயா 41–10 – 54–14–

அன்பானவர்களே தாவீது! அரசனாக முன்பும் பின்பும அவருக்கு அவரது விரோதிகளால் எத்தனையோ விதமான இடையூறுகள் ஏற்பட்டன– அவரது உயிரைக் கூட எடுத்துப் போடுவதற்கு சவுல் அரசன் முயற்சி செய்து கொண்டிருந்த போதிலும் தாவீது கூறுகின்றார்

சங்கீதம் 56–2–8 தேவனை நம்பி இருக்கிறேன்– நான் பயப்படேன்– மாம்சமானவன் எனக்கு என்ன செய்வான்– நான் பயப்படுகின்ற நாளில் உம்மை நம்புவேன்–

சங்கீதம 27–1 கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர் யாருக்கு அஞ்சுவேன்– என் சத்துருக்களும் என் பகைவருமாகிய பொல்லாதவர்கள் என் மாம்சத்தைப் பட்சிக்க நெருங்குகையில் அவர்களே இடறி விழுவார்கள்–

உலக காரியங்களுக்கும் உலகத்தில் உள்ளவர்களினால் ஏற்படும் பயத்துக்கும் நீங்கள் அஞ்ச வேண்டாம– மட்டுமல்ல உங்கள் உயிரைக் கூட பறித்து எடுக்க கூடியவர்களுக்கும பயப்பட வேண்டாம்– மாறாக உங்கள் உடலையும் உங்கள் ஆத்துமாவையும அழிக்க வல்லமை நிறைந்தவராக இருக்கின்ற ஆண்டவருக்கே பயப்படுங்கள்– மத்தேயு 10–28–

ஆத்துமாவைக் கொல்ல வல்லவராய் இராமல் சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட

## கிறிஸ்தவ நற்பிரசாதம்

வேண்டாம்– ஆத்துமாவையும சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்–

எமது உடல் அழிந்து போகக் கூடியது– எமது ஆத்துமாவோ வாழக்கூடியது– எனவே வாழக் கூடிய இவ் ஆத்துமாவை நித்திய காலம வாழக்கூடியதாய் நாம மாற்ற வேண்டுமானால் கிறிஸ்துவின் கிருபையின் மகத்துவத்தினால் எமக்கு கிடைத்த இரட்சிப்பை எமக்குச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும்–

அப்படி எமக்கு சொந்தமாக்குவதற்கு நாம் இறைவனுக்குப் பயந்து வாழ வேண்டியவர்களாகின்றோம–

தெய்வ பயம் எமமிடம காணப்படுகின்ற போது எமது ஒவ்வொருவரின் வாழ்க்கையும ஆசீர்வதிக்கப்பட்டதாக இருக்கும் என வேதம கூறுகிறது–

சங்கீதம 115–13 கர்த்தருக்குப் பயப்படுகின்ற சிறியோரையும் பெரியோரையும ஆசீர்வதிப்பார்– மட்டுமல்ல கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னும பல காரியங்களையும் பெற்றுத் தருகிறது–

நீதிமொழிகள் 15–33 கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தை போதிக்கும– நீதிமொழிகள் 16–6 கர்த்தருக்குப் பயப்படுவதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள்–

அது மாத்திரமல்ல ஆபத்துக்கள் எம்மை அணுகுகின்ற போது அவற்றில் இருந்து காப்பாற்றுகின்றார். கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்–

பஞ்ச காலத்தில் அவர்களை உயிரோடே காக்கவும கர்த்தருடைய கண் அவர்கள் மேல் நோக்கமாய் இருக்கிறது– சங்கீதம 34–7 சங்கீதம 33–19–

அவ்விதமாக பிறர் எமக்கு விரோதமாகச் செய்யும எக்காரியமும எம்மைப் பாதிக்காது நீதிமொழிகள் 19–23 "கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவனுக்கு ஏதுவானது– அதை அடைந்தவன் திருப்தி அடைந்து நிலைத்திருப்பான்– தீமை அவனை அணுகாது"–

இன்னுமாகத் தேவன் எம் மீது இரக்கம கொண்டு தமது கிருபையை எமக்கு அளித்து எல்லா விதமான மகிமையினாலும் எல்லாவித ஐஸ்வரியத்தினாலும நிரப்பி எமது வாழ்வைப் பரிசுத்தம் பண்ணி பாவத்திலிருந்தும அதனால் உண்டான நித்திய மரணத்தில் நின்றும எம்மை இரட்சிக்கிறார்–

எங்கு பார்த்தாலும பயங்கரமான சம்பவங்கள் நிகழ்கின்றன– ஏன் எம்மைச் சூழவும எத்தனையோ காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன–

இந்த நிலையில் எமது தனிப்பட்ட வாழ்க்கையிலும பயங்கரமான சமபவங்கள் நடந்து முடிந்திருக்கலாம– நடந்து கொண்டிருக்கலாம்– இன்னும எமக்கு வேதனையைத் தருவதற்கு பலர் முயற்சிக்கலாம்–

இந்த நிலையிலே நாம என்ன செய்யலாம என்று சிந்திப்பதை விட்டு விட்டு நான் கர்த்தரைத் தேடுவேன்– என்னுடைய எல்லாப் பயத்துக்கும என்னை நீங்கலாக்கி விடுவார்–

எது வந்தாலும் நான் அஞ்சேன்– நான் அஞ்சேன் என் இயேசு என்னோடிருப்பதால் என்று கூறிச் செயற்படுவோம்–

# நட்பை வளர்ப்போம்








விலை
10 கொண்டது — ரூ 17/-
20 கொண்டது — ரூ 34/-

# பிறிஸ்டல்
## சுவையைப் பகிர்ந்துகொள்வோம்

அரசாங்க எச்சரிக்கை:
புகைப்பிடிப்பதால் உங்கள் சுவாசப்பைகளுக்குத் தீங்கு விளையக்கூடும்

# அடிமை இனத்திற்கு நல்லொளி காட்டும் கலங்கரை விளக்கம்

## 27 ஆண்டுகள் சிறையில் வாடினாலும் விடுதலைஉணர்வுகுன்றாத மண்டேலா

உலகின் புகழ்பெற்ற கைதியான நெல்சன் மண்டேலாவின் விடுதலைச் செய்தி வெளியான போது அவரது பாரியார் வினி மண்டேலாவின் வீட்டுக்கு அதி மேற்றிராணியார் டுட்டு விஜயம செய்திருந்தார்— தமது தேசியத் தலைவர் 27 ஆண்டு கால சிறை வாசத்தின் பின்னர் விடுதலையாகி வெளியே வருவதை அறிந்து வயதான அந்த மேற்றிராணியாரால் மகிழ்ச்சியைக் கட்டுப் படுத்த முடியாது, அல்லேலூயா அல்லேலூயா! என்று ஆனந்தக் கூச்சலிட்டார்—


இப்படி ஆனந்தக் கூச்சலிட்டவர் மேற்றிராணியார் டுட்டு மட்டுமல்ல, தென் ஆபிரிக்கர்கள் மட்டுமல்ல, உலகெங்கும இக் கூச்சல் எதிரொலித்தது— தமக்கு மறுக்கப்பட்ட நீதி கடைசியில் வழங்கப்பட்டதாகவே ஒவ்வொரு தனிப்பட்ட நபர்களும மண்டேலாவின் விடுதலையைக் கருதினார்கள்— தனிமைச் சிறையில் இருந்தபடியே உலக மக்களின் உள்ளத்தை இவர் வசீகரித் [illegible]லேயே கொடுங்கோன் [illegible] பேர்போன தென் ஆபிரிக்க[illegible] இறுதியில் அடிபணிய நேர்ந்தது—

தேசிய காங்கிரஸ் உறுப்பினர்களும ஜோஹன்னர்ஸ்பேர்க்கின் வடக்கு பிரதேச ரீவோனியா நகர பண்ணையொன்றில் ஒளிந்திருந்தபோது தென் ஆபிரிக்கப் பொலீஸாரினால் சுற்றி வளைக்கப்பட்டனர் உண்மையில் அவர் அன்று காட்டிக் கொடுக்கப்பட்டார்— இல்லாவிட்டால் பொலீஸாரின் வலையில் இவர் வீழ்ந்திருக்க மாட்டார்—

ரீவோனியா நீதிமன்றத்தில் மண்டேலாவும ஏனைய எழுவரும நிறுத்தப்பட்டனர்— எட்டு மாதங்களாக அவர் மீது விசாரணை நடைபெற்றது— மண்டேலா மற்றும் ஏனைய எழுவர் பேரில் மரண தண்டனை விதிக்கப்படலாம எனவும எதிர்பார்க்கப்பட்டது—

இவர் மீது ஏன் மரண தண்டனை விதிக்கப்படவில்லை என்பதற்கு அச்சமயம மண்டேலா சார்பாக வாதாடிய சட்டத்தரணியான ஜோர்ஜ் பிஸோஸ் காரணம் தெரிவித்திருக்கிறார்—

"நான் எவற்றைக் கொள்கையாகக் கொண்டு அதன் வழி நடந்து வருகிறேனோ, அவற்றுக்காக [illegible] உயிரையும் [illegible] தயார் [illegible] நான் வெள்ளை ஆதிக்கத்தை மட்டுமல்ல கறுப்பர் ஆதிக்கத்துக்கு எதிராகவும போராடி வந்திருக்கிறேன்— தென் ஆபிரிக்காவின் எல்லா இன மக்களும சம வாய்ப்புகளுடனும சமாதானத்துடனும வாழ்வதற்கான ஜனநாயக ரீதியான சூழ்நிலையை உருவாக்குவதே என் இலட்சியம"



இப்படி நீதிமன்றத்தில் மண்டேலா தெரிவித்திருந்தார்— தன் கொள்கைகளின் நிமித்தம தான் உயிரை விடவும தயார் என ஒருவர் சற்றும ஒளிவுமறைவின்றி சொல்லும்போது அவரை எப்படி தூக்கிலிட முடியும?

நீதிமன்றத்தில் மண்டேலா நிகழ்த்திய உரை மிகவும் பிரபலமானது— நெல்சன் மண்டேலாவும அவரது ஏழு சகாக்களும 1964 ஆம் ஆண்டு ஜூன் 12 ஆம திகதி ஆயுள் தண்டனைக்கு அளாக்கப்பட்டனர்— அதன் பின்னர் இப்போதுதான் மண்டேலா வெளியுலகைக் கண்டிருக்கிறார்—

முதலில் நெல்சன் மண்டேலா ரொபன் தீவுச் சிறையில் வைக்கப்பட்டார்— அவர் தப்பிச் சென்றுவிடலாம் எனப் பயந்த அரசாங்கம அவரைத் தீவுச் சிறையில் வைத்தது— இங்கு சாதாரணக் கைதியாக நடத்தப்பட்ட மண்டேலா பன்னிரெண்டு ஆண்டுகளாகக் கல் உடைக்கவும செய்தார்—

12 ஆண்டுகளின் பின்னரே வேறு ஒரு சிறைக்கு மாற்றம கிடைத்தது— கேப்டவுன் பொல்ஸ்மூர் சிறையில்தான் இவர் சமீபகாலம வரையில் [illegible]



வீட்டுக்கு வந்த மண்டேலா பேரக் குழந்தையைத் தூக்கி விளையாடும் காட்சி!

[ம]



### மகத்தான மாமனிதர்

— ரீ. எல். ஜவ்பர்கான் —

இருபத்து ஏழாண்டு காலம தன்னை
இனத்திற்காய் அர்ப்பணித்த இந்துப் பாரின்,
பெருமகனே! மண்டேலா என்னும நல்ல
பெயருடைய; கறுப்புஇனப் பதியே உந்தன்,
பொறுமைநிறை செயலிந்த மண்ணுக் குள் ளே
போராட்டம செய்கின்ற வீரர்க்கெல்லாம —
அறிவுரைகள் செப்பிடுதே! உன்னைப் போல
ஆற்றலுடை ஆத் மாக்கள் எழுதலில்லை!

★

வெள்ளையரின் அடக்குமுறை தன்னைவிட்டு
வேண்டுமொரு விடுதலையே என்னுங்கோஷம,
எல்லையிலாப் பேரலையை எழுப்பி இந்த
இகத்திலெலா மாதரவை திரட்டு தற்கு —
பல்லாண்டாய் சிறைக்குள்ளே நீயிருந்து
பதறியதால் ஆதரவே குவியலாச்சு!
கல்லதுவும கரைந்துவிடு மாறு உந்தன்,
கடுசெயலே அமைந்ததனால் பதியேநீதான்!

★

சிறைக்குள்ளே இருந்திட்ட காலமெல்லாம
சிறிதளவும சுயநலத்தை எண்ணி டாமல்,
கறையுள்ள ஆத்மாக்கள் காயப்பட்டு
கரைகின்ற வரைக்குமநீ விடுதலை யை —
விருமபித்தான் கேட்டாயோ? வேண்டாமென்றாய்...
வீறு நடை போடுதுவுன் நாமமிங்கு!
நிறைவான கொள்கைக்காய் கறுப்பினத்தோர்
நின்தன்னையே தெய்வமெனக் கொள்ளல்
வேண்டும!

யற்ற விடுதலையாகவே இருக்க வேண்டும என்பதில் உறுதியாக இருந்தார் மண்டேலா—

நேர்மை மற்றும துணிச்சல் ஆகிய குணங்களுள் ஜோர்ஜ் வாஷிங்டன், ஆபிரகாம் லிங்கன் ஆகியோர் வரிசையில் இவரையும சேர்த்

ரிக்கா இறுதியில் அடிபணிய நேர்ந்தது—

நெல்சன் ரொலில்லா மண்டேலா 1918 ஆம ஆண்டு ஜூலை 18ஆம் திகதி தென் ஆபிரிக்காவின் கேப் மாநிலத்தின் கிழக்குப்புற நகரான டிரான்ஸ்கியில் மண் வீடொன்றில் பிறந்தார்— இவரது தந்தை சோசா இன மக்களின் தலைவர்—

நெல்சன் மண்டேலா தமது கல்வியை போர்ட் ஹாரே என்ற கறுப்பர்களுக்கான கல்லூரியில் தொடர்ந்தார்— கலைத் துறையில் பட்டமும் பெற்றார்— பின்னர் ஜொஹன்னஸ்பேர்க் நகருக்குச் சென்ற மண்டேலா சட்டப் படிப்பைத் தொடர்ந்தார்— தங்கச் சுரங்கத்தில் காவல் அதிகாரியாகவும் கடமையாற்றினார்— சிசிலு நகரில் தோட்ட முகவராகவும மண்டேலா கடமையாற்றி வந்தார்—

அச் சமயமதான் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸுடன் இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது— தீவிரமாக இந்த இயக்கத்தில் ஈடுபட ஆரம்பித்தார்— ஆபிரிக்க தேசிய காங்கிரசின் இராணுவப் பிரிவின் பிதாமகமே மண்டேலா தான்— 1960 ஆம ஆண்டளவில் இராணுவப் பிரிவை உருவாக்கிய மண்டேலா தென் ஆபிரிக்க வெள்ளை அரசுக்கு எதிராக கெரில்லா யுத்தத்தை நடத்த ஆரம்பித்தார்

நெல்சன் மண்டேலா முன்பொரு தடவையும தென் ஆபிரிக்க பொலீஸாரிடம சிக்கியவர் தான்— 1956 ஆம் ஆண்டு இவரும மேலும் இருநூறு தீவிரவாத உணர்வு கொண்ட கறுப்பினத்தவர்களும பொலீஸாரினால் சுற்றி வளைக்கப்பட்டனர்— அரசாங்கத்துக்கு எதிராக சதி செய்ததாக அவர்கள் பேரில் குற்றம சாட்டப்பட்டு வழக்கும தொடரப்பட்டது— நான்கு ஆண்டுகளாக வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது திடீரென மண்டேலா தலைமறைவானார்— மறைந்திருந்த தன் நடவடிக்கைகளை மண்டேலா தொடர்ந்து நடத்தி வந்தார்—

அனால் 1962 ஆம ஆண்டு மண்டேலாவும மேலும் ஏழு

இவர் சமபகாலம வரையில் வைக்கப்பட்டிருந்தார்— உலக மக்களின் கவனம மண்டேலாவின் மீது மொய்க்கத் தொடங்கவே முன்னாள் சிறைச்சாலை அதிகாரியின் பங்களாவில் தனிமைச் சிறையில் வைக்கப்பட்டார் மண்டேலா காச நோயால் பீடிக்கப்பட்டதைத் தொடர்ந்து

இருந்தார் மண்டேலா—

தனது கொள்கைகளில் தளராத உறுதி கொண்டிருந்ததாலேயே மண்டேலா உலகப் புகழ் பெற்றார்— சிறையில் இருக்கும அவரை சமாதான பரிசுகளும, கௌரவப் பட்டங்களும தேடி வந்தன— 1984 ஆம ஆண்டு "பிறீ நெல்சன் மண்டேலா"

**— அருள் சத்தியநாதன் —**

அவருக்கான வசதிகள் அதிகரிக்கப்பட்டதோடு கட்டுப்பாடுகளும தளர்த்தப்பட்டன—

இருபத்தைந்து ஆண்டுகளாக மாதத்துக்கு இரு தடவைகள் என்ற ரீதியாகவே உறவினர்கள் இவரைச் சந்தித்து வந்தனர்— ஒரு தடவையில் நாற்பது நிமிடங்கள் மட்டுமே மண்டேலாவுடன் உரையாட முடியும— இவருக்கு ஒரு வானொலியும தொலைக்காட்சியும வழங்கப்பட்டிருந்தன— ஆனால் உள்ளூர் நிகழ்ச்சிகள் மட்டுமே இவர் காணவும கேட்கவும முடியும—

அனால் மண்டேலாவின் மன உறுதி இதனால் தளர்ந்துவிடவில்லை— சிறை வாழ்க்கைக்கு தன்னை அவர் தகுதியாக்கிக் கொண்டார்— தபால் மூலம சட்டம பயின்ற அவர் 1988 ஆம ஆண்டு பாரிஸ்டர் பரீட்சையிலும தேறினார்— தொடர்ந்து புத்தகங்களையும பத்திரிகைகளையும படித்து வந்தார். மண்டேலா

மண்டேலா தன் சிறைவாசத்தை வீணாகிப் போன காலம என வர்ணிக்கிறார்— ஆனால் அவர் மட்டும நினைத்திருந்தால் எப்போதோ விடுதலையாகி வந்திருக்க முடியும தான் நாடு கடத்தப்படுவதை அவர் விரும்பவில்லை— நிபந்தனைகளின் பேரில் தான் விடுதலையாவதையும விரும்பவில்லை—

ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தன் கெரில்லா தந்திரோபாயங்களைக் கைவிடுமானால் அந்த உறுதியின் பேரில் அவரை விடுதலை செய்யவும தென் ஆபிரிக்க வெள்ளை அரசு முன்வந்தது— அனால் தான் விடுதலை செய்யப்படுவதனால் அது நிபந்தனை

(நெல்சன் மண்டேலாவை விடுதலை செய்) என்ற பொப் பாடல் ஒன்று வெளியிடப்பட்டு உலகெங்கும பெரும வரவேற்பைப் பெற்றது.

மண்டேலா ஒரு தீவிரவாதியாகத் தான் கைது செய்யப்பட்டார். ஆனால் நீண்ட கால தனிமைச் சிறைச்சாலை வாழ்வு அவரை பண்பட்ட மனிதராகவும, முதிர்ந்த அரசியல்வாதியாகவும மாற்றியது.

தென் ஆபிரிக்க இனவெறி அரசுக்கு எதிராக கெரில்லா யுத்தம தொடர்ந்து நடைபெற்று வரத்தான் செய்யும என்பதில் உறுதியாக இருந்து வந்த மண்டேலா, விடுதலையாகி வெளியே வந்ததும அதையே தான் மீண்டும வலியுறுத்தியிருக்கிறார்.

ஆனாலும இவர் வன்முறையை விரும்புபவர் அல்ல, கெரில்லா தாக்குதல்கள், இராணுவ நிலைகளின் மீது மட்டுமே நடத்தப்பட வேண்டும். சிவிலியன்கள் இத்தாக்குதல்களினால் பாதிக்கப்படக்கூடாது என்பதில் எப்போதும இவர் அக்கறைகாட்டி வந்துள்ளார்.

மேலும கெரில்லா வழிமுறைகளையே முழு ஆயுதமாகப் பயன்படுத்துவதை இவர் விரும்பவில்லை. இதன் காரணமாக வன்முறை நாட்டம கொண்ட தீவிரவாதிகளுடனான உறவை பொதுவாகவே இவர் தவிர்த்து வந்துள்ளார்.

மண்டேலா ஆயுதப்போராட்டத்தில் நமபிக்கை கொண்டவராக இருந்தாலும கூட, அவரது விடுதலை வேட்கை, மன உறுதி,

வரிசையில் இவரையும சேர்த்துள்ளன. விடுதலை வீரர்களான மகாத்மா காந்தி மற்றும மாட்டின் லூதர்கிங் ஆகியோரின் பண்புகளும கூட மண்டேலாவிடம காணப்படுகின்றன.

இவர் நீண்ட காலமாக சிறை வைக்கப்பட்டிருந்தும கூட நிற வெறி வெள்ளையர் அரசாங்கத்துடன் தாழ்ப்புணர்ச்சி கொண்டிருக்கவில்லை. இவரை விடுவிக்க தொடர்ந்து மறுப்பு தெரிவித்து வந்த போத்தா பதவி விலகுவதற்கு இரண்டு வாரங்கள் இருக்கையில் மண்டேலா ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று அவருடன் 45 நிமிடங்கள் உரையாடி விட்டு சிறைக்குத் திருமபினார்,

அரசாங்கம இவரை பேச்சுவார்த்தைக்கு அழைத்த போதெல்லாம ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தடை செய்யப்பட்டிருக்கும போது, அரசாங்கக் கைதியாக நான் வைக்கப்பட்டிருக்கும போது எப்படி பேச்சுவார்த்தைக்கு எம்மால் சமமதிக்க முடியும என்பதையே இவர் பதிலாகச் சொல்லி வந்தார்.

தென் ஆபிரிக்க வெள்ளை இனத்தவர்கள் பெரும்பான்மை சுதேச ஆபிரிக்க மக்களை அடக்கி ஒடுக்கி வைத்திருக்கிறார்கள். இந்நிலையில் கறுப்பின மக்களுக்கு வெள்ளையர் மீது வெறுப்புணர்வு தோன்றுவது இயல்பே. ஆனால் மண்டேலா இவ்வாறான உணர்வை வெளிப்படுத்தவில்லை.

வெள்ளையர்களும இந்நாட்டு மக்கள் தான். இதுதான் அவர்களது தாய் நாடு, வெள்ளையர்களும எம்முடன் ஒற்றுமையாக வாழ வேண்டும. அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும. என்பதே எமது விருப்பம என்று நேசக்கரம நீட்டியிருக்கிறார் மண்டேலா.

எதிர்காலத்தில் தென் ஆபிரிக்காவில் ஏற்படவுள்ள வெள்ளையர் மீதான வெறுப்புணர்ச்சியின் வேகத்தைக் குறைத்து உள்நாட்டு யுத்த அபாயத்தைத் தவிர்க்கக்

(20ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைக் காற்றைச் சுவாசிக்க சிறையில் இருந்து வெளியில் வந்த வீரத் தலைவன் நெல்சன் மண்டேலாவுக்கு மனைவி வழங்கும் அன்பு முத்தம! [ம]

# அருள் வேண்டும் பக்தர்களுக்கு சிவராத்திரி ஒரு இன்ப இரவே

## ஜோதிலிங்கமாகச் சிவன் தோன்றி அனுக்கிரகஞ் செய்து அருள்புரிவார்

— யோ. காவேரி —



சிவபெருமானுக்குரிய விரதங்களுள் சிறப்பு வாய்ந்தது. சிவராத்திரி விரதம், சிவராத்திரி என்றால் சிவன் இராத்திரி. வடமொழியில் சிவம என்றால் இன்பம எனப் பொருள்படும. இராத்திரி என்பது இரவு. எனவே இன்ப இரவு எனப்படும.

முழு முதற்கடவுளாகிய சிவபெருமானைச் "சிவம" எனச் சமய குரவர்கள் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும.

"யாமே பரப்பிரமம யாமே பரப்பிரமம" எனச் செருக்குற்று வாதிட்டுப் போராடிய மாயையினாற் கட்டுண்ட பிரமனுக்கும திருமாலுக்கும பிரமமன் திருமால், சிவன், ஆகிய மும் மூர்த்திகளும ஒன்று சேர்ந்து காணத்தகும வடிவினதாய் –

இறைவன் ஒருவனே உளன் என்று உண்மையை உணர்த்துவதாய் சிவபெருமான் பெரியதொரு அக்கினிப் பிழமபாக இருவருக்கும மத்தியிலே தோன்றி யார் அந்த ஒளிப் பிழமபின் அடிமுடியைக் காண்கின்றனரோ அவரே பரப்பிரமமாவார். எனக் கூறினார்.

முடியைக் காண அன்ன வடிவமாகச் சென்ற பிரமம தேவரும், அடியைக் காணப் பன்றி வடிவமாகச் சென்ற திருமாலும தத்தம முயற்சியில் தோல்வியே கண்டனர்.

அச்சோதிப் பிளமபு லிங்கோற்பவ வடிவம எடுத்த தினமாகிய மாசிமாதம கிருஷ்ண சதுர்த்தசி நள்ளிரவே மகா சிவராத்திரி தினமாகும.

சிவவழிபாட்டிலே சிவராத்திரி சிறப்பானதோர் இடத்தைப் பெறுகின்றது, சைவ மக்களுக்கு சிவராத்திரி ஒப்பற்றதோர் புண்ணிய தினமாகும.

சித்தாந்த நோக்கில் சிவராத்திரி ஆன்மாக்கள் அனைத்தும சிவனை அண்டியிருக்கும புனித நாளாகவே கருதப்படுகின்றது,

நாளெல்லாம அலைபாயும எமது மனம அன்றைய தினம உலகளாவிய விடயங்களிலிருந்து விடுபட வேண்டும.

நாள் முழுவதும சிவனோடு ஐக்கியப்பட வேண்டும. மனதை ஒரு நிலைப்படுத்தி "சிவசிவ" நாமமே எமமனதில் ஒலிக்க வேண்டும. என்பதையே இது குறித்து நிற்கிறது.

இறைவன் லிங்க வடிவில் இருப்பது உருவும, அருவும ஆன சொல்லுக்கு குறி என்று தான் பொருள்.

சிவராத்திரியன்று ஜோதி லிங்கமாக சிவன் தோன்றுகிறார். ஒவ்வொரு மாதத்திலும கிருஷ்ணபட்ச சதுர்த்தசி இரவில் அனுஷ்டிக்கும சிவ வழிபாட்டு விரதம மாத சிவராத்திரியாகும

மகா சிவராத்திரி வரலாறாகப் பல இருப்பினும கந்த புராண அடிமுடி தேடிய வரலாறே மிகத் தெளிவாக இவ் அதி முக்கிய வழிபாட்டுத் தினத்தை இயமபுகிறது.

தக்கன் பிரமாவின் மக்களில் ஒருவன். இவன் சூரபன்மனைப் போன்று சிவபெருமானின் அருளால் உலகங்கள் எல்லாவற்றையும ஆளுங் காலத்தில் பெருங் கொடுமைகளைச் செய்தான்.

இது மாத்திரமல்லாமல் தன் மகளாகிய உமையமமையாரை இகழ்ந்தான். எல்லாவற்றிற்கும மேலாகச் சிவபெருமானுக்கே கொடுக்க வேண்டிய பாகத்தைக் கொடாது தேவர்களையும ஏமாற்றி கொடிய யாகத்தைச் செய்தான்,

கருணைக் கடலாகிய சிவபெருமான் சூரபன்மனுக்கும அனுக்கிரகஞ் செய்தார். தக்கனுக்கும அனுக்கிரகஞ் செய்தார்.

துஷ்ட நிற்கிரக சிஷ்ட பரிபாலன மூர்த்தியாகிய பெருமான் துஷ்டரைத் தண்டிக்க வேண்டி சூரபன்மனை முருகக் கடவுளால் தண்டித்தது போன்று தக்கனையும வீரபத்திரக் கடவுளால் தண்டித்தார்.

தக்கன் செய்த யாகத்தை செவ்வனே சொல்லப்பட்டுள்ளது.

இச்சங்காரத்தின்பின் தக்கனுடைய தந்தை பிரமமா தக்கனுக்குச் சொல்லியவற்றை அழகாகக் கந்தபுராணத்தில் பார்க்கிறோம.

உணர்வு பெற்றவனாகிய தக்கன் இப்போது தந்தையிடம சிவநிந்தனையின் பேற்றையும சிவவந்தனையின் பேற்றையும கேட்டுத் தெளிகிறான்.

இப்போதுதான் தக்கன் எப்படியாகத் தானும திருமாலும அகந்தையால் பெற்ற பெரும அனுபவத்தைச் சொல்கின்றார்.

சிவபரம பொருள் சோதிப் பிழமபாகத் தோன்றி பிரமமா, விஷ்ணுவை ஈடேற்றுகின்றார். இச்சோதி தோற்றிய நாளே சிவராத்திரியாகும.

சிவபெருமான் சோதியாய்த் தோற்ற அடியையும, முடியையும தேடிப் பிரமமா விஷ்ணு செல்கிறார்கள்.

பிரமமன் அன்னப்பட்சி வடிவெடுத்து முடியைத் தேடினார், காணவில்லை, அகந்தை நீங்கப் பெற்று சோதியினிடத்தே சரணடைகிறார்கள்.

அந்நேரத்தில் பெருமான் அவர்க்கு வேண்டிய அருள் புரிந்து சோதியானது பெரிய

பாடு செய்வோர் வேண்டிய சித்திகளைப் பெறுவர்,

இவ்விரதத்தை அனுஷ்டித்து சூரியன், சந்திரன், யமன் மன்மதன், ஆகியோரும அருள் பெற்றுள்ளனர் எனவும எமது புராணங்கள் கூறுகின்றன.

நாள் முழுவதும விரதம இருந்து இறைவனைத் தியானித்து காலையில் நீராடி விரதத்தினை முடித்துக் கொள்வதால் 12 கோடி லிங்கங்களை வணங்கி பெறும பயனையும, அருளையும ஒரே நாளில் பெறமுடியும என்பது பக்தர்களின் துணிப்பு.

சிவராத்திரி தினத்தில் நான்கு சாமத்திலும கண் விழித்து எமது மனதைக் கட்டுப்படுத்தி ஒரு நிலைப்படுத்தி சிவனோடு ஐக்கியப்படுத்தி தியானத்திலும, பூஜை வழிபாடுகளிலும ஈடுபட வேண்டும.

சிவராத்திரியன்று சிவலிங்கத்தைப் பூஜிப்பதால் ஏற்படும பயன் கோடானு கோடியாகும,

சிவராத்திரி என்று அறியாமலே அண்டவனைத் துதித்து ஞானம பெற்றவர்களும இருக்கிறார்கள்.

புலியின் பிடியில் இருந்து தப்பித்துக் கொள்ள வில்வம மரத்தில் ஏறிய வேடன் ஒருவன் தூக்கம வராமல் இருக்க நான்கு சாமங்களிலும வில்வம இலைகளைக் கீழே போட்டான்.

அவன் அவ்விதம வீசியது ஒரு லிங்கத்தின் மீது விழுந்தது, தூக்கம வராமல் இருப்பதற்காக அவ்விதம வில்வம இலை போட்டவனும ஆண்டவன் கிருபை பெற்றான் என்பது வரலாறு.

திருப்பாற் கடலைக் கடையும போது உண்டான விஷத்தை அருந்தி தேவர்களைக் காத்ததற்கு நன்றி செலுத்தும முகமாகவே பண்டு தொட்டு சிவராத்திரி தினம அனுஷ்டிக்கப்பட்டு வருவதாக மற்றொரு வரலாற்றில் கூறப்படுகிறது,

மகா சிவராத்திரியான புண்ணிய தினத்தில் இரவில் கண் விழித்த சிவனை நினைதது உருகி அவனிடம அடங்கி ஐக்கியப்படுவதை விட வேறு ஆனந்தமே இல்லை.

சிவராத்திரி நந்நாளில் பஞ்சாட்சர உபதேசம பெறுவதற்கும மிகச் சிறந்த நாளாகும. சிவராத்திரி விரதத்தை இயன்றளவு ஆசார நியமங்களுடன் அனுஷ்டிக்க வேண்டும.

24 ஆண்டுகள் தொடர்ந்து மகா சிவராத்திரி விரதம அனுஷ்டித்தால் 21 தலை முறையினர் முத்தி அடைவர் என சிவராத்திரி மகிமையை நூல்கள் வாயிலாகவும அறிந்த மகான்கள் கூறுவார்கள்.

சிவனின் அருளைப் பெற இதுவே சிறந்த வழியுமாகும.

எனவே சிவராத்திரி தினத்தில் நான்கு சாமமும நித்திரை ஒழிக்க இயலாவிடினும லிங்கோற்பவ காலம நீங்கும வரையுமாயினும நித்திரையொழித்து சிவதரிசனஞ் செது இஷ்ட சித்திகள் பெறுவோமாக.

(ம)

இறைவன் லிங்க வடிவில் இருப்பது உருவும, அருவும ஆன வன் என்பதை உணர்த்துகிறது,

லிஙகத்தின் தோற்றம முத லும முடிவும இல்லாத இறைவ னைக் குறிக்கிறது. லிஙகும என்ற

தண்டித்தாார்,

தக்கன் செய்த யாகத்தை அழித்து தக்கனுக்கு ஆட்டுக் கடா முகமும உண்டாகுமபடி செய்த ருளினார். இஃது கந்த புராணத் தில் யாக சஙகாரப் படலத்துள்

அவர்க்கு வேண்டிய அருள் புரிந்து சோதியானது பெரிய லிஙக வடிவாயிற்று.

இத்திவ்விய காலமே சிவராத் திரி காலமாகும. இக்காலத்தில் வேண்டிய விதிப்படி சிவவழி

# புண்ணிய மூட்டை

# மண்டேலாவை வாட்டி எடுத்த கொடுஞ் சிறை

## அவருடன் அங்கு வாடி வதங்கிய இந்தியர் அதன் பயங்கர தன்மையை கூறுகிறார்

நெல்சன் மண்டேலா அருமை யான மனிதர்- எந்த விடுதலை லட்சியத்துக்காக தன்னை ஈடுபடு த்தினாரோ அந்த வழியிலிரு ந்து அணுவும் அவர் பிசகவில்லை-

சிறையிலிருந்த ஒவ்வொரு வருக்கும் அவர் ஊக்க சக்தியா கத் திகழ்ந்தார்- என்றுமே சோப மடைந்தது கிடையாது- நிலை தடுமாறியது கிடையாது-

"எங்களை சோர்ந்து போகா மல் உற்சாகப்படுத்துவார் சிறை யிலிருந்த ஒவ்வொருவருக்கும் நெல்சன் மண்டேலா ஒரு கலங் கரை விளக்காக வழிகாட்டி னார்-

—இவ்வாறு தென்னாபிரிக்க இந்தியரான எம். டி நாயுடு குறிப்பிட்டிருக்கிறார் ஐந்து வருட காலம் நெல்சன் மண்டேலா வுடன் ரொபன் தீவில் சிறை வைக்கப்பட்டிருந்த பாரிஸ்டர் நாயுடு விடுதலையாகி வெளி வந்த போது முன்னர் கூறிய கரு த்து இது-

1946 இருந்து 1972 ஆம் ஆண்டுவரை பல தடவை கைது செய்யப்பட்டு சிறையில் அடைக் கப்பட்ட காலத்தில் ரொபன் சிறையில் தீவாந்தர தண்டனை பெற்றார். இந்த காலகட் டத்தில் தான் நெல்சன் மண் டேலாவோடு இருக்க நேர்ந்தது

நெல்சன் மண்டேலா மட்டு மல்ல தேசியப் போராட்ட வீரா களான வால்டர் சிசுலு கோவான் பெத்சி மாக் மகாராஜா ஆகி யோரும் சிறைவாசம் அனுபவித் தனர்-

விடுதலை செய்யப்பட்ட

— குளத்தூரான் —

போது எம். டி நாயுடு எந்த ஒரு அரசியல் நடவடிக்கையி லும் ஈடுபடாமலிருப்பதற்காக வீட்டுக் காவலில் வைக்கப்பட் டார் என்றாலும் நாட்டை விட் டுத் தப்பியோடி ரொபன் சிறை யில் கைதிகள் நடத்தப்படும் விதத்தை அம்பலப்படுத்தி னார்-

"எவ்வளவுக்குப் பலத்த பாது காப்பை ஏற்படுத்த முடியுமோ அவ்வளவுக்கு பந்தோபஸ்து செய்திருந்தனர்- கைதிகளிலே அரசியல் கைதிகளை நடத்தும் விதம் கூர்ண கடூரமாகவே இருந்தது- ஏனைய கைதிகள் பயஙகர குற்றச் செயல்களைச் செய்தவர்கள் கூடச் சிறையில் உள்ள நூலகத்திற்குச் சென்று எந்த நூலையும் வாசிக்க முடி யும்-

"என்றாலும் செய்திகளை அறிந்து கொள்வதற்கு இரகசிய முறைகளைக் கையாண்டோம்- ஒருவருக்கொருவர் காதோடு காதாகக் குசுகுசுத்துத் தெரிந்து கொள்வோம்- கைதி களிடையே அந்தரங்கமாக செய்தி பரிமாற்றம் நடை பெறும்-

சில சமயங்களில் சிறை அதி காரிகள் எங்களுக்கு வந்த செய்திகளைச் சொல்வார்கள்-

(20ஆம பக்கம பார்க்க)

# மனிதனின் நித்திய வாழ்வுக்கு உதவும்

பகவான் மனித ஜென்மத் தைக் கொடுத்திருக்கிறான்- இந்த ஜென்மத்தில் தான், ஒரு வன் பாவஙகளைப் போக்கிக் கொண்டு, புண்ணியத்தை தேடிக் கொள்ள முடியும-

மனிதனாகப் பிறந்தவர்களு க்கு பாவத்தைப் போக்கிக் கொள்ளவும, புண்ணியத்தை சேர்த்துக் கொள்ளவும பல வழி கள் உள்ளன-

தீர்த்த யாத்திரை, க்ஷேத்ர தரிசனம, போன்றவைகளால் பாவஙகள் விலகும என்பார் கள்-

அவ்வப் போது வசதிக்கு ஏற்ப சிறு சிறிதான தர்மஙகளைச் செய்து கொண்டே வந்து விட் டால் வாழ் நாளில் செய்த புண் ணியம குவியலாகி விடும-

ஒருவன் ஏதோ ஒரு இடத் தில் ஒரு நிலத்தை வாஙகிப் போடுகிறான்- நாலைந்து வரு டஙகள் கழித்து வீடு கட்டலாம என்று அஙகே போய் பார்க்கி றான்- அவனுடைய நிலத்தில் ஆள் உயரத்து ஒரு புற்று உண் டாகியிருக்கிறது- இது எப்படி ஏற்பட்டது?

கறையான் ஒவ்வொரு மண லாக, கொஞ்சம, கொஞ்சமாக இந்தப் புற்றைக் கட்டி விட்டது- இப்போது இதை இடிக்க வேண்டுமானால் நாலு ஆள், கடப்பாரை எல்லாம வேண் டும-

இடித்த மண்ணை அப்புறப் படுத்த ஒரு லாரியே வேண்டியி ருக்கும. கறையான் சுலபமாக இவ்வளவு பெரிய புற்றை கட்டி விட்டது ஆச்சரியமாக இல்லையா?

இதே போலத்தான் மனித னும வாழ் நாளில் சிறுசிறு தர் மஙகளைச் செய்து கொண்டே வந்தால், அதுவே ஒரு பெரிய புண்ணிய மூட்டையாகி விடும-

இந்தப் புண்ணிய மூட்டை தான் பரலோகத்திலும சரி, அடு த்த பிறவியிலும சரி, இவனுக்கு உதவும-

ஒருவன் வாழ்க்கையில் சுக மாக இருக்கிறான் என்றால், 'அவனுக்கென்ன சார்!' பூர்வ ஜென்ம புண்ணியம! இப்போ அனுபவிக்கிறான்- என்று சொல் கிறார்களல்லவா?'

அந்த பூர்வஜென்ம புண்ணி யம இப்போது அவனுக்கு உதவு கிறது- பாவம செய்திருந்தால்

— வைரம். ராஜகோபால் —

அதற்குண்டான வேதனையை அனுபவிக்கிறான்- இரண்டை யும நாமே தான் சமபாதித்துக் கொள்கிறோம.

ஆனால், புத்தியுள்ளவன் புண் ணியத்தைத் தேடிக் கொள்கி றான்- புண்ணியம செய்திருந் தால் அனாயச மரணம ஏற்படு கிறது-

பரலோகத்தில் யமதர்மனி டம கொண்டு போய் நிறுத்து வார்கள்- அஙகே பொய் சொல்ல முடியாது- சிபாரிசு கடி தம செல்லுபடியாகாது- இவன் செய்த பாவ புண்ணியஙகள் தான் முன்னால் வந்து நிற்கும-

சேர்த்து வைத்த பணமோ, நகை நட்டோ, கார் பஙக ளாவோ, மனைவி, மக்களோ யாரும உதவ முடியாது- அவை களெல்லாம இந்த உலகத் தோடு சரி!

ஒருவன் போய் விட்டான் என்றால் முதல் இரண்டு நாட் களுக்கு உரக்க அழுவார்கள்- மூன்றாவது நாளிலிருந்து, அவன் என்னென்ன வைத்து விட்டுப் போயிருக்கிறான் என்று கணக்கு எடுப்பார்கள்-

யார், யார் எதையெல்லாம எப்படி பஙகு போட்டுக் கொள் வது என்று தான் சர்ச்சை செய்து கொண்டிருப்பார்கள்-

பத்து தினஙகள் ஆனதும போனவனுக்கு ஏதோ செய்து விட்டு. கிடைத்த வரையில் எடுத் துக் கொண்டு அவரவர்கள் வேலையை கவனிக்கப் போய் விடுவார்கள்-

அதன் பிறகு, ஏதோ இருந் தார், போனார் என்று சர்வ சாதாரணமாகச் சொல்லி விடு வார்கள்-

அதனால் வாழ்க்கை என்பதில் கடமைகள் என்பதும உண்டு- தனக்காக பரலோக சுகத்துக் காக செய்து கொள்ளும புண்ணி யஙகளும உண்டு-

வீடு, மனைவி, மக்கள் என்று எப்போதும சொல்லிக் கொண்டு உயிரை விட்டால் மனித ஜென் மம் வீண் தான்- கூடவே தர் மம, தானம என்பதிலும சிர த்தை இருக்க வேண்டும-

அடாடா! இவ்வளவு சம பாதித்தோமே! இவ்வளவு சேர் த்து வைத்தோமே! ஒரு தானம செய்தோமா? ஒரு தர்மம் செய் தோமா? ஒரு கோயிலுக்குப் போனோமா? ஒரு அதிதிக்கு சாப்பாடு போட்டோமா? என்று பரிதாபப்பட வேண்டும!

அவ்வப் போது எது முடி யுமோ அந்த புண்ணியத்தை சேர்த்துவிட வேண்டும- இப்படி சேர்த்த புண்ணியம இவனை கைதூக்கி விடும- காப்பாற்றும-

இந்தப் புண்ணியத்தில், மனை வியோ, மக்களோ, பந்துக் களோ, நண்பர்களோ பஙகு கேட்க முடியாது! யாராலும அபகரிக்க முடியாது-

அவன் சமபாதித்த புண்ணி யம இவனுக்குத் தான்- அது மட்டுமல்ல அவன் செய்த புண் ணியத்தின் பலனை அவனது சந்த தியினர் அனுபவிக்க முடியும-

தாத்தா செய்த புண்ணியம, அப்பா செய்த புணியம ஏதோ சௌக்கியமாக இருக்கிறேன்" என்று பேரனும பிள்ளையும சொல்லுவார்கள்-

அதேசமயம இவர்களுடைய பேரனும, பேரனும, பிள்ளை யும சௌக்கியமாக இருக்க இவர்களும ஏதாவது புண்ணிய காரியம செய்து புண்ணியத்தைச் சேர்த்து வைக்க வேண்டாமா?

இது தலைமுறை, தலைமுறை யாக நீடித்து வர வேண்டும- அப்போது தான் அடுத்தடுத்து வரும தலைமுறையினரும சௌ க்கியமாக இருக்க முடியும-

ஏமாந்து விடாதே! தர்மம் புண்ணியத்தை சேர்த்துக் கொள் என்றார்கள்- யோசித்துப் பார்த் தால் உண்மை புரியும-

(ம-10)

# மாமிச மலை டைசன் சரிந்து வீழ்ந்தது ஏன்?



மைக் டைசன்

டந்த ஞாயிற்றுக்கிழமை பதினோராம திகதி டோக்கியோ டூம அரங்கில் பெரும் விலை கொடுத்து டிக்கெட் வாங்கிய ரசிகர்கள் ஆவலுடன் அந்த வினாடிக்காகக் காத்திருந்தனர். அவர்களில் சிலர் உலகப் புகழ் பெற்ற பெரும புள்ளிகள்.

உலக அதிபார குத்துச்சண்டை அரங்கை முகமமது அலிக்குப் பின்னர் கலக்கி வரும், குத்துச் சண்டையில் ஆர்வம இல்லாதவர்களும கூட இந்தத் துறையில் என்ன நடக்கிறது என்பதை அறியும ஆவலைத் தூண்டியிருக்கும உலக அதிபார குத்துச் சண்டை வீரர் மைக் டைசன் — ஜேமஸ் டக்ளஸ் என்ற வீரரைச் சந்திக்கும அந்த நேரத்துக்காகத் தான் அனைவரும காத்திருந்தனர்.

பிரபல பாடகர் மைக்கல் ஜெக்சனும கூட தனது அலுவல்களைத் தள்ளி வைத்துவிட்டு நியூயோர்க்கில் இருந்து டோக்கியோவுக்கு பறந்து வந்திருந்தார்.

டோக்கியோ டூம அரங்கில் கூடியிருந்த பெருமபாலான ரசிகர்கள் டைசன் எப்படி டக்ளசைப் புரட்டி எடுக்கப் போகிறார் என்பதைக் காணவே அங்கு வந்திருந்தனர். ஏனெனில் முகமமது அலிக்குப் பின்னர் அசைக்க முடியாத இருமபு மனிதர் என்ற பெயரை ஏற்கனவே மைக் டைசன் எட்டிப் பிடித்து உலகப் புகழ் பெற்று விட்டார் அல்லவா?

அனால் அன்று டூம அரங்கில் நடந்ததோ வேறு விடயம.

ஜேமஸ் "பஸ்டர்" டக்ளஸ் சரமாரியாக மைக் டைசனை ஆரமபம முதலே தாக்கத் தொடங்கினார். தொடர்ந்து அவரது கையே ஓங்கியிருந்தது. டைசனை விட நான்கு அங்குலங்கள் உயரமான டக்ளஸ் அதையும தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு நெஞ்சிலும தலையிலும ஆழமான குத்துக்களை விடுத்து டைசனை அவர் நிலைகுலையச் செய்தார்.

ஐந்தாவது சுற்றில் டக்ளசின் குத்தொன்று டைசனின் இடது கண்ணில் விழுந்தது.

ஆனால் எட்டாவது சுற்றில் டைசன் விட்ட குத்து டக்ளசை கீழே சாய்த்தது. அடி வாங்கி கீழே விழும ஒருவர் பத்து வினாடி நேரத்துக்குள் மீண்டும எழுந்துவிட வேண்டும. பத்து எண்ணி முடிந்த பின்னரும ஒருவர் கீழே விழுந்து கிடந்தால் அவர் போட்டியில் தோற்று விட்டார் என்றே அர்த்தம.

டக்ளஸோ எட்டு எண்ணி முடிக்கும போது எழுமபி விட்டார். இதன் பின்னர் ஆட்டம மீண்டும தொடர்ந்தது. அடுத்த இரண்டு சுற்றுகளிலும மைக் டைசனின் கையே ஓங்கி இருந்தது.

பத்தாவது சுற்றின் நடுப்பகுதியில் டக்ளஸ் விட்ட குத்துக்களைத் தாள முடியாத டைசன் தடுமாறி கீழே சரிந்தார். அவர் தரையில் விழுந்து கிடந்த போது ஏற்கனவே பாதிக்கப்பட்ட கண் வீங்கிப் போய் இமைகள் ஏறக்குறைய மூடிய நிலையில் இருந்தன.

பற்களைக் காக்கவென பொருத்தப்படும சாதனம உதடுகளுக்கு வெளியே துருத்திக் கொண்டிருந்தது. உதடுகளும வீங்கியிருந்தன.

அதிபார குத்துச் சண்டை மேடையில் முதல் தடவையாக தரையை முத்தமிட்ட டைசன் தனது பட்டத்தை இழந்ததோடு வீழ்த்தப்பட முடியாத அதி பராக்கிரமசாலி என்ற பெயரையும கூட அன்று இழந்தார்.

இருபத்திரெண்டே வயதான மைக் டைசன் சக்திப் பெட்டகம என அழைக்கப்பட்டு வருபவர். புரபஷனல் குத்துச் சண்டை எனப்படும வர்த்தக ரீதியான குத்துச் சண்டை அரங்குக்குள் நுழைந்த மைக் டைசன் தான் இதுவரை கலந்து கொண்ட 37 குத்துச் சண்டைப் போட்டிகளிலும தொடர்ந்து வெற்றியீட்டி வந்துள்ளார்.

இவரை வீழ்த்தவே முடியாதா, என்ன செய்தால் இவரை வீழ்த்தலாம என்ற விடை தெரியாத கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்த அதிபார குத்துச் சண்டை வீரர்களுக்கு ஆறுதல் அளிக்கக் கூடிய சமபவமதான் அன்று டோக்கியோவில் நிகழ்ந்தது.

மைக் டைசனைப் பொறுத்த அளவில் இத்தோல்வி அவருக்கு ஒரு பெரும சரிவுதான். ஏனெனில் புகழ் பெற்ற குத்துச் சண்டை வீரரான ரொக்கி மார்சியானோவின் (இவரது பெயரை வைத்துத்தான் சில்வெஸ்டர் ஸ்டெலோன் நடிக்கும ரொக்கி திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன). 49–0 என்ற சாதனையை முறியடிப்பது என்ற மைக் டைசனின் சாதனைக் கனவில் இப்போது மண் விழுந்து விட்டது.

ரொக்கி மார்சியானோ தான் கலந்து கொண்ட 49 போட்டிகளிலும வெற்றியீட்டினார். ஒரு தடவை கூட அவர் தோல்வியைத் தழுவவில்லை. அச்சாதனையை முறியடித்து குத்துச் சண்டை வரலாற்றில் ஒரு இடத்தைப் பிடிக்க வேண்டும என்ற டைசனின் எண்ணம இறுதியில் ஈடேறவில்லை.

டைசன் ஏன் மண் கௌவினார்? இவரது மனைவி ரொபின் கிவ்வன்ஸ் இவரை விட்டு விலகிச் சென்று பல மாதங்கள் கடந்து விட்டதால் குடுமபக் கவலை இவரைப் பாதித்து விட்டிருந்தது என்று சொல்வதற்கில்லை.

வெற்றி மேல் வெற்றி இவரை வந்து சேரவும வெற்றிப் போதையில் மைக் டைசன் தனது குத்துச் சண்டைப் பயிற்சியை இவர் அலட்சியப்படுத்தியது ஒரு பெரும காரணமாகச் சொல்ல முடியும.

ஏனெனில் கடந்த ஒன்றரை வருடங்களில் இவரது எடை அதிகமாகி விட்டிருந்தது. பிராங் புறூனோவுடனான மோதல் கூட ஏறக்குறைய ஒரு வருட காலமாக இழுத்தடிக்கப்பட்ட பின்னரே நடத்தப்பட்டது. இவ்வளவு காலமும டைசன் சுமமாதான் இருந்தார்.

டைசனின் குத்துச் சண்டைப் பாணியை அவதானித்துள்ள பல விமர்சகர்கள் எப்போதும ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுச் சொல்லி வந்துள்ளனர்.

மைக் டைசன் ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டு அதன் பிரகாரம ஒருபோதும மோதுவதில்லை. அவரிடம ஒரு அணுகுமுறை கிடையாது. அவரது பல குத்துக்கள் இலக்கை அடையாது தவறி விடுகின்றன. இப்படியிருந்தும மைக் டைசன் தன் எதிராளிகளை அடித்து வீழ்த்துகிறார் என்றால் அது அவரது புஜ பராக்கிரமமே. அவரது புஜ பராக்கிரமமே: அவரது அசுர பலமே எதிராளிகளைக் கீழே சாய்க்கிறது.

இப்படி விமர்சகர்கள் டைசனின் பலவீனத்தையும பலத்தையும கணித்திருக்கிறார்கள்.

மைக் டைசன் — டக்ளஸ் மோதலின் பின்னர் நடைபெற்ற ஒரு சிறு சலசலப்பு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று.

டக்ளஸ் வெற்றியீட்டியதும டைசன் தரப்பினர் இவ்வெற்றியின் மீது கேள்வி எழுப்பினர்.

எட்டாவது சுற்றில் டக்ளஸ் டைசனால் வீழ்த்தப்பட்டாரல்லவா?

டக்ளஸ் கீழே விழுந்ததும் நடுவர் உடனடியாக வினாடிகளை எண்ண ஆரமபிக்கவில்லை.

இரண்டு அல்லது மூன்று வினாடிகள் கழிந்த பின்னர்தான் ஒன்று, இரண்டு, மூன்று என்று அவர் எண்ண ஆரமபித்தார். அதாவது, எட்டு எண்ணும போது டக்ளஸ் எழுமபி விட்டார் என்பது உண்மையானாலும, உண்மையில் அவர் பத்து அல்லது அதற்கும கூடிய வினாடிகள் தரையில் கிடந்தார்.

இப்படி டைசன் தரப்பினர் தமது ஆட்சேபனையை உத்தியோகபூர்வமாக சமர்ப்பித்தனர். இதையடுத்து உலக குத்துச் சண்டை சஙகமும, உலக குத்துச் சண்டை கவுன்சிலும டக்ளசை உலக அதிபார குத்துச் சண்டை வீரராக அங்கீகரிப்பதை தற்காலிகமாக நிறுத்தி வைத்தன.

சர்வதேச குத்துச் சண்டை சமமேளனம மட்டுமே டக்ளசை உலக அதிபார குத்துச் சண்டை வீரராக அறிவித்தது.

ஆனால் குத்துச் சண்டை சஞ்சிகைகளும விமர்சகர்களும ஏகோபித்த குரலில் ஆட்சேபனை விடுத்ததைத் தொடர்ந்து இவ்விரு அமைப்புகளும தமது முன்னைய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு ஜேமஸ் டக்ளசை புதிய உலக அதிபார குத்துச் சண்டை வீரராக அறிவித்தன.

இவ்விடயத்தில் மைக் டைசன் நடந்து கொண்ட விதம பாராட்டத்தக்கது.

உண்மையில் டக்ளஸ் வெற்றி பெறவில்லை. வெற்றியீட்டியது நான்தான் என்று அவர் மார் தட்டி சர்ச்சையில் இறங்கவில்லை. ஒரு குத்துச் சண்டை வீரர் தனது வெற்றியைப் பெறும அதே அரங்கில்தான் தோல்வியையும சந்திக்கிறார். வெற்றியும தோல்வியும அங்குதான் நிர்ணயிக்கப்பட வேண்டும.

எனக்கு வெற்றி வேறு வழிகளில் வந்தடையத் தேவையில்லை என்று தெளிவாகக் கூறிய அவர், தன் தோல்வியை பகிரங்கமாக ஏற்றுக் கொண்டார். டக்ளசின் ஆட்டத் திறமையை மெச்சவும செய்தார்.

இப்போதும தான்தான் உலகின் தலைசிறந்த குத்துச் சண்டை வீரராக்கும என்று நமபிக்கையுடன் சொல்லியிருக்கும இவர், இன்னும ஒரே ஒரு வாய்ப்பைத் தந்துதான் பாருங்களேன், புகுந்து விளையாடி விடுகிறேனாக்கும என்று ஒரு குத்துச் சண்டை வீரனுக்குரிய தோரணையுடன் மார்தட்டியிருக்கிறார்.

அனேகமாக எதிர்வரும ஜூன் 18ஆம திகதியளவில் அமெரிக்காவின் அட்லாண்டா நகரில் மைக் டைசனுடன் புதிய உலக அதிபார குத்துச் சண்டை வீரர் 29 வயதான ஜேமஸ் "பஸ்டர்" டக்ளஸ் மோதுவார் என எதிர்பார்க்கப்படுகிறது— டைசனுக்கு இது வாய்ப்பாக அமைந்திருக்கிறது. அவர் தான் இழந்த பட்டத்தை மீண்டும கைப்பற்றி விடுவதற்கான வாய்ப்புகள் அதிகம.

(த-032)

டுபாய், ஓமான், பஹ்ரெயின் குவைட் நாடுகளில் வேலை வாய்ப்பு

ஆசிய பிராந்தியத்தில்

DIPLOMA IN ENGLISH
ஆங்கில டிப்ளோமா
பட்டமளிப்பு விழா

நாடுகளில் வேலை வாய்ப்பு

முஸ்லிம் வீட்டுப் பணிப்பெண்களுக்கு
எவ்வித கட்டணமும் இன்றி

வயது- 22 வயது முதல்
சம்பளம்- 4250 ரூபா முதல்
சேவைக் காலத்திற்குள் பூரண பாதுகாப்புக்கு உத்தர வாதமளிக்கப்படும்.

**யசோதா எண்டர்பிரைசஸ்**

ஆட்பலப் பிரிவு,
455, கூட்டுறவு கட்டிடம். 4 ஆம் மாடி,
காலி வீதி கொழும்பு—03.
தொலைபேசி- 502868

தொழில் அனுமதிப்பத்திர இல- 647
அங்கீகார இல- ஏ எல்/647/11/89

# சுற்றாடல் பாதிப்பு

மேற்கு ஐரோப்பாவில் வைத்திருக்கு இரசாயன ஆயுதங்களை சிறிய பசுபிக் தீவுகளில் புதைக்க அமெரிக்க நிர்வாகம திட்டமிட்டுள்ளது-

இதை ஆசிய பிராந்தியத்திலுள்ள சூழல் சுற்றாடல் பாதுகாப்பு அபிமானிகள் எதிர்கின்றனர் என்று இந்தோனிஷியா "டைம்ஸ்" பத்திரிகை வெளியிட்டுள்ளது-

ஹவாயில் இருந்து 800 மைல்களுக்கு அப்பால் உள்ள ஜாங்ஸ்டன் தீவு, வி எக்ஸ் மற்றும ஜீ பீ நரம்பு வாயுக்களைப் புதைக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக வட்டாரங்கள் கூறுகின்றன

500 மீட்டர் அகலமான, அதைவிட நீளத்தில் குறைந்த ஜாஙஸ்டன் தீவு இரண்டாம உலக மகா யுத்தத்தின்போது பென்டகனால் பாவிக்கப்பட்டது பின்னர் அதை அமெரிக்கா அணுவாயுதப் பரிசோதனைக்கு உபயோகித்தது-

அதற்கு பின்னர் பழசாகிவிட்ட இரசாயன ஆயுதங்களைக் குவித்து வைப்பதற்கு இத்தீவு உபயோகப்பட்டது-

இன்று "கிரீன்பீஸ்" போன்ற இயக்கங்கள் அமெரிக்காவின் திட்டத்தை எதிர்க்கின்றன-

இரசாயன ஆயுதங்கள் பசுபிக் தீவுகளில் புகுத்தப்பட்டால் கடைசியில் அது அப்பிராந்தியத்து மக்கள் உண்ணும் மீன், கடல் உணவு வகைகளைப் பாதிக்கும என்று "கிரீன்பீஸ்" இயக்கத்தின் பிரமுகர் லெஸ்லி ஸ்டோன் அறிவித்தார்-

இந்த முடிவை பென்டகன் மறுத்துள்ளது- ஆனால் அண்மையில் கிடைத்த தகவல்கள் அமெரிக்க நிர்வாகத்தின் திட்டம ஆபத்தானது என்று ஊர்ஜிதம செய்வதாக சூழல் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன-

இதற்கு முன்னர் மார்ஷல் தீவுகளில் இதே காரணமாக விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன- ஜாங்ஸ்டன் தீவு மார்ஷல் தீவுகளுக்கு அருகே உள்ளது-

மேலும். அமெரிக்கா 1954 இல் நடத்திய அணுவாயுதப் பரிசோதனையின் காரணமாக மார்ஷல் தீவுவாசிகளின் சுகாதாரம பாதிக்கப்பட்டது என்பதை டி புரோம் என்ற நிபுணர் சுட்டிக் காட்டியுள்ளார்-

(ம)

# உடல் ஊனமுற்றவர்களுக்கு

# குரங்கு நல்ல நண்பன்

ஸொரிங் ஹர்ஸ்டு என்டன்பி விமான நிலையத்தில் பணயக் கைதிகளை விடுவிக்கச் சென்ற இஸ்ரவேலிய கமாண்டோ குழுவில் ஒருவர்- இவரது முதுகெலும்பில் பாய்ந்த துப்பாக்கி வேட்டின் காரணமாக கால் கைகள் செயலற்று இருந்தன- அன்று முதல் தமது சகல அத்தியாவசிய வேலைகளை செய்வதற்கு பிறர் உதவியை நாடினார்-

"செப்பீ" என்ற குரங்கு அவரது இன்றைய உதவியாளனாகும நான்கு வயதை எட்டிய இந்தக் குரங்கின் எடை 5 இறாத்தல்- செப்பி தினமும் ஹர்ஸ்குவேயின் இரு கால்களையும கட்டிப் பிடித்தவாறு அமர்ந்து கொள்ளும சில சமயங்களில் அவரது தோளில் ஏறி அவருடன் நீண்ட வாலை கழுத்தில் மாட்டிக் கொள்ளும்-

பதின்மூன்று ஆண்டுகளாக நடமாட முடியாதவாறு முடங்கி இருந்த ஹர்ஸ்கு இப்போது தாம் விரும்பிய கம்பியூட்டர் துறையில் வேலை செய்து வருகிறார்- சக்கர நாற்காலியில் நடமாடும் அவர் வாயில் கவ்விய குச்சி ஒன்றின் உதவியால் கம்பியூட்டரை இயங்க வைக்கின்றார் நாற்காலியை இயக்கவும் கதவை திறக்கவும் புத்தகங்களின் பக்கங்களை திருப்பவும் செப்பியின் உதவியை தடவி விடவும் அந்த குச்சி பயன்படுகின்றது-

ஹர்ஸ்கு குடிப்பதற்கு தண்ணீர் கொண்டு வருதல் முதல் மின்சார விளக்கை ஏற்றவும அணைக்கவும் டேப்ரெகோடரில் கெஸற்றை உள்ளே செலுத்தவும பாடல் முடிந்ததும் கெஸற்றை மாற்றவும் செப்பி பயிற்சி பெற்றுள்ளது-

"ஹர்ஸ்கு செப்பி இருவர்களுக்கு இடையில் அருமையான உறவு வளர்ந்துள்ளது" என்றார் மிருக வைத்திய நிபுணர் டாக்டர் ரோஷ புஷ்மிட்ஸ் "அங்கவீனர்களுக்கும் குரங்குகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது, தங்களைப் பற்றிக் கொள்ள முடியாதவர்களிடம தங்களுக்கு பாதுகாப்பு இருப்பதாக குரங்குகள் கருதுகின்றன" என்றார் அவர்-

விவேகம, அமைதியான குணம சிறிய உருவம் ஆகியவையே கபூச்சின் குரங்குகளை தெரிவு செய்ய காரணமாக இருந்தன- குறிப்பிடத்தக்க சாமர்த்தியமுள்ள இந்த மிருகம் 40 வருடங்கள் உயிருடன் வாழக் கூடியவை-

பூரண உதவியாளனாக ஒரு குரங்கு மாற்ற அடைவதற்கு முன் அதனை வீட்டு சூழலுக்கு கொண்டு வருதல் வேண்டும்- பயிற்சி அளிக்கப்பட்ட பின் அங்கவீனர்களுக்கு பொறுப்பாக ஒப்படைக்க வேண்டும்-

(ம)

தபால் மூல ஆங்கில டிப்ளோமாப் படிப்பை முடித்துக் கொண்ட மாணவர்க்கான பட்டமளிப்பு விழா —

எதிர்வரும பெப்ரவரி மாதம 23 ஆந் திகதி
காலை 9 மணிக்கு
கொழும்பு-10, சரசவிபாயா மண்டபத்தில் நடைபெறும.
பிரிட்டிஷ் கவுன்சில் (British Council)
ஆங்கிலப் பணிப்பாளர்
திரு பிரெட் ஓ அன்லன்
பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

புதிய ஆண்டுக்கான தபால் மூலப் பாடநெறி விபரங்களை இம்மாதம 28 ஆந் திகதி வரை கீழ்க்கண்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம.

பதிவாளர்,
தொலைக்கல்விச் சேவை,
2—214,
பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபம,
B M I C H
பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு—7.

புதிய விலைகளுடன்

**ரன்பக்—ரன்ரெட்**

துயிலைக் கெடுக்கும
உயிர் நாடிகளின் இரத்தத்தை குடிக்கும
மூட்டைப்பூச்சி மற்றும நுளம்பு-
கரப்பொத்தான்- ஈ எறும்பு- கறையான்
ஆகியவைகளை அழித்திட

**RUN BUG**

போத்தல் விலை ரூ 6/-
50 மி லீ விலை ரூ 23/-

மக்களுக்கு பயங்கர நோய்களையும
பொருட்களுக்கு சேதத்தையும விளைவிக்கும
எலிகளை ஒழித்திட

**RUN RAT**

போத்தல் விலை ரூ 6/-
வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு

**அப்துல்லா**

**இன்டஸ்ரீஸ்**

72 பார்பர் வீதி கொழும்பு-13
தொலைபேசி 433952

இறக்குமதி செய்யப்பட்ட பிரவுன் பேப்பர்களும பல அளவிலான பேக் வகைகளையும எம்மிடம பெற்றுக் கொள்ளலாம-

**சவூதி அரேபியா**

★ வீட்டுப் பணிப்பெண்கள்
★ வீட்டு டிரைவர்கள்

[5 நாட்களில் பயணம]

சார்ஜா — அபுதாபி — டுபாய்
குவைட் — பஹ்ரேயின்

[21 நாட்களில் பயணம]

★ வீட்டுப் பணிப்பெண்கள்
★ வீட்டு டிரைவர்கள்
★ டெய்லர்ஸ்

கடவுச்சீட்டு- 6 படங்கள் சகிதம நேரில் வரவும

**M. K. M. ENTERPRISE**

12.D—Prince of Wales Avenue
Colombo — 14

Labour & Approval 596/11/89

# மௌலவியாக்களின் நிலை என்ன?

நாட்டிலும் சமுதாயத்திலும் பெண் மௌலவியாக்களின் நிலை என்ன? அவர்களின் சேவை எத்தகையது? அச் சேவையினால் ஏற்பட்ட பலாபலன்கள் யாவை? இஸ்லாமியப் பெண்ணினம் மௌலவியாக்கள் மூலம் அடைந்த நன்மை யாது?

இவ்வாறான வினாக்கள் முஸாபிரை சிந்திக்கத் தூண்டின- இஸ்லாமிய அடிப்படையிலான, காலத்திற்கு ஏற்ற வழி நடத்தலை தரவல்ல மௌலவிகள் உருவாக்கப்படுகின்றனரா? என்ற சிந்தனையை ஏற்கனவே கிளறி விட்டிருந்தேன்!

சமுதாயப் பல்லக்கை தோள் மீது தூக்கிச் செல்வோரில் ஒரு பக்கம் ஆண்கள் என்றால் மறு பக்கம் பெண்கள்தாமே! அதன் வழியில் மௌலவிகள் பற்றி சிந்திக்கத் தலைப்பட்ட கால கட்டத்தில் மௌலவியாக்கள் குறித்தும் சிந்திப்பதன்றோ நியாயம்!

எனவே முஸாபிரின் பார்வை இவ்வாரம் நம சகோதரிகளான மௌலவியாக்கள் பக்கம் திரும்புகிறது. அதன் மூலம் சிந்தும் கருத்துக்களை சம்பந்தப்பட்ட சன்மார்க்க இதயங்கள் சிந்திப்பார்களாக!

மௌலவியாக்களின் நிலை, அந்தஸ்து, சேவை, அதனால் சமுதாயம் குறிப்பாக இஸ்லாமிய பெண்ணுலகம் அடைந்து வரும் நன்மைகள் என்றெல்லாம் முஸாபிரின் எண்ணங்கள் தொடர்கதையாய் அணிவகுக்கும் போது அதன் தொலைவில் தெரிவது கல்-எளிய முஸ்லிம் மகளிர் அரபிக் கல்லூரியே ஆகும்!

நாடெங்கும் மௌலவிகளை உருவாக்கும் பதிவு செய்யப்பட்ட அரபிக் கல்லூரிகள் ஏறத்தாழ நாற்பது வரை நற்சேவை ஆற்றும் போது, நம முஸ்லிம் சகோதரிகளை மௌலவியாக்களாக உருவாக்குவதற்குள்ள ஒரே ளருமான அல்ஹாஜ் எம் ஏ எம அபுல்ஹஸன். கடந்த காலங்களில் கடல் கடந்த உதவிகளைப் பெற்றுத் தந்த பெருந்தகை இவர் என்பதற்கான தடயங்கள் கலாசாலை எங்கும் காணப்படுகின்றன!

நல்ல இடவசதியும், இதர வசதிகளும் போதியளவு இருக்கின்ற இம்மகளிர் கல்லூரிக்கு மத்திய கிழக்கின் கடைக்கண் பார்வையும் உண்டு- ஆண்டு தோறும் ரியாத்துக்கு புலமைப் பரிசிலும் கிடைப்பதுண்டு! இதன் வழியில் அரபுலகம் சென்று கற்று வந்த பழைய மாணவிகளும் பலர் உளர்!

இவ்வளவு ஆரோக்கிய சூழல், வசதி, வாய்ப்புக்கள் இருந்தும் மௌலவியாக்கள் சமுதாயத்தில் சோபிக்கவில்லையே... இது ஏன்?

முப்பதாண்டு கால வரலாறு படைத்த இக்கலாசாலை உருவாக்கிய மௌலவியாக்கள் சமுதாயத்தில் சந்தடி ஏதுமின்றி "தானுண்டு தன் பாடுண்டு" என்ற மனநிலையில் ஒதுங்கி ஓரமாகி இருப்பதேன்?

சிற் சில பாடசாலைகளில் விரல் விட்டு எண்ணி விடத் தக்க சிலர் மட்டுமே "மௌலவி ஆசிரியை" நியமனம் பெற்ற மௌலவியாக்களாகக் கடமை புரிகின்றனர். கடந்த காலங்களில் வெளியேறிய ஏனைய மௌலவியாக்கள் இருக்கும் இடமே தெரியாமல் வாளாவிருப்பதேன்?

மௌலவியாக்களாகப் பட்டம் பெற்று வெளியேறிய சில நாட்களுக்குள் திருமணம் முடித்து விட்டால் அவர்களின் சேவை மருந்துக்கும் கிடைப்பதில்லையே! தனி வாழ்விலும் பொது வாழ்விலும் அவர்கள் தனித்துவமாக இல்லாமல் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகளை மறந்து போவதேன்...?




இதற்கெல்லாம் காரணம் என்ன? குறை எங்கே யாரிடம் ஒளிந்திருக்கிறது?

இந்த வினாவுக்கு விடை தேடும் பணியில் முஸாபிர் இறங்குகிறார்- அப்போது முஸாபிர் தெரிந்து கொண்ட தகவல்கள் இதோ...

விஷய ஞானமுள்ளவர்களின் ஆலோசனைகளோ வழி நடத்தல்களோ நிர்வாகத்திற்கு கிடைப்பதில்லை எனச் சொல்லப்படும் குற்றச்சாட்டுகள் உண்மையாமோ? பழைய போக்குடையவர்களே இன்னும் கலாசாலையை இழுத்துச் செல்கிறார்கள் என முஸாபிர் தெரிந்து கொண்டது சரிதானா?

ஒரு ஆண் கற்றால் அந்த ஆண் மட்டும் கற்றதாகவே கொள்ளப்படும். ஒரு பெண் கற்றால் அவளது குடும்பமே கற்றதற்கு சமன் என்பார்கள் அனுபவசாலிகள்! இதிலிருந்து ஒரு பெண் மௌலவியாவாக கற்று வர வேண்டிய அவசியம் புரிகிறதல்லவா? அவசரம் தெரிகிறதல்லவா?

இந்த அவசியத்தை உணர்ந்ததாகவோ உணர்த்துவதாகவோ சமுதாயத்திற்கு குறிப்பாக இஸ்லாமியப் பெண்ணினத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகளில் பொறுப்புக்களை ஊட்டுவதாகவோ பாடத்திட்டம் அமைந்திருக்கவில்லை. காலத்திற்கேற்ற மாற்றங்களை உள்வாங்காத பழைய பாடத்திட்டமே இன்னும் அமுலில் இருக்கிறது என முஸாபிர் அறிய வந்துள்ளார்- இதில் உண்மை உண்டா?

தாய் – தகப்பன் இல்லாத பாவாத்மாக்களான அநாதை "தங்கச்சிகள்" அங்குமிங்கும் வேலை செய்து அடி உதை பட்டு ஒருவாறு இக்கலாசாலை அநாதை விடுதியில் சங்கமமாகின்றார்கள்- இவர்கள் அந்த மொன்டிசூரி வகுப்புகளுக்கும் "பிரைமரி" வகுப்புகளுக்கும் சென்றறியாத அரிச்சுவடி தெரியாத கல்வி அநாதைகள். இவர்களின் கல்விப் போதனைகளில் உரிய கவனம் செலுத்தப்படுவதில்லை. இதனால் இம்முயற்சி வெறுமனே ஆட்டுக் குட்டிகளைக் கட்டிப் போட்டு வளர்ப்பது போலவே ஆகிவிடும்-

இப்படி சில அநாதைகளின் தூரத்துச் சொந்தங்கள் முறைப்படுவதில் நியாயமுண்டா?

தொழிற் பயிற்சிக்கான வசதி அதிகமிருந்தும் குறிப்பாக ஏராளமான தையல் மெஷின்கள் இருந்தும் உரிய முறையில் தொழிற் கல்வி போதிக்கப்படுவதில்லை என்பதை ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும் என கல்லூரி மீது கரிசனையுள்ள சில இதயங்கள் கருத்துத் தெரிவிக்கின்றனவே...!

தரமான இளம் ஆசிரியைகள் பாட போதனைகளைப் படிப்பிக்கின்றனர். சில நாட்களில் மணவினை முடிந்தால் மாற்றம் பெற்றுச் சென்று விடுகின்றனர்- இதனால் சம்பந்தப்பட்ட மௌலவியா மாணவியர் நட்டாற்றில் கைவிடப்பட்ட நிலையில் தடுமாறுகின்றனர்- அத்தகைய இளம் ஆசிரியைகள் திருமணத்தின் பின்னரும் படிப்பிக்கும் வசதிகளை குறிப்பாக தங்குவதற்கான விடுதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து பணி தொடர வழி செய்யலாமே என ஒரு அன்பர் கூறும் ஆலோசனை சாத்தியமானதா?

இக்கல்லூரி மூலம் புலமைப் பரிசில் பெற்று ரியாத்துக்குச் சென்று விரிந்த அறிவுஞானத்துடன் நாடு திரும்பும் பழைய மாணவியர் ஏற்றி விட்ட ஏணியை (கல்லூரியை) ஏறிட்டும் பார்ப்பதில்லை என ஒரு பழைய மாணவி முஸாபிரிடம் குறைபட்டாரே...

இக் குறைபாடுகளுக்கும் முறைப்பாடுகளுக்கும் முடிவு என்ன?

அறிவுத்துறை சார்ந்தவர்களை உள்ளடக்கிய ஆலோசனைக் குழுவொன்றினை ஏற்பாடு செய்து பாடத்திட்டத்தில் படிப்பிக்கும் முறைகளில் போதிய சீர்திருத்தங்களை மேற்கொண்டால் என்ன?

பெருகி வரும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், புதிய சிந்தனைகள், நவீன வாழ்க்கை வசதிகள். அரசாங்கம் விதிக்கும் தேவைகள் போன்றவற்றால் முஸ்லிம சமூகம் இன்று உரிய வழி நடத்தலை எதிர்பார்க்கின்றது.


இந்நேரம் முஸ்லிம பெண்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் மௌலவியாக்களின் பணியும பங்களிப்பும் உரிய முறையில் கிடைப்பதற்கான வழிகளைப் போதித்தால் என்ன?

குடும்ப நிர்வாகம், குழந்தைப் பராமரிப்பு, சின்னஞ் சிறு வைத்திய முறைகள் முதலுதவிப் பயிற்சிகள், சமையற்கலை, சிறு கைத்தொழில் போன்ற பெண்கள் அறிந்திருக்க வேண்டிய விஷயங்களில் போதனைகளை ஆரம்பித்தால் என்ன?

அதிபர், நிர்வாகத் தலைவர், நிர்வாகிகள், ஆதரவாளர்கள், அன்பர்கள் போன்றோரின் கனவு நித்சனமாகும் விதமாக இக் கலாசாலையை சமுதாயத்திற்கு பூரணமாகப் பயன்படும் நற்பிரஜைகளை உருவாக்கும் பயிற்சிக் கூடமாக ஆக்கினால் என்ன?

பெண்களுக்கான வேறு அரபிக் கலாசாலைகள் இல்லாத நிலையில் இந்த கல்-எளிய முஸ்லிம மகளிர் அரபிக் கல்லூரியை சமூகம பெரிதும் எதிர்பார்க்கின்றது- சமுதாயத்தில் சன்மார்க்க விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதில் இக் கலாசாலையின் பங்கு சொல்லுந்தரமன்று இதனை சம்பந்தப்பட்ட சகலரும சிந்தித்துப் பார்ப்பது நலம் பயக்கும்!

இங்கு எவரும ஏழெட்டு வருடங்கள் வெறுமனே காலங் கழிப்பதில்லை- இங்கு பயின்று வெளியேறும மௌலவியாக்கள் தமது குடும்பத்தில், பகுதியில், கிராமத்தில், சமுதாயத்தில், நாட்டில் இஸ்லாமிய சாந்தி மணம கமழ வாழ வேண்டும். இதையே அனைவரும எதிர்பார்க்கின்றனர்- தனி வாழ்விலும பொது வாழ்விலும அவர்கள் முன்மாதிரியாக நடக்க வேண்டும்- இது குறித்து சகலரும சிந்திப்பார்களாக!


கல்-எளிய முஸ்லிம அரபிக் கல்லூரி

## பொல்லாத புன்சிரிப்பு

— நே. மகேந்திரன் —

சேட்டின் ஒரு பக்கத் தைப்

என் மனம் கூறியது-

அவளை அப்படியே விழுங்கி விடுமாப் போல் பார்க்கிறேன்- சந்தர்ப்பமறிந்து செயற்படுபவர் போல் பஸ் சாரதி பிரேக்கைப் போடவும அவள் என் மடியில் விழவும் சரியாகவிருந்தது-

பஸ் சாரதியை மனதார வாழ்த்தியபடி அவளை இரு கையிலும் தாங்கிக் கொண்டேன்-

டது- எல்லாப் பயணிகளும தேநீர் அருந்தச் சென்று விட்டார்கள்-

அவளை என்னுடன் வருமபடியழைத்தேன் நோ... தாங்ஸ்! நீங்க போய்விட்டு வாங்க என்ன இனிமையான குரல் அவளிற்கு-

தேநீர் அருந்திவிட்டு அவளுக்கு ஒரு கூல் கொக்கோ கோலா வாங்கிக் கொண்டேன்-

தரிகளை மௌலவியாக்களாக உருவாக்குவதற்குள்ள ஒரே இடம கல்-எளிய முஸ்லிம மகளிர் அரபிக் கல்லூரி மட்டும் தான் என்பதை எண்ணுங்கால் முஸாபிருக்கு ஒருபுறம பெருமை. மறுபுறம போதாமை குறித்த பெருமூச்சு...

சமுதாய சகோதரிகளின் நிறைவான தேவைகளைப் பூர்த்தியாக்கவல்ல "ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு" என நிமிர்ந்து நிற்கும் கள்-எளிய முஸ்லிம மகளிர் அரபிக் கல்லூரியை இதோ முஸாபிர் எட்டிப் பார்க்கின்றார்-

அரபு மொழி மூலமான இறை கல்வி, தாய்மொழி தமிழ் மூலமான பாடசாலை போதனைகள் அத்தோடு அநாதை விடுதி என மூன்று பிரிவுகளாக இக் கலாசாலை சேவையினால் குதுப் மினார் கோபுரம போல் நிமிர்ந்து நிற்கிறது! அல்ஹம்துலில்லாஹ்!

இம முப்பிரிவுகளுக்கும ஒட்டு மொத்தமான உதாரணமாக அதிபர் ஆசனத்தில் அமர்ந்திருக்கின்றார் சகோதரி ஜனாபா ஜெலீலா சபீக் என்ற புனிதவதி.

தந்தையின் ஆதரவற்ற மாணவியாய் இக் கலாசாலையினுள் காலடி எடுத்து வைத்த ஒரு மௌலவியாவாக, ஓர் ஆலிமாவாகத் தேறி, பாடசாலைப் போதனைகளில் படிகள் பல தாண்டிய ஒரு பட்டதாரியாக உயர்ந்திருக்கும மிகப் பொருத்த மானவர்தான் இப்போது இக் கலாசாலையின் அதிபராகக் கடமையாற்றும சகோதரி ஜனாபா ஜெலீலா சபீக்.

புதுசு புதுசாக ஏதும செய்ய வேண்டுமென்ற புதிய சிந்தனைகளைத் தன்னுள் பூட்டி வைத்திருக்கும ஒரு புத்திஜீவி இந்த அதிபர்!

நிர்வாகிகளாகக் கைகோத்து நிற்பவர்கள் சமுதாயப் பற்றில் எவருக்கும சளைத்தவர்கள் அல்லர்! சமுதாய விடிவுக்காக ஏதும நல்லது செய்யும நாட்டமும தேட்டமும உடையவர்கள் இந்த உத்தமர்கள்!

இக் கலாசாலை கால வெள்ளத்தால் அள்ளுண்டு போகாமல் எல்லாக் காலங்களிலும ஏற்ற முறை பணிகள் ஆற்றிட வேண்டுமெனும துடிப்பு மிக்கவர் கலாசாலைத் தலைவரும முகாமையா

அன்று ஞாயிற்றுக்கிழமை மூன்று நாட்களை பழைய நண்பர்களுடன் ஜாலியாகக் கழித்து விட்டு வேலைக்குச் செல்வதற்காக கொழும்பு பஸ் வண்டியை எதிர்பார்த்து ஹற்றன் பஸ் நிலையத்தில் நின்றேன்-

வழமை போல் சனக்கூட்டம் நிரம்பி வழிந்தது- பிரயாணிகள் நூறு மீற்றர் ஓட்டப் போட்டிக்குத் தயாராக நிற்பவர்கள் போல் தங்கள் பயணப் பொதிகளை தோள்களில் சுமந்து உற்சாகத்துடன் நின்றார்கள்-

சில பயணிகள் அஞ்சல் ஓட்டத்திற்குத் தயாராக நிற்பவர்களைப் போல் பஸ் வரும் வழியில் இருவர் மூவராக நின்று கொண்டிருந்தனர்-

அந்தா கொழும்பு பஸ்...! ஒரு பிரயாணி உரக்கக் கத்தி விட்டார்- இடையில் நின்ற ஒரு சிலர் ஒருவாறு பாய்ந்து ஏறி விட்டார்கள்-

ஒரு சிலர் ஏற முயன்று வழுக்கி விழுந்தார்கள்- கியூவிற்கு வெளியில் நின்றவர்கள் முண்டியடித்துக் கொண்டு செல்ல கியூவில் நின்றவர்களும் ஓடிச் சென்று ஏற கியூவிற்கு கொண்டு வந்து நிறுத்த முன்னரே பஸ் நிரம்பி வழிந்தது-

ஜேம்ஸ் பொண்ட் பயணத் தோல் பையொன்றுடன் இடையில் நின்ற நானும் பஸ் ஓடும் போது ஏற முடியாது நூறு மீற்றர் ஓட்டப் பந்தயத்திற்கு ஓடுபவனைப் போல் ஓடி வந்து எனது உடல் வலிமையைக் காட்டி பயணிகளுடன் முட்டி மோதி ஒருவாறு ஏறி விட்டேன்-

கியூவில் காத்து நின்ற சில பயணிகள் திட்டுவது லேசாக காதில் விழுந்தது- கேளாதவன் போலிருந்து விட்டேன்-

இருநூறு மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் கலந்த களைப்புத் தெரிந்தது- ஆசனத்தின் ஓரப் பக்கத்தைத் தேடிக் களைத்தவனாய் எல்லாம் நிரம்பி வழிய ஒருவாறு ஒரு சீற்றில் இன்னொருவருடன் அமர்ந்து கொண்டேன்-

பொக்கற்றிலிருந்த சீப்பையெடுத்து தலையைச் சீவி நான் அணிந்திருந்த நண்பனின் கூலிங் கிளாசை சரி செய்ய கையை உயர்த்தினேன்-

சேட்டின் ஒரு பக்கக் கைப் பகுதி கிழிந்திருந்தது- மற்றவர்கள் காண்பதற்கு முன் இரண்டு கைகளையும் முழங்கை வரை மடித்து விட்டு கூலிங் கிளாசைச் சரி செய்த போது ஒரு பக்கக் கண்ணாடி கையுடன் வந்தது-

ஒருவாறு பொருத்தியணிந்து கொண்டேன்- கைக்கடிகாரத்தைப் பார்த்த போது பதினைந்து வருடங்களாகப் படாத பாடு பட்டு உழைத்துக் கொண்டிருக்கும் எனது "ஹெமி" கடிகாரம மௌனமாகவிருந்தது!

பாவம்! சனநெரிசலில் அமுங்கி விட்டது போலும்- ஒரு தட்டு விட்டேன்- என் நிலையறிந்தது போல் ஓடத் தொடங்கியது-

என்னைச் சரி செய்து கொண்டு நான்கு பக்கமும் பார்வையைச் செலுத்தினேன்- பெண்களே குறைவு- இருப்பவர்களும் நாற்பதிற்குக் கூடியவர்கள் போல் தெரிந்தது-

அட கடவுளே! ஏன் இந்தச் சோதனை- இறைவனை நொந்து கொண்டேன்-

பஸ் புறப்பட்டது- இடையிலாவது கண்ணுக்குக் குளிர்ச்சியான காட்சிகளைக் காண மாட்டேனா? மனம் ஏங்கித் தவித்தது-

பஸ் வட்டவளையில் நின்றது- வயது போன நாலைந்து பேர் ஏறினர்- அப்படியானால் என் ஆசனம் பறிபோகப் போகிறது

ஏற்கனவே ஒரு காலில் கட்டி வைத்திருந்த பண்டேஜ் தெரியும படி காற்சட்டையை உயர்த்தி விட்டுக் கொண்டேன்-

வந்தவர்களில் நான்கு பேர் என்னைக் கடந்து பின்னுக்குச் சென்று விட்டார்கள்- ஒரு வயது முதிர்ந்தவர் மட்டும் எனக்குப் பக்கத்தில் சாய்ந்து கொண்டு நின்றார்-

எங்கே என் சீற்றைக் கேட்டு விடுவாரோவென நினைத்தவனாய் முன் சீற்றில் தலையை வைத்துப் படுத்துக் கொண்டேன்-



என்னிடம் தன ஜம்பம பலிக்காதென நினைத்தோ என்னவோ கொஞ்ச நேரத்தில் அப்பெரியவர் அவ்விடத்தை விட்டுச்




சென்று விட்டார்- பஸ் நகர்ந்து கொண்டிருந்தது-

அம்ப!... அம்ப!... நியம அமப... நாப்பியல் தெக்காய்- சத்தம் கேட்டுக் கண் விழித்த போது தான் நான் என்னையறியாமல் கண்ணயர்ந்து விட்டேனென்பது புரிந்தது-

பஸ் கினிகத்தேனையில் நின்றது தலைமுடியைச் சரி செய்து கொள்கிறேன்- எனக்கு முன் ஒரு கவர்ச்சிக் கன்னி! வைத்த விழி வாங்காது அவள் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாள்-

ஆண்டவன் என் வேண்டுகோளிற்கு மனமிரங்கி விட்டான் ஆண்டவனை வாழ்த்திக் கொண்டு அவளை நோக்குகிறேன்- ஒரு புன்னகை-

என் தலையெல்லாம் கிறுகிறுக்கத் தொடங்கியது- தலை சுற்றி அப்படியே நான் விழுந்து விடுவேனோ என நினைத்து பார்வையை அவளிடமிருந்து எடுத்துக் கொண்டேன்-

மனம் கேட்கவில்லை- திரும்பவும் அவளை நோக்குகிறேன்- உண்மையில் அவள் அழகிதான்-

...விலும் தாங்கிக் கொண்டேன்- தாங்ஸ் வெறி மச்... மீண்டும புன்னகைத்தாள்-

இதற்கு மேலும் பொறுக்க முடியாதவனாய் எனது சீற்றை அவளுக்குத் தியாகம் செய்தேன் ஒரு பெண்ணின் கடைக்கண் பார்வைக்கு எத்தனையோ பேர் எதையெதையோ வெல்லாம தியாகம பண்ணும் போது என்னால் ஒரு சீற்றைத் தியாகம் பண்ண முடியாதா? என் மனம் கூறியது-

அவளருகில் அவள் முதுகுப் புறம் எனது இடுப்பில் படும்படியாக நின்று கொண்டிருந்தேன்.

ஒரு சில வினாடிகளில் அவள் முன் ஆசனத்தில் தலை வைத்துப் படுத்து விட்டாள்- பாவம்...! நின்று பிரயாணம் செய்ததால் களைத்து விட்டாளோ என நினைத்தேன்-

தேநீர் அருந்துவதற்காக பஸ் கரவனல்லையில் நிற்பாட்டப்பட்

...கோலா வாங்கிக் கொண்டேன்- கண்டொஸ் ஒன்றும வாங்கிக் கொடுத்தால்...! பொக்கற்றைத் தடவுகிறேன்-

மிகுதியிருப்பது இரண்டு ரூபா மாத்திரமுதான்- பரவாயில்லை நான்கு ரொபிகளை வாங்கிக் கொண்டேன்- நான் கொடுத்த கொக்கா கோலாவையும் ரொபியையும் வாங்கியவள்... யூ ஆர் ஏ நைஸ் மேன்...! கூறி விட்டு அதே புன்னகை!

என் உடலில் மின்சாரம பாய்ந்தது போலிருந்தது- பஸ் புறப்பட்டது மீண்டும அவள் முன் ஆசனத்தில் தலை வைத்துப் படுத்துக் கொண்டாள்- அவளிற்குப் பக்கத்தில் சீற்றில் சாய்ந்து கொண்டு நிற்கிறேன்-

அவிசாவளையில் கொஞ்சப் பிரயாணிகள் ஏறிக் கொண்டார்கள்- கருணாகரலா பஸ்ஸட்டயண்ட! (தயவு செய்து பின்னுக்கு போங்கள்) கொண்டக்டர் கத்துவது கேட்டது-

எல்லாப் பயணிகளும அந்தந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்தார்கள்- மே மாத்தயா பொட்டக் பஸ்ஸட்ட யண்டகோ!] நான் கேளாதவன் போல் நின்றேன்-

பொறுக்க முடியாத கொண்டக்டர் என்னைப் பின்னுக்குத் தள்ளினான் எங்கே அவள் இதைக் கண்டுவிடுவாளோவென நினைத்து மனமில்லாதவனாய் பின்னுக்குச் சென்றேன்-

பரவாயில்லை அவள் இடைக்கிடை திருமபிப் பார்ப்பாள் தானே- மனம சமாதானம செய்தது- பஸ் சென்று கொண்டிருந்தது-

பின்னுக்கு நின்றவாறு அவளை நோக்குகிறேன் அவள் இன்னமும எழுந்திருக்கவில்லை அவளுக்கு ஏதாவது சுகவீனமாக இருக்குமென நினைத்துக் கொண்டேன்-

அவள் படுக்கட்டும இறங்கும பொழுது கதைத்துக் கொள்ளலாமென மனம சமாதானம கூறியது- பஸ் நகர்ந்து கொண்டிருந்தது- முல்லேரியாவ பயின்ன... கொண்டக்டர் கூறுவது காதில் விழுந்தது-

நான் இறங்க வேண்டிய இடம அவளைப் பார்க்கிறேன்- அவள் இன்னும எழுந்திருக்கவில்லை அப்படியானால் அவள்

(20ஆம பக்கம பார்க்க)

# தயாராகி விட்டது தமிழ் டெலி பிலிம்!

சென்னை டி வி நிலையத்தார் சுமார் ஒன்றரை மணி நேரம ஓடக்கூடிய டெலி பிலிம்களை பிரபல தயாரிப்பாளர்கள் டைரக்டர்கள் மூலம தயாரித்து வருகிறார்கள்—

இப்போது முதல் தமிழ் டெலி பிலிம் "எங்கே அவன்" ஒளிபரப்பிற்குத் தயாராகி விட்டது—

இதை ஜெயஸ்ரீ பிக்சர்ஸ் சார்பில் தயாரித்து டைரக்ட் செய்துள்ளார் டாக்டர் எஸ் வி ரமணன்—

"எங்கே அவன்" டெலி பிலிம் பற்றிய கேள்விகளுக்கு இயக்குநர் எஸ் வி ரமணன் இங்கு பதிலளிக்கிறார்...

கே— டெலி பிலிம் என்றால் என்ன?

ப— ஒரு குறிப்பிட்ட சப்ஜெக்ட்டைப் பற்றிக் காண்பிப்பது டாகுமெண்டரி படங்கள்— வியாபாரப் பொருட்களைப் பற்றியது விளம்பரப் படங்கள்— பகுதி பகுதியாகப் பல வாரங்களுக்கு காண்பித்தால் அது டிவி தொடர்கள்—

திரையில் காண்பிக்கப்படும முழுநீளப் படங்களைப் போல் டிவி நிலையத்தாருக்காக டிவியில் தொடர்ந்து ஒன்றரை மணி நேரம் ஓடக்கூடிய படங்கள் தான் டெலிபிலிம் என்பது—

கே— இப்போது நீங்கள் டைரக்ட் செய்துள்ள "எங்கே அவன்" டெலி பிலிம் பற்றிச் சொல்லுங்களேன்?

ப— சென்னை டிவி நிலையத்தார் டெலி பிலிம்கள் எடுக்கப் போவதாக 1983 ஆம ஆண்டு கேள்விப்பட்டோம்— பிரபல நாவலாசிரியை டாக்டர் லக்ஷ்மியிடம் அவருடைய "எங்கே அவன்" நாவலின் உரிமையை வாங்கினோம்—

இந்த நாவல் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் "ஆனந்த விகடன்" பத்திரிகையில் டாக்டர் லக்ஷ்மி எழுதிய தொடர் கதை— டிவியில் 1989 இல் இதற்கு அனுமதி கிடைத்தவுடன் முமமுரமாக தயாரிப்பில் ஈடுபட்டு முடித்து விட்டோம—

கே— இது பொழுது போக்குப் படமா அல்லது ஆர்ட் பிலிமா?

ப— இரண்டுக்கும இடைப்பட்ட படம! டிவி ஓடியன்ஸ் என்பவர்கள் அதிகமாக ஒலியும ஒளியும சினிமாவால் கவரப்பட்டவர்கள்— அதே சமயம் ஒரு குறிப்பிட்டவர்கள் தொடர்கள் — ஆர்ட் பிலிம் இவற்றைப் பார்ப்பவர்கள்— ஆகவே இரண்டு பேருக்காக யதார்த்தத்தையும் வேகத்தையும சேர்த்து செய்திருக்கிறோம்—

இந்தப் படத்தின் வசனத்தை "வியட்நாம் வீடு சுந்தரம்" எழுத ரகு ஒளிப்பதிவு செய்ய திரைக்கதை — பாடல்கள் இசை டைரக்ஷன் ஆகியவற்றை நான் செய்திருக்கிறேன். — என்றார்—


THE ENGLISH SPEAKING UNION OF SRI LANKA

90 மணித்தியாலங்களில்

ஆங்கிலம் பேசுங்கள்

8 வது குறுகிய கால வகுப்புகள்

ஆரமபம— மார்ச் 3 பி ப 4—30

விபரங்கள்— நேரில்/சுய முகவரி முத்திரைக் கவர் அனுப்பிப் பெறலாம.

314/2, காலி வீதி, கொள்ளுப்பிட்டி

கொழுமபு (கடற்கரைப் பக்கம)

தலைவர்


# ஒலி ஒளி உருவம்

ரூபவாஹினி

RUPAVAHINI

"கலையகத்தில் கலைஞர்" பேட்டி

# இப்படித்தான் இருக்கவேண்டும்

"கலையகத்தில் கலைஞர்" என்ற தலைப்பிலான இரண்டாவது வானொலிப் பேட்டி 13-2-90 செவ்வாய்க்கிழமை இரவு 9-30 மணிக்கு ஒலிபரப்பப்பட்டது- இம முறை இடமபெற்றவர் முது பெரும மிருதங்கக் கலைஞர் திரு சண்முகமபிள்ளை. இவரைப் பேட்டி கண்டவர் சற்சொருபவதி-

சற்சொருபவதியின் விவேகமான வினாக்களின் மூலமாகச் சண்முகமபிள்ளையின் அந்தக் கால அனுபவங்களையும ஆற்றல்களையும அறியக் கூடியதாக இருந்தது!

கேள்விகள் கேட்பதென்றால் இப்படித்தான் கேட்க வேண்டுமென்பதற்கு உதாரணமாக இருந்தன சற்சொருபவதியின் கேள்விகள்!

மிருதங்கக் கலையின் நுட்பத்தை வெளிப்படுத்தும வகையிலான அருமையான பேட்டி இது!

பாலக்காடு மணி ஐயர், மைசூர் சௌடையா, வி வி சடகோபன், செமமை வைத்தியநாத பாகவதர் போன்றவர்களது கச்சேரிகளைக் கேட்கும பொழுது ஏற்பட்ட ஆர்வமே தனது மிருதங்க ஆசைக்குக் காரணம என வும சண்முகமபிள்ளை கூறினார்-

மிருதங்கக் கலைஞரான சண்முகமபிள்ளையிடம கேட்கப்

ஞாபகத்தில் சண்முகம்பிள்ளையும நம கண் முன் தோன்றினார்!

இவரது துணைவியார் காலஞ்சென்ற விஜயலக்ஷ்மி சிறந்த பாடகி மட்டும அன்றி நடனத்திலும திறமையுள்ளவர்!

மகள் வாசுகியோ நாடறிந்த நர்த்தகி! மகன் விஸ்வநாதன் ரூபவாஹினிக் கலைஞர்- சுருக்கமாகச் சொல்லப் போனால் தந்தை — தாய் — மகள் — மகன் நால்வருமே நல்லதொரு கலைக் குடுமபத்தைச் சேர்ந்தவர்களாவர்!

இசை உலகுக்குப் பெரும பங்காற்றிய பிரபல கலைஞரான சண்முகமபிள்ளை வானொலி மூலமாக எத்தனையோ கச்சேரிகளுக்கு வாசித்திருக்கிறார்!

அவர் வாசித்த லயவின்யாசத்தில் ஒரு பகுதியையும இந்நிகழ்ச்சியின் கடைசியில் ஒலிபரப்பினார்கள்.

ஆனால் இந்தத் தெரிவுதான் நன்கு சோபிக்கவில்லை! என்னும நல்லதொரு பேட்டியைக் கேட்ட திருப்தி இக் "கலையகத்தில் கலைஞர்" நிகழ்ச்சி மூலம நிறைவேறியது!

## தயாரிப்பு: சஞ்ஜயன்

## குவைட் குமாரி குதூகல நன்றி

அன்பார்ந்த சஞ்ஜயருக்கு!

எமது ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தால் அளிக்கப்பட்ட "இது எமது நாடு" என்ற தலைப்பிலான ஒரு விவரணச் சித்திரத்தைக் குவைட் நாட்டின் தொலைக்காட்சி மூலமாகப் பார்க்கும சந்தர்ப்பம அண்மையில் கிட்டியது!

இம்மாதம 4 ஆம திகதி

சுவையான அமசங்களைத் தொகுத்து குவைட் நாட்டு மக்களின் மனதில் எமது நாட்டின் சிறப்புக்களை வெளிப்படுத்திய ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்கு எனது மகிழ்ச்சி நன்றிகளையும பாராட்டுகளையும சிந்தாமணியின் "ஒலி ஒளி உருவம" பகுதி மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்!

— செல்வி ராணி முருகையா, குவைட்-

## ரூபவாஹினியின்

# ஓ ப்ரியா ப்ரியா என் ப்ரியா ப்ரியா

(ஆண்) ஓ ப்ரியா ப்ரியா... என் ப்ரியா ப்ரியா... ஏழை காதல் வாழுமோ... இருளும் ஒளியும சேருமோ... நீயோர் ஓரம நானோர் ஓரம... கானல் நீரால் தாகம தீராத...



(பெண்) ஓ ப்ரியா ப்ரியா... உன் ப்ரியா ப்ரியா... ஓ ப்ரியா ப்ரியா... உன் ப்ரியா ப்ரியா... இணைந்திடாது போவதோ வானம பூமியாவதோ... காலம சிறிது காதல் மனது... தேவன் நீதான் போனால் விடாது...

(ஆ) தேடும கண்களே தேம பூம் நெஞ்சமே... வீடும பொய்யடி வாழ்வும பொய்யடி...

(பெ) அன்பு கொண்ட கண்களும் ஆசை கொண்ட நெஞ்சமும... ஆணையிட்டு மாறுமோ... பெண்மை தாங்குமோ...

(ஆ) ராஜமங்கை கண்களே... எங்கும என்னை மொய்ப்பதோ... வாடும் ஏழை இங்கு ஓர் பாவியல்லவோ...

(பெ) எதனாலும் ஒரு நாளும மறையாத பிரேமையும...

(ஆ) எரித்தாலும மரித்தாலும் விலகாத பாசமோ...

(பெ) கன்னி மானும உன்னுடன்... கலந்த தென்ன பாவமோ... காதல் என்ன காற்றிலே... தொலைந்து போகும் நேசமோ... அமமாடி நான் ஏங்கவோ... ஓ நீ வா வா...

(ஆ) ஓ ப்ரியா ப்ரியா... என் ப்ரியா ப்ரியா...

(பெ) ஓ ப்ரியா ப்ரியா... உன்

கண்ணன் ராச லீலைகள்... பருவமோகம் தந்தது பாவமல்லவே —

(ஆ) சாஜஹானின் காதலி தாஜுமஹல் பூங்கிளி... பாசம வைத்த பாவம் தான்... சாவும வந்தது...

(பெ) இருண்டாலே இரவாகு விளைகின்ற பிரேமையே...

(ஆ) அடி நீயே பலியாகு வருகின்ற பெண்மையே...

(பெ) விழியில் பூக்கும நேசமாய்... புனிதமான பந்தமாய்... பேசும் இந்தப் பாசமே... இங்கு வெற்றி கொள்ளுமே... இளங்கன்னி உன்னுடன் கூட வா வா...

(ஆ) ஓ ப்ரியா ப்ரியா... என் ப்ரியா ப்ரியா...

(பெ) ஓ ப்ரியா ப்ரியா... உன் ப்ரியா ப்ரியா...

(ஆ) ஏக்கமென்ன பைங்கிளி... என்னை வந்து சேரடி...

(பெ) நெஞ்சிரண்டு நாளும் பாட... காவல் தாண்டி பூவை இங்காட... காதல் கீர்த்தனம காணும் மங்களம பிரேமை நாடகம பெண்மை ஆடிடும்...

## கவரும் கானம்

★

இப்பாடலை இயற்றியவர் கவிஞர் வாலி — இசை இளையராஜா — பாடியவர்கள் மனோ...சித்ரா — இப்பாடல் காட்சியில் நடித்தவர்கள் நாகார்ஜுன்...கிரிஜா — படம "இதயத்தைத் திருடாதே"

இப்பாடல் வரிகளை விரும்பியவர்கள் கல்கிஸையைச் சேர்ந்த மணிமாறன்... மற்றும் பமபலப்பிட்டியைச் சேர்ந்த மைதிலி * ஜுமானா * ரிஸ்நியா * ரபாய் * சயீதா * ரியாஸா * ரிஹானா * செரீன் * சகீனத் * பர்சானா — தெஹிவளையைச் சேர்ந்த எஸ் நரேஷன் * ஜீவகலா * ப்ரியதர்ஷினி * எம கே சிற்பவானந்தன் * வள்ளுவர் * டோஸன் * ராணி * ருஜன் — கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த பிரபாசினி * ஜெயந்தி * கலைவாணி * ஷர்மிளா * சீதா * நிவாசினி —

# கண்டியில் எம் ஸி ஸி
# Computer Education
IN Association With
## Navaloka Computers

**Basic Programming Language**

கொம்பியூட்டர் துறை சம்பந்தமான அறிவுரைகளுடன் கூடிய பேஸிக் புரோகிராமிங் விரிவுரைகள்

* DURATION: 4 Months
* PRACTICAL 62 Hrs

**Diploma in Computer Programming**

STAGE I (BEGINNERS) COURSE INCLUDES BASIC DATA PROCESSING dBASE III —

* DURATION: 6 Months * PRACTICAL: 84 Hrs

STAGE II (ADVANCED) COURSE INCLUDES LOTUS 1—2—3, COBOL/PASCAL AND WORD PROCESSING

* DURATION: 6 Months* PRACTICAL: 94 Hrs

வகுப்புகள் ஆரம்பம்- பெப்ரவரி 21, 24, 25 தினங்களில்

பாடநெறி விபரங்கள்-

* விரும்பிய மொழியில் விரிவுரைகள்
* விரும்பிய கொம்பியூட்டர் மொழியை தெரிவு செய்தல்
* தவணை முறை கட்டணம்
* எங்கள் பாடநெறியில் பூரண புரோகிராமிங், பைல் ஹான்டிங் புரஜெக்ட் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளது.
* எல்லையற்ற கொம்பியூட்டர் பிரக்றிக்கல்ஸ் (ஐ பி எம் அல் கொம்பற்றிபிள்களில்)
* பாடநெறி முடிவில் அங்கீகாரம் பெற்ற நவலோக்க சான்றிதழ்
* தனிப்பட்ட ரீதியிலான பாடநெறிகள்
* பள்ளி மாணவர்கள், தொழில் வாய்ப்பை எதிர்நோக்கியுள்ளவர்கள், ஜீ ஸீ ஈ ஓ/எல், ஏ/எல் பரீட்சை எழுதியவர்கள் அனைவருக்குமான பாடநெறிகள்
* பெண்களுக்கான தனிப்பட்ட வகுப்புகள்

மேலதிக விபரங்களுக்கு-

# Mahens Computer Centre
IN ASSOCIATION WITH NAVALOKA COMPUTERS

Y M C A Building, Kotugodelle Vidiya, Kandy

Phone: 23529—08 R No, 4553


மிருதங்கக் கலைஞரான சண்முகம்பிள்ளையிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சண்முகம் பிள்ளையும் சளைக்காமல் பதில் அளித்தார்!

அவரைப் பற்றியும் அவர் கையாண்ட மிருதங்கம் பற்றிய தாகவுமே இருந்த இப்பேட்டி நிகழ்ச்சிதான் "கலையகத்தில் கலைஞர்" என்ற தலைப்புக்கு மிக மிகப் பொருத்தமாக இருந்தது!

பிரபல தென்னிந்தியக் கலைஞர்களைப் பற்றி எல்லாம் அவர் கூறிய பொழுது, அந்த நாள்

இம்மாதம் 4 ஆம் திகதி இரவு ஒளிபரப்பப்பட்ட இவ்விவரணச் சித்திரம் ஆங்கில மொழித் தொகுப்பாக இருந்தது!

அனுராதபுரத்தின் பண்டைய ஓவியங்கள் – அவ்வூர் விவசாயிகளின் வாழ்க்கை முறை – மகாவலி – விக்டோரியா நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சிங்களக் கண்டிய நடனம் – தமிழ் பரதநாட்டியம் – குறிப்பாகத் தமிழ் பரத நாட்டியம் "ஸ்ரீலங்கா" என்ற பாடலுக்குப் பொருத்தமாக அமைந்திருந்தது!

## ரூபவாஹினியின் தமிழ் நிகழ்ச்சிகள் 19 முதல் 24 வரை

| | |
|---|---|
| திங்கள் – வளரும் உலகம் | 5–30 |
| தமிழ்ப் பாடல்கள் | 6–15 |
| தமிழ் நாடகம் | 6–55 |
| செவ்வாய் – கலையரங்கம் | 6–55 |
| புதன் – ராகபாவம் | 5–30 |
| உரை நிகழ்ச்சி | 6–15 |
| வியாழன் – ஊர்க்கோலம் | 6–55 |
| வெள்ளி – காதம்பரி | 6–55 |
| சனி – சைவ நீதி | 5–30 |
| தமிழ்ப் பாடல்கள் | 6–15 |

ப்ரியா ப்ரியா...

(பெ) ஓ ப்ரியா ப்ரியா... உன் ப்ரியா ப்ரியா...

(பெ) காளிதாசன் ஏடுகள்...

ஜெயந்தி * கலைவாணி * ஷர்மிளா * சீதா * நிவாசினி — ராபி — மருதானையைச் சேர்ந்த பௌஸ் பார்ஹான்!


## தேவை நேரடி வியாபாரிகள்

அங்ளோ ஏஷியன் டிஸ்ட்றிபியூட்டர்ஸ் லிமிட்டெட், தன் விநியோக உரிமைப் பொருள்களான பேர்மா ஷாப், பேர்மா ஷாப் சுப்பிரிமோ, ஷாப் ப்ளூ, ஷாப் ஸ்டெயின்லஸ், டிம்பிள், வில்கின்ஸன் ஸ்வேட் சவர உபகரணங்கள், வீஓ5 கேசப் பராமரிப்புப் பொருள்கள், அங்ளோ ஏஷியன் அழகு சாதனங்கள், மனைப் பாவனை உற்பத்திகள் உட்பட்ட பல்வேறு பாவனைச் சாமான்களின் விற்பனைக்கு, நேரடி வியாபாரிகளைக் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் கீழ் வரும் நகரங்களிலும் நியமனம் செய்ய விரும்புகிறது.

| | | |
|---|---|---|
| பாணந்துறை | புத்தளம் | ஹட்டன் |
| அம்பலாங்கொடை | மன்னார் | நாவலப்பிட்டி |
| காலி | அனுராதபுரம் | பதுளை |
| மாத்தறை | வவுனியா | மொனராகலை |
| அம்பலாந்தோட்டை | யாழ்ப்பாணம் | கம்பகா |
| திசமாராமை | திருகோணமலை | நீர்கொழும்பு |
| கேகாலை | மட்டக்களப்பு | குருநாகல் |
| மாத்தளை | அம்பாறை | இரத்தினபுரி |

RJA 9720

வியாபாரிகளுக்குக் கவர்ச்சியான விலைக்கழிவு

விற்பனை அதிபர்

அங்ளோ ஏஷியன் டிஸ்ட்றிபியூட்டர்ஸ் லிமிட்டெட்

95, ஹைட்பாக் கோணர்,

கொழும்பு 2.

த.பெ. எண் 1032

Anglo-Asian Distributors Ltd.



# சவூதி-டுபாய்–அபுதாபி–குவைட்–ஓமான்–சிங்கப்பூர்

## வெகு விரைவில் பயணம்

**சவூதி:-** வீட்டுப் பணிப்பெண்கள் ஒரு கிழமையில் இலவச பயணம்
வயது எல்லை 30 — 40 இடையில்

## குவைட்

★ கனரக வாகன டிரைவர்ஸ் — 80 கு தினர்
★ லைட் வாகன டிரைவர்ஸ் — 60 கு தினர்
★ வீல் லோடர் டிரைவர்ஸ் — 100 கு தினர்
(குவைட் லைசன் தேவை)
★ வீட்டுப் பணிப்பெண்கள் — 30 கு தினர்
★ டெய்லர்ஸ் (ஆண்/பெண்) — 50 கு தினர்
★ வீட்டுச் சமையற்காரர் — 35 கு தினர்

## டுபாய்--அபுதாபி-சார்ஜா

★ வீட்டுப் பணிப்பெண்கள் — 400 திராமஸ்
★ லேடி டிரைவர்ஸ் — 800 திராமஸ்
★ சேல்ஸ் கேள்ஸ் — 800 திராமஸ்
★ லேடி செக்ரட்ரி — 1000 திராமஸ்
★ வீட்டுச் சமையற்காரர் — 500 திராமஸ்

## ஓமான்--சிங்கப்பூர்

[ஆங்கில அறிவுள்ள வீட்டுப் பணிப்பெண்களுக்கு முன்னுரிமையும், அதிக சம்பளமும் வழங்கப்படும்]

வயது- 22 — 35 க்கும் இடையில்

# AMEEN ENTERPRISES

511 பிரின்ஸ் ஒப் வேல்ஸ் அவெனியு
கொழும்பு—14

அனுமதி இல 625/14[15[17[18[23

(வெளியிடங்களிலிருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்)

# மலையக மாருதம்



தோட்டத் தொழிலாளர்கள்—

# சொந்த வீடுகளில் வாழவழி செய்வீர்

## மலையக காணி பகிர்ந்தளிப்பை முறையாக நடத்தக் கோரிக்கை

தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் கொத்தடிமைகளாக தோட்டத்து லயன்களிலேயேதான் வாழ வேண்டுமா?

அவர்களும் ஏன் ஏனைய சமூகத்தவர்களோடு சமமாக சொந்தக் காணிகளிலும் சொந்த வீடுகளிலும் வாழக் கூடாது.

இவர்களுக்கும் இந்த ஆசை உண்டு. ஆனால் அதனை நிறைவு செய்து வைப்பது யார்?

எல்லா தொழிற் சங்கங்களுமே தோட்டத் தொழிலாளர்களின் சுபீட்ச வாழ்வுக்காகவே பாடுபடுகின்றோம்; அவர்களுடைய உயர்வே எங்களுடைய லட்சியம் என்று கடந்த 50 வருடங்களுக்கு மேல் கோஷம் எழுப்பிக் கொண்டே இருக்கின்றன. ஆனால் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை எழும்பி உயர்ந்ததாக தெரியவில்லை.

தொழிலாளர் மத்தியில் கல்வி அபிவிருத்தி இல்லை. பொருளாதார அபிவிருத்தி இல்லை. மதுப் பழக்கம் அதிகரித்து விட்டது. வேலை வாய்ப்பு இல்லை என்று மட்டும் குரல் எழுப்பி விட்டால் பிரச்சினைகள் தீர்ந்து விடாது. குறைகளை மட்டும் சுட்டிக் காட்டிக் கொண்டே இருந்தால் அங்கு நிறைவு ஏற்படப் போவதில்லை.

அவர்களுடைய அடிப்படைத் தேவை அறிந்து செயல்படுவதே சிறப்பாகும்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தையே கட்டிக் காப்பவர்கள் தோட்டத் தொழிலாளர்கள் தான் என்பதை எவருமே மறுக்க முடியாது.

— இரா. புத்திரசிகாமணி —

ஆனால் அந்த தோட்டத் தொழிலாளர்களில் எத்தனை பேர் சொந்த வீடுகளில் வாழ்கின்றனர். எத்தனை பேர் சொந்தக் காணிகளில் விவசாயம் செய்கின்றனர்.

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச இன்று காணி ஆணைக்குழு ஒன்றை அமைத்து, காணியற்றோர் ... பட்டவர்களுக்கு தோட்டக் காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதே போன்று மண் சரிவுகளினாலும் ஏனைய நாசகார சக்திகளினாலும் பாதிக்கப்பட்ட எத்தனையோ தமிழ் குடும்பங்கள் இன்றும் கோயில்களிலும் தோட்டப் பாடசாலைகளிலும் அகதிகளாக இருக்கின்றனர்.

இந்த நிலைமை மாற வேண்டும்- இப்பொழுது நாட்டத்தில் இயங்கும் தோட்டக் காணிகளையும், தரிசு நிலங்களையும் பகிர்ந்தளிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விடக் கூடாது—

தகுதியுடைய தொழிலாளர்

# அறிவாளிகள் வெளியேற்றம்

சோவியத் யூனியனையும், பிற நாடுகளையும் பிரித்து வைத்த "இரும்புத் திரை" இப்போது மறைந்து விட்டது, எனவே மேன் மேலும் பிரச்சினைகளைச் சோவியத் அரசு சமாளிக்க வேண்டியுள்ளது.

"அறிவாளிகள் வெளியேற்றம்" என்ற பிரச்சினையை - இதற்கு முன்பு தன்னை அச்சுறுத்தாத ஒரு பிரச்சினை - சோவியத் யூனியன் இப்போது எதிர் நோக்குகிறது.

அதிகார வர்க்கத்தின் முட்டுக் கட்டைகளால் கஷ்டப்படும் விஞ்ஞானிகளும் இன்ஜினியர்களும் தமது கண்டுபிடிப்புக்களை வெளிநாடுகளுக்கு விற்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. மேலும் அவர்களுக்கு வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு உண்டு. ஆகவே அவர்கள் வெளியேறக்கூடும்,

சோவியத் யூனியன் விஞ்ஞானத் துறையில் பாரிய முன்னேற்றம் அடைந்த நாடாகும். சோவியத் விஞ்ஞானிகளின் 18,000 முக்கிய கண்டுபிடிப்புகள் 47 நாடுகளில் "பேட்டன்" செய்யப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் மாத்திரம் அந்நாட்டின் 5111 ஆய்வுக் கூடங்களில் 1342000 ஊழியர்கள் பணியாற்றினர்.

அறிவாளிகளின் வெளியேற்றத்தைத் தடுப்பதற்கு, விஞ்ஞான வளர்ச்சியில் நாடு பெருமளவு முதலீடு செய்ய வேண்டும் என்று நிபுணர்கள் ஆலோசனை கூறியுள்ளனர்.

(ம)

## பிறந்த நாள் வாழ்த்து



முகம்மது பாசில்

காத்தான்குடி-5, பதுரியா ஒழுங்கையைச் சேர்ந்த அலாவுதீன் - பௌசியா தம்பதிகளின் செல்வப் புதல்வன் முகம்மது பாசில் தனது முதலாவது பிறந்த நாளை 17-2-90 இல் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக்

## பிறந்த நாள் வாழ்த்து



முஹம்மட் நுஸ்கி

இல 735, மல்வானஹின்னை, அக்குறணை நவீர் - நுஸ்ரத் தம்பதிகளின் செல்வப் புதல்வன் முஹம்மட் நுஸ்கி தனது இரண்டாவது பிறந்தநாளை சென்ற 15-2-90 இல் தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு டெட்டா, ஆசை மமா, அப்பா, உம்மம்மா, பூ அங்கல், பாய்ஸா ஆன்டி, பரீனா ஆன்டி, சாச்சா, மாஸ்டர் அங்கல், கல்ஹின்னை அப்பா, வாப்புமமா, மின்னா தாத்தா குடும்பத்தினர், அகீலா

## பிறந்த நாள் வாழ்த்து



சிந்துப்பிரியா

பிரான்ஸ், எவ்ரிகொர்கோரன்ஸ் செல்வராஜா - பவுலின் தம்பதிகளின் செல்வப் புதல்வி சிந்துப்பிரியா பாரீஸில் சித்தப்பா அமலோற்பவநாதனுடன் நான்காவது பிறந்தநாளைச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

பிரான்ஸிலுள்ள அப்பா, அம்மா, சிந்தியா அக்கா, அண்ணன்மார் அமல்ராஜ், ரோஷான், தம்பிமார் சிந்துராஜ், டிரோஷன், சித்தப்பாமார் நாதன், பாக்கியராசா, பிரபாச் சித்தி, இலங்கையிலிருந்து அப்பப்பா, அப்பம்மா, சித்திமார் புளோரிடா, மேரி மட்டில்டா, சகாயமலர் மாமி, மச்சாள்மார், ரூபா, சொரூபா, அக்காமார் புளோசிற்றா, றோசிற்றா, ரூபசிற்றா, சவூதியிலிருந்து யேசுராஜா சித்தப்பா, இத்தாலியிலிருந்து அன்ரன் மாமா, இந்தியாவிலிருந்து ஏர்வாடி ராதாகிருஷ்ணன் மாமா, வீஜீப்பி சந்தோஷம், சினி ஆர்ட்டிஸ் ராகேஸ் அங்கிள், உற்றார், உறவினர், நண்பர்கள் புனித லூர்து அன்னை அருள் பெற்று சிந்துப்

## ...தலினைச் சாடிடுவோம்

— நீலாமாலன் —

அக்கினியின் சுவாலைகளை ஆக்கிப் படைப்போம்
பக்கத் திருப்பவரைப் பார்த்துச் சிரிப்போம்
எக்கணமும்... எப்பொழுதும்... உழைத்துச்
சுகிப்போம்
மொக்கவிழும் கூதலினை வெட்டிச் சரிப்போம்

★

அம்புஜத்தின் (இ)ரத்தத்தை அட்டை குடிக்கும்
ஆயின்அவள் கைவிரல்கள் கொழுந்தே எடுக்கும்
ஐம்புலிங்கம் போடும்உரம் மரத்தை வளர்க்கும்
நாளுமிதே கூதலினால் உடலே சிலிர்க்கும்!

★

கிள்ளுகிற தேயிலையை உலகே குடிக்கும்
கிள்ளுபவர் அடுக்களையில் பூனை படுக்கும்
எள்ளிநகை யாடிஉடல் உழைத்துக் கொடுக்கும்
அள்ளிநிதம் கூதலினை வாடை தொடுக்கும்

★

கீழிருந்து கதிரெழுந்த கூதல் சரிக்கும்
கிடுகிடுக்கும் உடலதனைப் பார்த்துக் களிக்கும்
நாளைவரும் கதிரெனவே உள்ளம் துடிக்கும்
நாளைகதிர் வரும்வரைஇக் கூதல் முடிப்போம்

...ரென்றை அமைத்து, ... ருக்கு காணி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இப்படி வழங்கப்படும் காணிகளும் இன விகிதாசார அடிப்படையிலேயே வழங்கப்படும் என்று திட்டவட்டமாக கூறி இருக்கின்றார்.

இந்த சந்தர்ப்பத்தை தோட்டத் தொழிலாளர்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதுவரை காலமும், பிரஜாவுரிமை இல்லையே, நமக்கு யார் காணிகளை தரப் போகின்றார்கள் என்ற ஒரு நிலை இருந்து வந்தது என்னவோ உண்மைதான்.

ஆனால் இப்பொழுது அந்தப் பிரச்சினையே இல்லை. எல்லோருமே இந்த நாட்டுப் பிரஜைகள்.

காலம் காலமாக நாம் உழைத்து பண்படுத்தி பாதுகாத்து வந்த தோட்டக் காணிகளில் ஏனையோர் குடியமர்த்தப்படுகின்றனர்.

மண் சரிவுகளினாலும், வன்செயல்களினாலும் பாதிக்கப்... கள் எல்லோருமே இதற்கு தமது விண்ணப்பங்களை நேரம் காலத்தோடு சமர்ப்பிக்க வேண்டும்.

காணிகளுக்கு விண்ணப்பம் செய்வதற்கு தோட்டத் தொழிலாளர்களை உற்சாகப்படுத்த வேண்டும். காணிக் கச்சேரிகள் நடைபெறும் போது அங்கே சென்று எம்மவர்களுக்குக் காணிகள் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

இன்றைய நிலையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு பொறுப்பு வாய்ந்த தொழிற் சங்கங்கள் செய்ய வேண்டிய அதி முக்கிய கடமை இதுவேயாகும்.

தோட்டத் தொழிலாளர்களும் சொந்தக் காணிகளிலும் சொந்த வீடுகளிலும் நிம்மதியாக வாழக் கூடிய நிலையை ஏற்படுத்துவதே காலம் காலமாக தொழிற் சங்கங்களுக்கு சந்தா செலுத்தி வரும் அப்பாவி தோட்டத் தொழிலாளர்களுக்குச் செய்யப் போகும் பேருதவியாகும். (த)

# றப்பர் உற்பத்தி வீழ்ச்சி அடையாதிருக்க முயற்சி

நலிந்த போயிருக்கும் றப்பர் ஏற்றுமதியை சீரமைக்கும் பொருட்டு பலவித அபிவிருத்தி திட்டங்களை அரசு செயல்படுத்த உள்ளது. முன்பு ஒரு காலத்தில் இலங்கையின் ஏற்றுமதி பொருட்களில் றப்பர் முதலிடத்தை பெற்றிருந்தது.

வர்த்தக கப்பல்துறை அமைச்சு இருதரப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்களை ஏனைய நாடுகளுடன் செயல்படுத்த உள்ளது. இருதரப்பட்ட ஒப்பந்தத்தை சீனாவுடனும் செய்வதற்கு முன்வந்துள்ளது.

இலங்கைக்கும் சீனாவுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டு ஒப்பந்தம் அமுலில் இருந்த பொழுது இலங்கையின் றப்பர் ஏற்றுமதிக்கு நல்லசந்தை இருந்து வந்தது.

சீனாவில் இருந்து அரிசியை இலங்கைக்கு இறக்குமதி செய்யவும் இலங்கையில் இருந்து றப்பரை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதுமே அந்த ஒப்பந்தமாகும்.

1981 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது அதன் பின்னர் இலங்கையின் றப்பர் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தது. இவ் வீழ்ச்சி இதுவரையிலும் விருத்தியடையவில்லை.

1988 ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதியில் றப்பர் ஏற்றுமதி 10 வீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இக்கால கட்டத்தில் றப்பர் ஏற்றுமதி 1983 மில்லியன் ரூபாயிலிருந்த 1776 ரூபா வரை வீழ்ச்சியடைந்தது.

ஏற்றுமதி செய்யப்பட்ட றப்பர் தொகையும், 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதாவது 110 மில்லியன் றப்பர் கிலோ கிராமிலிருந்து 50 மில்லியன் கிலோ கிராமிற்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

1988ஆம் 1989ஆம் ஆண்டுகளில் றப்பர் உற்பத்தியில் 11 வீதம் வீழ்ச்சியைக் கண்டது. தனியார் றப்பர் தோட்ட சொந்தக்காரர்களும் அரசின் தோட்டங்களிலும், இவ் வீழ்ச்சி காணப்பட்டது.

மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையும் பெருந்தோட்ட சபையின் றப்பர் உற்பத்தியிலும் 11 வீதம் வீழ்ச்சியடைந்தது. 1989 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இவ் வீழ்ச்சி காணப்பட்டது.

தனியார் றப்பர் தோட்டங்களின் உற்பத்தியும் 9 வீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1988 ஆம் ஆண்டின் உற்பத்தியிலும் பார்க்க 9% வீழ்ச்சியடைந்துள்ளது.

நாட்டின் 1989 ஆம் ஆண்டின் வருட ஆரம்பத்தில் கடுமையான வரட்சியும் வெள்ளங்களும் ஏற்பட்டதினால் றப்பர் உற்பத்தியில் வீழ்ச்சி காணப்பட்டது.

றப்பர் உற்பத்தியில் செலவு அதிகரிக்கப்பட்டது. தனியார் றப்பர் தோட்ட சொந்தக்காரர்கள் உற்பத்திச் செலவை 1989 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் 6 வீதத்தினால் அதிகரித்தனர். ...

அதேவேளை மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையும், அரசு பெருந்தோட்ட நிறுவனமும் $2\frac{1}{2}$ வீதத்தினால் அதிகரித்தனர். இது 1988 ஆம் ஆண்டு செலவினத்தை விட 24 வீதம் கூடியதாகும்.

தனியார் துறை றப்பர் தோட்ட சொந்தக்காரர்களும் மற்றும் ஏற்றுமதியாளர்களும் ஏற்றுமதி தீர்வையை சுகர்மாற்ற கேட்டுள்ளார்கள். இதனால் றப்பர் ஏற்றுமதியை அதிகரிக்கலாம் என்று அவர்கள் கருதுகின்றார்கள்.

றப்பர் அபிவிருத்தி மானியம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இதனால் றப்பர் உற்பத்தி பாதிக்கப்படலாம் என்று கூறப்படுகின்றது. (த-455)

...தொண்டாடினார்.

இவரை உம்மா, வாப்பா, உம்மம்மா, மூத்தவாப்பா, அப்பா, மாமாமார்களான நஸார், சமீம், நஜீம், நவாஸ், நளீம், சாச்சிமார்களான நபீலா, நுஸ்ரத் பேகம், வகீலா ஆகியோர் வாழ்த்தியுள்ளார்கள்.

வி இ 031870

...மச்சான் குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் நல்லருளால் செறிந்த அறிவும் நிறைந்த செல்வமும் பெற்று வளமுடன் வாழ வாழ்த்தியுள்ளார்கள்.

வி இ 029080

வி இ 031447

## பிறந்த நாள் வாழ்த்து



அர்ஷாட் அஹமட்

அலுப்பொத்தையைச் சேர்ந்த அஸ்ரப் - ஜரீனா பேகம் தம்பதிகளின் செல்வப் புதல்வன் அர்ஷாட் அஹமட் தனது முதலாவது பிறந்த தினத்தை 13-02-1990 செவ்வாய்க்கிழமை கொண்டாடினார்.

அர்ஷாட்டை அன்பு டடா, அன்பு மமி, பூ தாத்தா, அலுப்பொத்தை மாமா, மாமி, அம்பாந்தொட்டை உம்மம்மா, அப்பா, மாமாமார், மாமிமார், சாச்சிமார், சாச்சாமார், பெரியம்மா, சலூதி பெரியப்பா, திக்குவல்லை டடா உம்மா, மாமிமார், மாமாமார், சாச்சா, பதுளை மஹ்ரூபா தாத்தா, மச்சான் மற்றும் அனைவரும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்தியுள்ளார்கள்.

வி இ 031507

## பிறந்த நாள் வாழ்த்து



மொஹமட் அனஸ்

41/12, முஹந்திரம் வீதி, கொழும்பு-12 ஐச் சேர்ந்த கிதுர் - மர்சூகா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் மொஹமட் அனஸ் தனது முதலாவது பிறந்த தினத்தை நாளை (19-02-90) அவரது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

அவரை உம்மா, வாப்பா, வாப்பம்மா, உம்மம்மா, அப்பாமார்கள், பெரியப்பாமார்கள், பெரியம்மாமார்கள், சாச்சிமார்கள், சாச்சாமார்கள், மாமாமார்கள், மாமிமார்கள், மச்சான்மார்கள், மதினிமார்கள், விசேஷமாக ஜப்பானிலிருந்து நௌஷாட் மாமா ஆகியோரும் மொஹமட் அனஸை சீரும் சிறப்பும் பெற்று சகல கலைகளும் கற்று பல்லாண்டு வாழ்கவென அன்புடன் வாழ்த்துகிறார்கள்.

வி இ 031436

## பிறந்த நாள் வாழ்த்து



செல்வன் உமேஸ்வரன்

இல 105, பிட்டரவுன் வீதி, இரத்தினபுரியைச் சேர்ந்த விஜயராஜா - ராஜகுமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் உமேஸ்வரன் தனது இரண்டாவது பிறந்த தினத்தை 18-2-1990 இல் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

உமேஸ்வரனை டெடி, மமி, நிவித்திகலை பெரிய மாமா, தாத்தா, பாட்டி, அத்தை, சித்திமார்கள், மாத்துகம மாமா, பிரபா மாமா, கொழும்பு நடா மாமா, வெல்லம்பிடிய அப்பத்தா, அத்தைமார்கள், மோஹன் பெரிய டெடி, சுப்பிரமணியம் தாத்தா, வட்டவளை லொனக்கைச் சேர்ந்த பெரிய டெடி குடும்பத்தார்கள், கொழும்பு சரவணாஸ் ஜுவலர்ஸ் கணேஷன் சின்ன டெடி குடும்பத்தார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் உமேஸ்வரனை ஸ்ரீ முத்து விநாயகர் அருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்.

வி இ 031419

# வறிய நாடுகளுக்கு பொருளாதார உதவி

## ஒருமித்து வல்லரசுகள் வழங்க வலியுறுத்து

அமெரிக்காவும் சோவியத் யூனியனும் மூன்றாம உலக நாடுகளுக்கு பொருளாதார உதவி வழங்கும்போது சித்தாந்த தத்துவார்த்த விஷயங்களை ஒரு புறத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு உதவுவதற்கு முன்வர வேண்டும் – இதில் அரசியல் அம்சங்களோ அல்லது இராணுவக் கேந்திர பிரச்சினைகளோ தலையிடக் கூடாது–

இதற்கு வறிய நாடுகளில் நல்ல வரவேற்பு இருக்கும–

மேலும் அமெரிக்க–சோவியத் உறவுகள் மேலும் மேலும் சீரடைந்துவருமபோது மூன்றாம உலக நாடுகள் புறக்கணிக்கப்பட்டு அவற்றுக்கு வழக்கமாக வருகிற உதவிகள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குத் திசை திருப்பபபடு என்ற சந்தேகம பரவலாக உள்ளது–

ஆரமபத்தில் குறிப்பிடப்பட்ட கருத்து அமெரிக்க சோவியத் அறிஞர்கள் கூட்டாக வெளியிட்டுள்ள கருத்தாகவுள்ளது–

வாஷிங்டன் பல்கலைக்கழகமும உலக பொருளாதாரம மற்றும சர்வதேச உறவுகள் பற்றிய நிறுவனமும் கூட்டாக நடத்திய ஆராய்ச்சியில் இக் கருத்து வெளியிடப் பட்டுள்ளது–

இரண்டு வல்லரசுகளுக்கிடையிலும் இராணுவ சம்பந்தமான விஷயங்கள் குறித்து உடன்பாடு அதிகரித்துவரு போது "அபிவிருத்திக்காக ஆயுத பரிகரணம்" என்ற கோட்பாட்டை அமுல் படுத்துவது சாத்தியமாகி வருகிறது–

மேலும் ஆயுத பரிகரணம மூலம் மிச்சப்படுத்தப்படும பணம வறிய நாடுகளுக்கு அபிவிருத்தி வேலைகளுக்காகக் கொடுக்கப் படு போது புதிய பரிமாணம ஏற்படும்–

அதாவது இரண்டு வல்லரசுகளும் கூட்டாக உதவி வழங்கும போது அபிவிருத்தி திட்டமிட்ட வகையில் அமுல்படுத்தப்பட இடமுண்டு–

இதில் மறைமுகமாக நன்மையொன்றும உண்டு– கிழக்கு...– மேற்கு போராதல் மூன்றாம உலக நாடுகளில் தொடர்வதற்கு இனி வாய்ப்பு இருக்காது– இந்த போட்டி காரணமாக அநேக மூன்றாம உலக நாடுகள் பாதிக் கப்பட்டன–

அமெரிக்காவை ஆதரிப்பதா அல்லது சோவியத் யூனியனைப் பிடித்துக் கொண்டு தொஙகுவதா என்ற தர்மசஙகடம் இக் கோட் பாடு கடைப்பிடிக்கப்பட்டால் மறைந்துவிடும் –

இந்த அமெரிக்க–சோவியத் அறிஞர்களின் ஆய்வில் கலந்து கொண்ட பிரபல பொருளாதார நிபுணர் எலீனா ஆரிப்யேவா ஒரு நல்ல கருத்தை முன்வைத்துள்ளார்

"மிகவும் வளர்ச்சி குறைந்த நாட்டின் பொருளாதார வளத்தைக் கட்டியெழுப்புவதைத் துரிதப்படுத்துவதை நோக்கமாக பொருளாதார உதவி கொண்டிருக்க வேண்டும் –

இதில் சம்பந்தப்பட்ட மூன்றா உலக நாடுகளின் அரசுகள்



நீர்வாழ் பிராணிகளும தாவரஙகளும தண்ணீருக்கடியில் வாழ்ந்து வந்தாலும அவற்றுக்கு பிராணவாயுவைப் போலவே வெளிச்சமும வேண்டும, வீடுகளில் அழகிய மீன்களைத் தொட்டிகளில் வளர்ப்பவர்களும போதமான வெளிச்சத்தை வழஙகினால் தான் மீன்கள் செயற்கைச் சூழ்நிலையை உணராமல் வாழவழி ஏற்படும மீன் தொட்டிகளுக்கு மேல் விளக்குகள் போடப்படுவது வழக்கம. இப்போது நீரின் ஆழத்தினுள் மிகவும இயற்கையான ஒளியை வழஙகவல்ல நவீன விளக்குகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன, இவ் விளக்குகள் நீர்த் தாவரஙகள் மற்றும கடல் பிராணிகளிடையே எவ்வாறான சூழ்நிலைத் தாக்கஙகளை விளைவிக்கின்றன என்பதை விஞ்ஞானி ஒருவர் பரிசோதித்துக் கொண்டிருப் பதை இப்படம காட்டுகிறது.

(ம–032)

# சோதிட சிந்தாமணி

சிந்தாமணி சோதிடர்: திரு. ஆர்வி

[1990—02—18 தொடக்கம 1990—02—24 வரை உள்ள பலாபலன்க்ள்]

**மேஷம்**

அசுவினி பரணி கார்த்திகை 1ஆம கால்

மேஷம்:– கௌரவம தேகாரோக்கியம நன்றாக இருக்கும– ஆயினும வீண் கவலைகளும சந்தேகஙகளும உண்டாகலாம– போட்ட திட்டஙகள் சில தளரக் கூடு – ஆனாலும உறுதி தளராமல் இருப்பது நல்லது– பணப் புழக்கம் நன்றாக இருக்கு – செலவினஙகள் அதிகரித்தாலும சமாளித்துக் கொள்ளலா –

**சிங்கம்**

மகம் பூரம உத்தரம 1ஆம கால்–

சிஙகம்;– பெரியவர்களின் சகாயத்தால் எதிர்காலம நல்ல பிரகாசமுடையதாக இருக்கும– புகழு மகிழ்ச்சியும் ஏற்படும– எதிர்பாராதவிதமாக பணப் பிரச்சினைகள் ஏற்படலாம்– விவசாயத்தில் ஈடுபாடுடையவர்கள் நஷ்டமடைவார்கள்– வெளிநாட்டுப் பிரயாண ஒன்றுக்குத் திட்டம் அமையும– அதால் செல்வாக்கு அதிகரிக்கு –

**தனு**

மூலம பூராடம் உத்தராடம் 1ஆம் கால்–

தனு:– தேகாரோக்கியம அபிவிருத்தியடையும சயன போசன சுகம நன்றாக இருக்கும– வாகன சௌகரியஙகள் நன்றாக அமையும– திரும்பி வராதென்று கணிக்கப்பட்ட பொருள் பணம போன்றவை திரும்பி வந்து சேரும– இல்லத்தில் ஒரு சுபகாரியம இடம்பெறும– அதால் செலவினஙகள் சிறிது அதிகரிக்கும–

**ரிஷபம்** **கன்னி** **மகரம்**

# இனப்பூசல் மலிந்துவிட்டால் ஒரு நாட்டில் அமைதி இராது

இனப் பிரச்சினைகளை விடவும் சிக்கலான பிரச்சினைகள் எதுவுமிருக்க இயலாது–

மக்களை ஒன்றுபடுத்தக் கூடிய மனித நெறிமுறைகள் குறித்து ஒரே விதமான கருத்து இல்லை– எனவே பல்வேற சமுதாயக் குழுக்களும் இனக் குழுக்களும் ஒரே சட்ட ஆவணஙகளி

ரவு பேட்ட முயல்கின்றன–

சோவியத் யூனியனில் நிலவி வரும மூன்ற வகையான இனப் பூசல்களைக் கொண்டு இதனை விளக்க இயலும்–

முதலில் கிரீமியாவில் உள்ள இனப் பூசலைப் பற்றிப் பார்ப்பாம்–

1941 — 44 காலகட்டத்தில்

தோன்றியதே இந்த இனப் பூசல்–

அந்த நடவடிக்கையின் பாதிப்புகள் இன்னும் அகற்றப் படவில்லை– கிரீமியத் தாத்தார்கள் ஜெர்மனியர்கள் குர்த் இனத்தவர்கள் முதலிய சில இனக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் தஙகள் சொந்த இடஙகளுக்குத் திருமபிச் செல்ல

## ரிஷபம்

கார்த்திகை 2 3 4ஆம் கால்கள்— ரோகிணி — மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் கால்கள்—

ரிஷபம்;— குடும்பத்தில் இருந்து வந்த நிம்மதி குறையும் வெளியிடத்து விருந்தினரை உபசரிக்க வேண்டியிருக்கும்— குழந்தைகளுக்கு இரத்தக் காயங்கள் ஏற்படலாம்— உறவினர்கள் விலகி இருப்பார்கள்— நீண்டகால நண்பர் ஒருவரால் உதவி கிடைக்கும் சிறுபயணம் ஒன்றுக்கு இடமுண்டு—

## கன்னி

உத்தரம் 2ஆம் 3ஆம் 4ஆம் கால்கள்— அத்தம் சித்திரை 1 ஆம் கால்கள்—

கன்னி;— குடும்பத்தில் அமைதியும், நிம்மதியும் குறையும்— சொந்த விவகாரங்களில் அந்நியர் தலையீட்டைத் தவிர்க்க வேண்டும் — வாகனங்களினால் வருவாய் அதிகரிக்கும்— நவதானிய வியாபாரிகள் அதிக ஆதாயம் அடைவார்கள்— காதல் விவகாரங்கள் மகிழ்ச்சியாக நடைபெறும்— கலைஞர்கள் புகழடைவார்கள்—

## மகரம்

உத்தராடம் 2 3 4ஆம் கால்கள்— திருவோணம் — அவிட்டம் 1 — 2ஆம் கால்கள்—

மகரம்;— குடும்பத்தில் இருந்து வந்த மனஸ்தாபங்கள் தீர்ந்து அமைதியும் சந்தோஷமும் காணப்படும்— நண்பர்களிடையே ஏற்பட்ட அபிப்பிராய பேதங்கள் அகலும் மறந்திருந்த உறவினர் பணத்துடன் பரிசுப் பொருட்களுடன் வந்து சேருவார்கள்— எதிர்பார்த்திருந்த பிரயாணம் கைகூடும்—

## மிதுனம்

மிருகசிரிடம் 3ஆம் 4ஆம் கால்கள்— திருவாதிரை — புனர்பூசம் 1 2 3ஆம் கால்கள்—

மிதுனம்;— பொருளாதாரம் நன்றாக இருக்கும்— கடன் தொல்லை இல்லை— கொடுக்கல் வாங்கல் நல்ல முறையில் நடைபெறும் — தொழிலில் பிரயாசைபட்டு வேலை செய்ய வேண்டியிருக்கும்— பிறர் பொருட்டு அலைச்சல்களும், வீண் செலவுகளும் ஏற்படும்— காதல் விவகாரத்தில் சில பிரச்சினைகள் ஏற்படலாம் — ப

## துலாம்

சித்திரை 3 4ஆம் கால்கள்— சுவாதி விசாகம் 1 2 3 ஆம் கால்கள்—

துலாம்;— தொழில்—வியாபாரம் முதலியவற்றில் நல்ல வருமான கிடைக்கும்— வியாபாரத்தை விரிவாக்கவும் புது வழிகளில் செய்யக் கூடியதாக இருக்கும்— நண்பர்களுடைய உதவி கிடைக்கும் — கோர்ட் வழக்குகள் தள்ளிப்போடப்படும்— குழந்தையின் சுகயீனம் மனக்கவலையைத் தரும்—

## கும்பம்

அவிட்டம் 3 4 ஆம் கால்கள்— சதயம் — பூரட்டாதி 1 2 3 ஆம் கால்கள்—

கும்பம்;— கௌரவம், புகழ், தேகாரோக்கியம் நன்றாக இருக்கும்— ஆயினும் மனநிலை சரியாக இராது— எதிலும் பயமும் சந்தேகமும் அதிருப்தியும் ஏற்படும்— விருந்தினர்களை உபசரிக்க வேண்டியிருக்கும் செலவினங்கள் அதிகரித்தாலும் சமாளித்துக் கொள்ளலாம்— தாய் வழி உறவினரால் நன்மைகள் உண்டு—

## கடகம்

புனர்பூசம் 4ஆம் கால்— பூசம் ஆயிலியம்—

கடகம்;— பொருளாதாரம் சுமாராக இருக்கும்— ஆனாலும் சந்தோஷ நிகழ்சிகளுக்குக் குறைவில்லை— இராக்கண் விழிக்கக் கூடிய காரியங்களைத் தவிர்ப்பது நல்லது— காதலர்களுக்குப் பெற்றோரின் ஆதரவு கிடைக்கும் திருமண காரியங்களுக்கு அடிகோலப்படும்— வெளியூரிலிருந்து அதிர்ச்சியான செய்தி ஒன்று வரும்—

## விருச்சிகம்

விசாகம் 4ஆம் கால்— அனுஷம் கேட்டை—

விருச்சிகம்;— உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் பதவி உயர்வு போன்றவை ஏற்படலாம்— தூர தேசத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும்— மனைவி மக்கள் அன்பாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள்— கடன் தொல்லை இல்லை— கோர்ட் விவகாரங்கள் வெற்றியாக முடியும்— விவசாயிகள் இலாபம் அடைவார்கள்—

## மீனம்

பூரட்டாதி 4 ஆம் கால்— உத்திரட்டாதி — ரேவதி—

மீனம்;— தாராளமாகப் பணம் இருந்தாலும் அதைச் செலவிட்டுச் சுகபோகங்களை அனுபவிக்க முடியாமல் இருக்கும் வேளா வேளைக்குச் சாப்பாடு கிடைக்காது— வீண் அலைச்சலும் நிம்மதியின்மையும் ஏற்படும் வீடு, நிலம், வாகனம் போன்றவற்றால் வருமானம் உண்டாகலாம்—

---

பொருளாதார உதவி கொண்டிருக்க வேண்டும் —

இதில் சம்பந்தப்பட்ட மூன்றாம் உலக நாடுகளின் அரசுகள் என்ன அரசியல் சித்தாந்தப் போக்குடையவை என்பது பிரதானமல்ல—

(ம)

குறித்து ஒரே விதமான கருத்து இல்லை— எனவே பல்வேறு சமுதாயக் குழுக்களும் இனக் குழுக்களும் ஒரே சட்ட ஆவணங்களிலிருந்து தங்கள் குறிக்கோளுக்குப் பொருந்துகிற விதிகளை எடுத்து வைத்துக் கொண்டு தங்கள் கோரிக்கைகளுக்கு ஆத

முதலில் கிரீமியாவில் உள்ள இனப் பூசலைப் பற்றிப் பார்ப்போம்—

1941 — 44 காலகட்டத்தில் சோவியத் நாட்டின் கிழக்குப் பகுதியில் சில இனத்தவர்களைக் கொண்டு போய் புதிதாக குடியமர்த்தியதன் விளைவாகத்

## சிந்தாமணி எண் சோதிடம்

### NUMEROLOGY

[1990—02— 18 தொடக்கம் 1990—02— 24 வரை உள்ள பலாபலன்கள்]

### 1

1, 10, 19, 28 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

வாக்குவன்மை, புத்தித் திறமை, காரிய சித்தி, பொருட் சேதம், அக்கினி ஆயுத பயம், இனசன உதவி, பிள்ளைகளால் புகழ், செலவு—

அதிஷ்ட நாட்கள்; செவ்வாய் வியாழன்—

### 2

2, 11, 20 29ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

உத்தியோக உயர்ச்சி, பெரியோரால் மதிப்பு, அதிக செலவு அடிக்கடி பணத் தட்டுப்பாடு விருந்தினர் வருகை, அக்கினி ஆயுத பயம் —

அதிஷ்ட நாட்கள்; திங்கள், வியாழன்—

### 3

3, 12, 21 30ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

காரியானுகூலம், மேலதிகாரியால் புகழ், வேலையாட்களின் உதவிப் பேறு, குடும்ப நலக் குறைவு வைத்தியச் செலவு, அதிக யோசனை—

அதிஷ்ட நாட்கள்; ஞாயிறு, சனி—

### 4

4, 13, 22 31ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

அதிகார விருத்தி, புதிய ஸ்தானப்பேறு, இனசனத்தால் உதவி, காதலில் மகிழ்ச்சி, விஷ ஜந்துக்களால் பயம் எதிர்பாராத செலவு, வீண் கவலை—

அதிஷ்ட நாட்கள் திங்கள் செவ்வாய்—

### 5

5, 14, 23 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

வியாபாரத்தில் மந்த நிலை, வேலைப் பளு, பணவரவு, இல்லச் சிறப்பு விருந்தினர் வருகை ஆடம்பரச் செலவுகள், இடமாற்றம், அவமிருத்து பயம்—

அதிஷ்ட நாட்கள்; புதன், வெள்ளி—

### 6

... 6, 15, 24 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

காரியானுகூலம், பெரியோரால் உதவி, புத்திர பந்துக்களால் கவலை, கோபமிகுதி, திருடரால் பயம், மனக் கவலை, காதலில் விரக்தி, பணவரவு—

அதிஷ்ட நாட்கள்; ஞாயிறு, புதன்—

### 7

7, 16, 25 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

அதிகார விருத்தி, நன்மதிப்பு, கௌரவம், சத்ருபயம் பூமியால் இலாபம், சன்மானம், குடும்ப சுகக் குறைவு, வீண் அலைச்சல், அதிக யோசனை—

அதிஷ்ட நாட்கள்; திங்கள், செவ்வாய்—

### 8

8, 17, 26 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

தொழில் உயர்ச்சி, தேக மெலிவு, வாகன சுகம், நண்பர்கள் உதவி, நேத்திர ரோகம் மனக் கவலை, வாக்குக் கலகம், புத்திரர் சுகக் குறைவு—

அதிஷ்ட நாட்கள்; செவ்வாய் புதன், வெள்ளி—

### 9

9, 18, 27 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

பிரயாசத்தினால் காரிய சித்தி, இராசபயம், பூமியால் பலன், இல்லச் சிறப்பு, இனசன கொண்டாட்டம், புத்திரரால் புகழ், திடீர்ப் பயணம்—

அதிஷ்ட நாட்கள்; புதன், சனி—

---

கள் ஜெர்மனியர்கள் குர்த் இனத்தவர்கள் முதலிய சில இனக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல இன்னும் சுதந்திரமற்றவர்களாக இருக்கிறார்கள்—

தங்களது சிவில் உரிமைகள் மீண்டும் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற அவர்களது விருப்பம் முற்றிலும் நியாயமானதே!

ஆனால் வரலாற்று நீதியை நிலை நாட்டுவது என்ற கோட்பாடு இங்கே வரலாற்று எதார்த்தங்களை அங்கீகரித்தல் என்ற கோட்பாட்டுடன் மோதுகிறது—

இரண்டு கோட்பாடுகளுமே நியாயமானவைதான் என்று நாம் அங்கீகரிப்போமானால், நாம் இரண்டுக்கிடையிலும் சிக்கிக்கொண்டு திண்டாட நேரிடும்—

நகோர்னி கரபாக் இனப் பூசலுக்கும் கூட வரலாற்று வேர்கள் உள்ளன— ஸ்டாலின் காலத்தில் பின்பற்றப்பட்ட பிரதேச அமைப்பு முறை நிர்வாக அமைப்பு முறையே இதற்கு முக்கிய காரணமாகும்—


பூசலில் ஈடுபட்டுள்ள இரு தரப்புகளுமே தங்கள் வாதங்களுக்கு சோவியத் அரசியல் சட்டத்திலிருந்து ஆதாரங்களைக் காட்டுகின்றன—

நகோர்னி கரபாக் பிரதேசத்தை ஆர்மீனியாவுடன் சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்தும் ஆர்மேனியர்கள் அரசியல் சட்டத்தில் உள்ள சுயநிர்ணய உரிமையை தங்களுக்கு ஆதாரமாகச் சுட்டிக்காட்டுகிறார்கள்—

அஸர்பைஜானில் இருந்து நகோர்னி கரபாக் பிரதேசம் பிரியக் கூடாது என்று எதிர்ப்புத் தெரிவிக்கும் அஸர்பைஜானியர்களும் தங்கள் கோரிக்கைக்கு ஆதரவாக குடியரசுகளின் பிரதேச ஒருமைப்பாடு காப்பாற்றப்பட வேண்டுமென்று அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டிருப்பதை சுட்டிக்காட்டுகிறார்கள்—

மூன்றாவது வகை இனப் பூசல் சோவியத் பால்டிக் பகுதியில் உள்ள இனப் பூசல்களாக

(20ஆம் பக்கம் பார்க்க)



# சமத்து மருமகள்

இ. சி. சுந்தரலிங்கம்.

சின்னஞ் சிறுகதை

ஆனந்தராசா ஆபிசால் வரும போது நல்ல காலம அவனின் மனைவி வீட்டில் இல்லை. அவன் மனைவி சியாமளா பள்ளிக்கூடத்தால் இன்னும வரவில்லை. இந்த சந்தர்ப்பத்தைத்தான் இத்தனை நாட்களாக ஆனந்தராசா எதிர்பார்த்திருந்தான்.

பூனை போல வீட்டுக்குள் வந்தவன் பின் விறாந்தைப் பக்கம எட்டிப் பார்த்தான். அவனின் தாய் முந்தானைச் சேலையை வெறும நிலத்தில் விரித்து விட்டு படுத்திருந்தாள்.

அவளின் அருகில் அடுத்த ஆண்டு பள்ளிக்கூட வாசலை எட்டிப் பார்க்க இருக்கும அவனின் ஒரே புதல்வி பிரியா தூங்கிக் கொண்டிருந்தாள்.

"அமமா... என்ன... நித்திரையோ... பிரியா... இன்னும அமமா வரவில்லையா...?" தன் தாயை எழுப்பும அதே சாட்டில் தன் மனைவி இன்னும வரவில்லை என்பதை உறுதிப் படுத்த கொஞ்சம சத்தம போட்டே சொன்னான்.

கண்களை விழித்த அவனின் தாய் எழுந்து உட்கார்ந்த கொண்டாள். ஆனந்தராசாவை சுட்டெரித்து விடுபவள் போல ஒரு பார்வை பார்த்தாள்.

அவனுக்கு அமமாவின் அர்த்தம என்ன புரியாமலா இருக்கும? காலையில் மாமிக்கும மருமகளுக்கும நடந்த சண்டை... அதன் தாக்கங்கள்... என்ன அத்தனை சுலபத்தில் முடிந்துவிடக் கூடியனவா?

"அமமா... உன்ர மருமகள் ஒரு ஆசிரியை. படிச்சவள்... நீ பேசுறதை கொஞ்சம கவனித்துப் பேசு... சியாமளாவின் முன்னுக்கு வைத்து இதைச் சொல்லக் கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்றன்..." ஆனந்தராசா முடிக்க முதல்... அவனின்... தாய்...

ஒரு பத்ரகாளி உருவில்தான் அவனின் கண்களுக்கு தெரியத் தொடங்கினாள். அமமாவின் எரியீட்டிகளை அவனால் தடுக்க முடியவில்லை. கேடயம இழந்த அபிமன்யு போல வெளியேற வழியில்லாத திக்குமுக்காடினான்.

நல்ல காலம்... அந்த நேரத்தில்தான்... அவன் மனைவி சியாமளாவும வர வேண்டும?

"மாமி... என்னை ஏசுங்கள்... அடியுங்கள்... அவரை ஏச வேண்டாம..." சியாமளா கணவனின் கேடயமாக முன்னுக்கு வந்தாள். பாடசாலையில் இருந்த கொண்டு வந்த புத்தகங்கள், பேப்பர்களை மேசை மீது வைத்தாள்.

இந்த சந்தடியில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த பிரியாவும எழுந்து கொண்டாள். அவளுக்கு ஏதும புரியவில்லை.

இந்த சந்தர்ப்பத்தை பயன் படுத்திய ஆனந்தராசா மெல்ல சண்டையில் இருந்து நழுவப் பார்த்தான். அவன் வாயினை திறக்கவே இல்லை.

அவனின் தாய்... வசன மழை பொழியத் தொடங்கினாள்.

"அவர் என்னடா என்றால் நீ படிச்சனியாம, ஏன்ரீ... நீ படிச்சனி என்றால் நான் படியாதவள் என்ற கருத்தோ... எடியே நானும படிச்சு நாண்டி..." ஆனந்தராசாவுக்கு காதைப் பொத்த வேண்டும போல இருந்தது.

"ஏன்தான் அமமா இப்படி இருக்கிறாளோ... கொஞ்சம பிழை... சரி... இருக்கும அனுசரித்து நடந்தால் என்ன... இந்த வயோதிப காலத்தில்... சிவனே என்று இருக்காமல்..." ஆனந்தராசா மனத்துக்குள் நினைத்துப் பார்த்தான்.

"சரி... சியாமளா ஆவது கொஞ்சம அமமாவை அனுசரித்து நடந்தால் என்ன... வயது போனவர்களின் அறளைக் கதைகளுக்கு காது கொடுக்காமல் விட்டுக் கொடுத்தால் என்ன..." பதிலையும அவனே தனக்குள் சொல்லிப் பார்த்தான். அப் போது...

"மாமி..." சியாமளாவின் பலத்த குரல் அவனை திடுக்கிடவே வைத்து விட்டது. இரண்டு நிமிட மௌன நாடகத்தின் பின்...

சியாமளாவே பேசத் தொடங்கினாள்...

"மாமி... என்னை நல்லா பேசுங்கள்... ஏசுங்கள்... வேணும என்றால் அடியுங்கள்... அதைத்தான் நான் விருமபுறன்... நான் பிழையான எந்த காரியங்களும செய்யவில்லை..." ஒரு நிமிட

"மாமி... உஙகளோட வாய்க்கு வாய் கதைத்து சண்டை பிடிக்கிறதை நான் விருமபித்தான் செய்யிறன்..."

ஆனந்தராசா மனைவியின் வார்த்தைகளை மிக உன்னிப்பாகவே கேட்டான். ஆனால் அவனின் தாய்க்கு சியாமளாவின் வார்த்தைகள் அதிர்ச்சியாகவே இருந்தது.

"அப்ப ஏண்டி... உனக்கு என்ன விசரோ..." ஆனந்தராசாவின் அமமாவே அதிர்ச்சியின் சாயலில் கேட்டாள்.

"மாமி... நான் நாலு சகோதரங்களோட கூடிப் பிறந்தனான். என்னை யாரும ஏசவோ... அடிக்கவோ இல்லை... ஏச்சு... பேச்சு... சண்டை... அடி... உதை... இதுகள நான் அறியாமல் வளர்ந்திட்டன். எனக்கு வந்தவரும இதுகள என்னில காட்டலை...

ஆனால் நீங்கள்... மாமி...

... போட்டியாய் பேசி... அந்த ஏச்சு... பேச்சு... சண்டை... அடி... உதை... இதுகள..."

சியாமளா முடிக்கவில்லை... ஆனந்தராசாவின் தாய் குளறியே விட்டாள்.

"எடி... என்னை மன்னித்துப் போடடி... இந்த கிழட்டு வாய்...

ஆனந்தராசாவுக்கு அமமாவா இப்படி சொல்கிறாள் என்பது... அதிசயமாகத்தான் இருந்தது. மருமகளை கட்டித் தழுவி அணைத்த கண்ணீர் விட்டு... அந்த காட்சி...

அந்த காட்சிக்காகத்தானே ஆனந்தராசா ஏஙகிக் கொண்டிருந்தான்

ஆனால்...

சியாமளாவின் மனம்... தன் சக ஆசிரியை சொல்லித் தந்த தந்திரம இவ்வளவு கெதியாக வேலை செய்து விட்டதை நினைத்து... நினைத்து... அழுவதா... சிரிப்பதா... என்று



# நகைச் சுவை மஞ்சரி



"அமமா தாயே, இன்னிக்கு நான் ராப்பிச்சைக்கு வரல. ஏதாவது விடியோ கேசட் இருந்தா குடுங்க. பாத்துட்டு காலையில திருப்பிக் குடுத்துடறேன்"

★

"கோயில் தஙக ரதத்தை இழுக்க தலைவரை கேட்டுக் கொண்டது தப்பாயிடுச்சு!"

"ஏன்...?"

"வீட்டுக்கு இழுத்துக்கிட்டுப் போயிட்டார்!"

★

"இதுக்குத்தான் நடிகை அப்பவே சொன்னாங்க அருவில குளிக்கிற சீன்ல நடிக்க மாட்டேன்னு!"

"ஏன்? இப்ப என்ன ஆயிடுச்சு?"

"பாருங்க! அவஙகளோட பல் செட், விக் எல்லாம தனித் தனியா கழண்டு தண்ணில அடிச்சிட்டு போயிடுச்சு..."

★



"உன்னோட பேரனை கண்டிச்சு வை!"

"ஏன்?"

"நான் முதியோர் கல்வி பாடம எழுதிகிட்டு இருக்கும போது, ஐந்தில் வளையாதது ஐமபதில் வளையுமான்னு கேலி பண்றான்!"

★

"பிச்சை எடுக்கிறது தப்புன்னு தெரியாதா உனக்கு?"

"அப்படின்னா கைமாத்தா பத்து ரூபா குடுங்க!"

★

"ஏன் ஒவ்வொரு வீட்டிலயும திருடிட்டு வரும போது 100க்கு 25 கமிஷன் வச்சிட்டு வந்திடுறே?"

"வீட்டுக்காரஙகளுக்கும ஒரு சந்தோஷமாய் இருக்குமே"

★

"சினிமா டைரக்டரை கல்யாணம பண்ணிக்கிட்டது நல்லதாப் போச்சு!"

"எப்படி?"

"சமையல், துணி துவைத்தல், குழந்தைகளை கவனித்தல் இப்படி எல்லாத்தையும அவர், ஒருத்தரே கவனிச்சிக்கிறார்...!"

★



"அவருக்கு எதுலதான் பேரம பேசுறதுனு விவஸ்தையே இல்லாமப் போச்சு...!"

அப்படி எதுலஙக பேரம பேசினார்?"

"டாக்டர் இவருக்கு 104 டிகிரி காய்ச்சல் என்கிறார்.




செய்யவில்லை...” ஒரு நிமிட மௌனத்தின் பின் சியாமளாவே சொன்னாள்...


இதுகள்... நான் அனுபவிக்க விரும்புகிறன்... அதனாலதான்... நான் உங்களோட... எட்டிக்கு

புரியாமல் தவித்துக் கொண்டிருந் ததை யார் அறிவர்?

(த)

அதை குறைச்சி சொல்லக் கூடாதான்னு டாக்டர்கிட்டே சண்டை போடுறார்...”





இன்டக்றேட்டட் சேர்க்கியூட் என்பதையே சுருக்கமாக ஐசி என்று அழைக்கிறார்கள்- விடியா - தொலைக்காட்சிப் பெட்டி - வானொலி - கஸெட் போன்ற சிக்கலான சமாசாரங்கள் இந்த ஐசிக்களே கட்டுப் படுத்துகின்றன- அளவான மின்சாரத்தை எடுத்துக் கொண்டு அவற்றைக் பல்வேறு பிரிவுகளுக்கு அனுப்பி இயங்கச் செய்வது இந்த ஐசிக்களே-

ஈயப் புள்ளிகளாகக் காண ப்படும் இந்த சேர்க்கியூட்டைப் பார்த்தால் விஷயம் தெரியாத நமக்கு சிதம்பர ரகசியமாகத் தெரிவது வாஸ்தவம்தான்- இப்போது விஷயம் தெரிந்த மேல் நாட்டவர்கள் ஐசிக்களை வடி வமைப்பதிலும் அவற்றைக்கையாள்வதிலும் படுநவீன முறைகளை புகுத்தி வருகின்றனர் படத்தில் நவீன ஐசி ஒன்று மையத்தில் காணப்படுகிறது- மற்றவை யெல்லாம் தொழில்நுட்பம் புரிந் தவர்களுக்கு விளங்கக்கூடிய சங்கதிகள்!

(த—032)

# பிள்ளைகளைக் காண கண் ஒளி பெற்ற தாய்!

## அதை தானமாக வழங்கிய அன்பே உருவான பெண்

இங்கிலாந்து நாட்டில் காஸ்ட்ல்போர்ட் நகரின் அருகே அப்ரிடேல் என்ற ஊரில் வசிப்பவர் மேரி பெட்போர்டு.

1963 ஆம ஆண்டு இவரது வாழ்க்கையில் புயல் வீச ஆரமபித்தது. திடீரென ஒருநாள் மேரிக்கு தாங்க முடியாத தலைவலி வந்தது. ஏதோ ஒரு மாத்திரையைப் போட்டார். அப்போதைக்கு தலைவலி பறந்தது.

ஆனால் அதன் பின் அடிக்கடி தலைவலி வர ஆரம்பித்தது. இரண்டு ஆண்டுகள் கழிந்தன. அதன் பின்தான் டாக்டர்கள் தலைவலிக்குக் காரணத்தை கண்டு பிடித்தனர்.

மேரியின் மூளையில் ரத்தக் கட்டி இருப்பதை டாக்டர்கள் கண்டுபிடித்தனர். “இன்னும ஆறு மாதங்கள் தான் மேரி உயிருடன் இருப்பார்!” என்றும கூறினர்.

எனினும மேரிக்கு பல ஆப்பரேசன்கள் செய்தனர். சில நாட்களில் மேரியின் கண் பார்வை கொஞ்சம கொஞ்சமாக மங்க ஆரமபித்தது, இதற்கிடையில் மேரிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது, சில நாளில் அது இறந்தது. அடுத்து ஒரு மகன் பிறந்தான். அவனும சில மாதங்களில் இறந்தான். காரணம மேரியால் அவர்களைச் சரியாக கவனிக்க முடியாதது தான், எப்போதும மேரி படுத்த படுக்கையாக இருந்தார்.

ஆறு மாதத்தில் இறந்து விடுவரர் என டாக்டர்கள் கணித்து இருந்தும, அதை மேரி பொய்யாக்கி விட்டார்.

மூளையில் தோன்றிய ரத்தக் கட்டி கேன்சராக மாறி விட்டது, அது அவரது கண்ணையும் பாதித்து விட்டது, சில மாதங்கள் மேரி உயிருடன் வாழ வேண்டுமானால் அந்த கண்ணையும அகற்ற வேண்டும. அந்த ஒரு கண் மூலம தான் மேரி ஓரளவு பார்த்து வந்தார்.

ஆப்பரேசனுக்காக “லீட்ஸ்” ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் மேரி, அதே நேரத்தில் மேரியின் படுக்கை அருகே அடுத்த படுக்கையில் இருந்தவர் ஏன்ஜலா வாட்டர்ஸ், இங்கிலாந்தில் கமுபர்சைடில் என்ற ஊரைச் சேர்ந்தவர்.

ஏன்ஜலாவுக்கு 17 வயதாக இருந்த போது அவரது கண்ணில் கரு விழியில் “டைஸ்ரோபி” என்ற நோய் வந்தது. கொஞ்சம கொஞ்சமாக அவர் பார்வையை இழந்தார். பார்வை இழந்த நிலையிலேயே ஏன்ஜலாவுக்கு திருமணமும ஆனது. கார்ல், மிக்காய்லா, லியான் என மூன்று குழந்தைகள் பிறந்தன.

பல ஆஸ்பத்திரிகளிலும பல சிகிச்சை செய்தும கண் பார்வையைப் பெற முடியாத ஏன்ஜலா கடைசியில் லீட்ஸ் ஆஸ்பத்திரியைப் பற்றி கேள்விப்பட்டு அங்கு வந்து சேர்ந்தார். அதே நேரத்தில் தான் மேரி அடுத்த பெட்டில் இருந்தார், ஏன்ஜலாவின் சோகக் கதையைக் கேட்டார் மேரி, தனது கண்ணையே தானம வழங்க முன் வந்தார்.

மேரி கேன்சர் நோயால் பாதிக்கப்பட்டிருந்தும அவரது கருவிழி பாதிக்கப்படவில்லை. இருவரையும டாக்டர்கள் பரிசோதித்தனர், இரண்டு பேருக்கும கண்கள் எல்லா விதத்திலும பொருந்தி இருந்தன, என்னும மேரிக்கு இருக்கும ஒரே கண்ணையும பெற்றுக் கொள்ள ஏன்ஜலா விருமபவில்லை. வேறு யாரிடமாவது கண் கிடைக்குமா என பார்க்கச் சொன்னார், ஆனால் மேரியோ, “நான் இன்னும் வாழப்போவது கொஞ்ச நாள் தான் நீயே என் கண்ணை எடுத்துக் கொள் கண் இல்லாமல் என் குழந்தைகளை எப்படி இழந்தேன் என எனக்குத்தான் தெரியும. உனக்கும அந்த நிலை வரக்கூடாது” என ஏன்ஜலாவை வற்புறுத்தினார்.


குறிப்பிட்ட ஒருநாளில் ஆப்பரேசன் நடந்தது, மேரிக்கு முதலில் ஆப்பரேசன் நடந்தது, அவரது கண்ணில் இருந்து கருவிழி அகற்றப்பட்டது. பின்னர் ஆப்பரேசன் தியேட்டரில் இருந்து மேரி வெளியே கொண்டு வரப்பட்டார். அதே நேரத்தில் ஏன்ஜலா தியேட்டருக்குள் கொண்டு செல்லப்பட்டார். அவரது கண்ணில் கருவிழி பொருத்தப்பட்டது.

மறுநாள் ஏன்ஜலா கண்ணில் இருந்து கட்டு பிரிக்கப்பட்டது. கண்ணைத் திறந்த ஏன்ஜலா உடன் “ஓ மேரி எனக்கு கண் தெரிகிறது. என்னால் பார்க்க முடிகிறது” என ஆனந்தக் கூச்சல் போட்டார். பின்னர் மேரியை நோக்கிச் சென்றார், இருவரும ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக் கொண்டனர். ஏன்ஜலா ஆனந்தக் கண்ணீர் வடித்தார். “அழாதே ஏன்ஜலா உன் கண்களில் தையல் உள்ளது. எல்லாம சரியாகி விடும” என மேரி ஆறுதல் கூறினார்.

பின்னர் மூன்று குழந்தைகளையும ஏன்ஜலா பார்த்தார். அவர்கள் மூவரும பிறந்தது முதல் அவர்கள் குரலை மட்டும வைத்து அடையாளம் தெரிந்து வந்தார். இப்போது தான் முதன் முறையாக மூவரின் உருவத்தையும பார்த்தார்.

(ம-10)

சினிமா



துடிப்புள்ள இளைஞனாக இருந்து விட்டால் கன்னியரும தேடி வருவார்கள்— அர்ஜுனை தேடி வெண்ணிலா வந்தது அதனால் தான்— படம— "பட்டிக் காட்டு வீரன்" (ம—10)

# சித்ராவுக்கு சுறுசுறுப்பு ஏற்பட்டது எப்போது?


நடிகை சித்ரா தமிழ்ப் பட உலகில் படிப்படியாக முன்னேறி வருகிறார்— சித்ராவுக்கு சுறுசுறுப்பு ஏற்பட்டது எப்போது? அவரே இங்கு அதனை விவரிக்கிறார்—


"படித்துக் கொண்டிருக்கு போது வீட்டில் டாக்டரா கவோ, அல்லது இன்ஜினியராகவோ ஆக வேண்டும என்று கூறிவிட்டார்கள்— எனக்கு 95 சதவிகிதம் சினிமா பற்றிய கனவுகள்தான்— டி வியில் ஒலியு , ஒளியும், சினிமா போஸ்டர், பத்திரிகைகளில் இடம்பெறு சினிமா பற்றிய செய்திகள் இவையெல்லாம எனக்கு சினிமாவின் மீதுள்ள மோகத்தை அதிகப்படுத்தியது—


நடிகையாகிவிட வேண்டு என்கிற ஒரே லட்சியம— எப்படியும் நடிகையாகியே தீர வேண்டும என்ற துடிப்புடனே இருந்தேன்— நேற்றைய கனவு இன்று நனவானது— நிரந்தரமாக இருந்த பயம் என்னை விட்டு விலகியது— எப்படியும நான் ஒரு 5 வருடத்திற்காவது நடிகையாக நிலைத்திருப்பேன்—

இப்போது ஒரு பொறுப்புணர்ச்சி தெரிந்தோ தெரியாமலோ வந்துவிட்டது— லைஃபில் செட்டில் ஆகிவிட்டோம என்கிற மகிழ்ச்சி இருக்கிறது— அடிப்படையில் நான் ஒரு சோம்பேறி— சினிமாவிற்கு வந்த பின்பே சுறுசுறுப்பானேன் எனது நேற்றைய கனவு பலித்து ஓரளவுக்கு வசதியுடன் நிம்மதியாக வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கிறேன்

சமீபத்தில் ஒரு கன்னடப் படப்பிடிப்புக்காக "மார்க்காரா" என்ற மலைப் பகுதிக்கு போய் வந்தேன்— சந்தன வாசமும் ஏலக்காய் வாசமும மூக்கைத் துளைத்தது— அந்த இடத்திற்கு நான் நடிகையாகாவிட்டால் போயிருக்க முடியுமா? நான் நடிகையாவதற்கு முன்பே வீட்டை விட்டு வெளியில் போக மாட்டேன்— அரிஸ்டாட்டிலைப் போல் எப்போதும் சிந்தனைதான்— எனவே பாதையைப் பார்க்காமல் நடந்து கீழே விழுந்து அடிபடுவேன்— எனவே அப்பா, அம்மாவுடன்தான் வெளியில் போவேன்— வீட்டில் "நாலு பேருடன் தெருவில் போய் விளையாடு... சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொள்" என்றெல்லாம் அப்பா சத்தம போடுவார்— நான் வீட்டை விட்டு அசைய மாட்டேன் இவ்வாறு கூறினார் சித்ரா— (ம—10)









ரூபினி இவ்வளவு தூரம் பார்த்திபனை நெருங்கி வந்தது சரியில்லை— "தாலாட்டு பாடவா" படக் காட்சி— (ம-10)



விஜய சாந்தியின் ருசி கமலஹாசனுக்கு தெரியுமா?" இந்திரன் சந்திரன் படக்காட்சி— (ம-10)



முப்பெரும் தேவிகள் ஒன்றாகக் கூடியதால் புதிய வரலாறு படைக்கப்பட்டது— சாதனா — திவ்யா — தேவி ஸ்ரீ ஆகியோரின்சந்திப்பினால் ஏற்படவுள்ள பாதிப்பு எப்படி இருக்கும்? "வாலிப விளையாட்டு" படம் தான் பதில் தர வேண்டும்— (ம-10)

# கதாநாயகி வேடத்தில் கவர்ச்சி நடிகை டிஸ்கோ

டிஸ்கோ சாந்தி கதாநாயகியாக நடிக்கு தனலட்சுமி புரொடக்சன்ஸ் வழங்கும் "சித்தாடை கட்டிக்கிட்டு" என்ற பெயரில் படம் உருவாகிறது— முழுப் படப்பிடிப்பும் காட்டுப் பகுதிகளில் நடைபெறுகிறது— "கவர்ச்சி" நடனமாடும் டிஸ்கோ சாந்தி, இந்த படத்தில் முற்றிலும் மாறுபட்ட வேடமேற்று நடிக்கிறார்—

படத் தொடக்க விழா விஜயா கார்டனில் பாடல் ஒலிப்பதிவுடன் நடந்தது— பட அதிபர் பி ...ன் சுரேஷ் குத்து விளக்கேற்றி வைத்தார்— படப்பிடிப்பும் தொடங்கியது—

கே ராஜ்தினகர் வசனம் எழுதி இசை அமைக்க விபின்தாஸ் ஒளிப்பதிவு செய்கிறார் உண்ணி கதை திரைக்கதை எழுதி டைரக்டு செய்து ஏராளமான செலவில் தயாரிக்கும் படம் "சித்தாடை கட்டிக்கிட்டு" வி கோபாலன், ரத்னமாலா இணை தயாரிப்பில் உருவாகிறது— (ம-10)

## கனவுப் பாட்டு

செண்பகம் மூவிகிரியேஷன்ஸ் சார்பில் ஆர் பாலசுப்பிரமணியம் தயாரிக்கும் படம் "புட்டிக் காட்டான்"

இப்படத்திற்காக ரகுமான் ரூபினி இருவரும் கனவுலகில் மிதந்து "எங்க வச்சேன் எங்க வச்சேன் சொல்லு சொல்லு பாக்குலாம்— எம் மனச காணலியே யாருகிட்டே கேட்போம்" என்று ஆடிப் பாடிய பாடல் காட்சி படமாக்கப்பட்டது—

இதில் கவுண்டமணி, செந்தில், தமிழரசன், டி துரைராஜ், ராம. ராஜ்கமல், மருதுபாண்டியன, வை விஜயா, சி ஐ டி சகுந்தலா, டிஸ்கோ சாந்தி, வாணி ராசாத்தி புதுமுகம் லட்சுமி ஆகியோர் நடிக்கிறார்கள்— (ம-10)

# கோடம்பாக்கம் டயரி

எஸ் எஸ் சந்திரன் சென்னை சாலிக்கிராமத்தில் சொந்த வீடு கட்டிக் குடியேறியுள்ளார். புதுமனை புகுவிழாவுக்கு அரசியல், கலை சம்பந்தப்பட்ட எந்த முக்கிய பிரமுகர்களையும் அழைக்கவில்லை! அழைக்காதது ஏன்? என்ற கேள்விக்கு அழைத்திருந்தால் ஆர்ப்பாட்ட ஆசாமி என்று பேசுவார்கள். அதற்குப் பயந்தே அழைக்கவில்லை! என்றார் எஸ் எஸ் சந்திரன்.

★

"கரகாட்டக்காரன்" நாயகி அண்மையில் நடந்த தேர்தலில் வாக்களித்தாரா? "ஓட்டு போடுற வயசு வரல்ல வரல்ல— இன்னு ரெண்டு ஆண்டு இருக்கு இருக்கு" என்று நடிகை வீட்டில் உள்ளவர்கள் கூறுகிறார்கள்—

★

சென்னை அண்ணாசாலையில் ஒரு டஜன் தியேட்டர்கள் உள்ளன— இவைகளில் தமிழ்படங்கள் திரையிடும் தியேட்டர்களை விட பிற மொழிப் படங்கள் திரையிடும் தியேட்டர்கள் முன்பே ரசிகர்கள் கூட்டம் அலைமோதுகிறது— பிற மொழிப் படங்களை மிஞ்சும் விதமாக சகல அம்சங்களும் பொருந்திய தமிழ்ப் படங்களைத் தயாரித்து திரையிடாவிட்டால் பிற மொழிப் பட ஆதிக்கம் அண்ணா சாலையில் மட்டும் அல்ல தமிழகம் முழுவதும் ஏற்பட்டாலும் ஏற்படலாம்—

★

ஒரு படத்தின் கதை எழுதி டைரக்ட் செய்ய பிரதாப் போத்தன் இப்போது கேட்கும் ஊதிய ரேட் 5 லகரத்தை தாண்டி விட்டதாம் — இந்த திடீர் ஏற்றம் ஏன்? அவர் இயக்கிய "வெற்றி விழா" நாளுக்கு நாள் வசூலில் உயர்ந்து முதல் இடத்துக்கு வந்துவிட்டதே இதற்குக் காரணமாம்— இதுதான் சினிமா ஏற்றம்!

★

"கல்லுக்குள் ஈரம்" படத்தில் அறிமுகமான விஜயசாந்தி தெலுங்குப் பட உலகில் புகுந்து இன்றைய "டாப்" நடிகையாக விளங்குகிறார்— ஆனால் இதுவரை கமலஹாசனுடன் ஜோடியாக நடித்தது இல்லையே என்ற ஏக்கம் விரைவில் திரைக்கு வரும் "இந்திரன் சந்திரன்" மூலம் தீர்ந்து உள்ளதாம்— இனி கமலஹாசனுடன் தமிழ்ப் படங்களில் நடித்து அரைகுறையாக உள்ள ஏக்கத்தையும் தீர்த்துக் கொள்ளப் போகிறாரா — (ம-10)

# மொட்டைத்தலை மன்மதர்களிடம் டிஸ்கோ கண்ட ருசி

மொட்டைத் தலையர்களை அழகு மங்கையர் விரும்பி வரவேற்பர் என்று கூறப்படுகிறது— அத்தகைய மொட்டைத் தலை மன்னர்களிடம் டிஸ்கோ சாந்திக்கும் நாட்டம் உண்டு— மொட்டை தலையர்களிடம் டிஸ்கோ சாந்தி கண்ட ருசி எத்தகையது?

வழுக்கை, சொட்டை விழுந்த தலையில் முடி முளைக்க வேண்டுமா? அதற்கான மருந்தும் சிகிச்சை அளிக்கும் இடமும் டிஸ்கோ சாந்திக்குத் தெரிந்திருக்கிறது சமீபத்தில் தனது உறவினர் ஒருவரை சிகிச்சைக்கு அனுப்பி வைத்து வழுக்கையை மறையச் செய்துள்ளார் டிஸ்கோ வழுக்கை போக்க விரும்புவோர் டிஸ்கோவை நாடலாம்—

உண்மையில் மொட்டைத் தலையர்களுக்கு உதவி செய்வதில்தான் டிஸ்கோ நாட்டம் கொண்டிருக்கிறார்—

விஜயபுரி ஆனந்தனுக்கு அவர் பிள்ளைகளில் டிஸ்கோ சாந்தி மீதே அளவு கடந்த பாசம் இருந்ததாம் — எந்த நேரமும் அப்பா... அப்பா... என்று தந்தையின் காலை சுற்றிச் சுற்றி வருவார்— பாவம் ! தந்தையின் மரணம் டிஸ்கோவுக்கு பெரும் அதிர்ச்சியை அளித்துள்ளது—

(ம-10)



ராமராஜனுக்கு ... தலை இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று டிஸ்கோ சாந்தி நினைக்கிறாரோ? "பாட்டுக்கு நான் அடிமை" படத்தில் இவ்வாறு இணைந்தார்கள்— (ம-10)

## விசு இயக்கும் பாலசந்தரின் புதிய படம்

கே பாலசந்தரின் கவிதாலயா வழங்கும் "வரவு நல்ல உறவு" படப்பிடிப்பு தொடங்கியது—

விசு முக்கிய வேடத்தில் நடிப்பதுடன் கதை திரைக்கதை வசனம எழுதி டைரக்ட் செய்யும படம் "வரவு நல்ல உறவு" என் பாலகிருஷ்ணன் ஒளிப்பதிவை கவனிக்க இசை அமைப்பது சங்கர் கணேஷ்— (ம—10)

## சிவகுமார் மீது ரஞ்சனிக்கு காதல்

சிவகுமாரின் பழக்கவழக்கங்களிலும, நடவடிக்கைகளிலும லயித்துப் போன ரஞ்சனிக்கு சிவகுமார் மீது ஒரு மயக்கம. இதை அறிந்த சிவகுமாருக்கோ வெறுப்பு—


ஆனாலும மனதிற்கும எண்ணத்திற்கும கடிவாளம போட முடியுமா? சிவகுமாரையே சதா எண்ணி ஏங்கினார், ரஞ்சனி, அதன் விளைவு? காதல் கீதத்தின் எதிரொலி—

இங்கே இறைவன் என்னும கலைஞன் என்றோ உலகை நன்றாய் படைத்தான்—

சிவகுமாருடன் ஆடிப் பாடுவது போல் ஒரு இன்ப நினைவு!

ஜி என் ரங்கராஜன் இயக்கும "சார் ஐ லவ் யூ" படத்தில் இப்படி ஒரு காட்சி இடமபெறுகிறது (ம—10)

# குயிலியிடம் சிக்கிய கதாநாயகர்கள்!



கவர்ச்சி நட்சத்திரம் குயிலி ரசிகர்களை மாத்திரம தனது காந்தக் கணைகள் கொண்டு மயக்கி காமரசத்தில் திளைக்கச் செய்யவில்லை தன்னுடன் நடிக்கும் கதாநாயக நடிகர்களையும வாட்டி எடுத்து விடுகிறார்— தன்னிடம் சிக்கிய சில கதாநாயகர்களின் நிலை பற்றி குயிலியே இங்கு விளக்குகிறார்—

* கமல்ஹாசன்;— நாயகன் படப்பிடிப்புக்குப் போகிற வரை யாரோடு ஆடப் போகிறோமென சத்தியமாய் தெரியாது சார்! கமலைப் பார்த்தது ஸ்வீட், சர்ப்ரைஸ்— அவர் கைகளை வில்லாப் பக்கம் வளைத்து, பின் ஒரு விரலைக் காட்டி சிரித்தார்— "பூவிலங்கு குயிலியா... நீ! எப்படி ஒல்லியானாய்" என்று அவரே அதற்கு விளக்கம் கூறினார்— கமலுடன் ஆடினால் அவரது ரசிகர்கள் நமக்கும ரசிகர்களாவார்களென எண்ணியபோது ஜனகராஜோடு மட்டும் ஆடவிட்டார்கள்— ஆனாலும் சூரசமஹாரத்தில் தூள் கிளப்பிவிட்டேன்! "வேதாளம் வந்திருக்குது" பாடலுக்குக் கடினமான அசைவுகளைக் கூட ஒரே டேக்கில் ஓ கே செய்தேனென்றால் ஆட்டிப் படைத்தவர் கமலாயிற்றே—

* சத்யராஜ்;— நான் சத்யராஜ விசிறி— புதிய வானத்திற்காக அழைத்தபோது ஏக குஷி— ஆனால் இன்னொரு நடிகையுடன் (டிஸ்கோ சாந்தி) ஆடச் சொன்னதால் மறுத்துவிட்டேன்— எனவே, எனக்குத் தனியாக ஆங்கில மியூசிக் அமைத்துக் கொடுத்தார்கள்— சத்யராஜுடன் இணைந்து ஆடவில்லையே என்ற ஆதங்கம் சின்னப்பதாஸில் தீர்ந்தது— "பாக்கு வெத்தல வச்சுக்க... வச்சுக்க..." பாடலுக்குப் புகுந்துவிளையாடியிருக்கிறேன்.

* மிதுன் சக்ரவர்த்தி;— முதன் முதலாக என்னை ஆடலழகியாக்கிய "பினா பாணி" இந்திப் படப்பிடிப்பில் மிதுன் என்னைப் பார்த்து "மெட்ராஸ் பெண்ணா நீ! பம்பாய்காரியாட்டம் இருக்காயே" என ஆச்சரியப்பட்டார்— நன்கு பழகத் தொடங்கிய பின் இந்தி நடிகை மும்தாஜ் போலவே நான் இருப்பதாகக் கூறினார்— என்னோடு நடித்த எல்லா நடிகைகளும் பிரபலமாகி இருக்கிறார்கள்— நீயும் நிச்சயம பாப்லராகி விடுவாயென வாழ்த்தினார்— அத்தகைய ஆசிதான் என் வளர்ச்சிக்கு அஸ்திவாரமாயிருக்கிறது—

சிரஞ்சீவி;— பிரபல டான்ஸரான பிறகுதான் இவரோடு இணைந்தேன்— உன்னோடு ஜாக்கிரதையாக ஆட வேண்டும்— கொஞ்சம விட்டால் நீ பெயர் வாங்கிவிடுவாய் என ஜோக் அடித்தார்— அவரோடு நடித்த மஞ்சு தொரங்கா ஜேப் தொரங்கா போன்ற் படங்களில் முட்டிக்கு நிறைய வேலை கொடுத்து கடுமையாக மூவ்மெண்ட்ஸ் கொடுத்துப் பெயர் பெற்றேன்—

கார்த்திக்;— சோலைக்குயில் படத்தில் என்னைக் கொன்ற பழி அவர் மீது விழும் என்றாலும் அவரோடு எனக்கு ஒரு ஷாட் கூட கிடையாது— சட்டத்தின் திறப்பு விழாவில் அவருடன் அட்டகாசமாக ஆடினேன்— இளமையான நடிகர்— நாயகன் பார்த்தேன்— என்னவொரு ஒயிலான வடிவழகு என வர்ணித்தார்— கடின அசைவுகளைக் கூட மென்மையாக செய்கிற எனது ஸ்டைலைக் குறிப்பிட்டுப் பாராட்டினார்—

முரளி எனது முதல் கதாநாயகன்— முதல் படத்தில் தப்பாக எழுதிவிடுவார்களோ என பேசப்பட — நீண்ட இடைவெளிக்குப் பின் தாலி சத்தியம் படத்தில் என்னை அவருக்கு சுத்தமாக அடையாளம் தெரியவில்லை— அந்தப் படத்தில் முதன் முதலாக கலைஞர் கருணாநிதி வசனம் பேசி நல்ல கேரக்டர் ரோல் செய்கிறேன்— இன்னொரு வேடிக்கை— பூவிலங்கில் முரளிக்கு நாயகியான நான் தாலி சத்தியத்தில் அவரையே மிரட்டுகிற வில்லி!

அர்ஜுன்;— வேட்டையாடு விளையாடு படத்தில் பணியாற்றியபோது "ரொம்ப கஷ்டப்பட்டீங்க— அதன் பலனாகத்தான் இப்ப நல்ல நிலைக்கு வந்திருக்கீங்க!"யென வாழ்த்தினார்

சிவாஜி கணேசன்;— நடிகர் திலகத்துடன் நடிப்பதென்றால் எல்லோருக்கும் நடுக்கம— பாரம்பரியம் படத்தில் ஜமீன்தாராக அமர்ந்திருக்கும சிவாஜி முன் நடனமாடுவதாகக் காட்சி— ஆடி முடிந்ததும் சிவாஜி கூப்பிட்டார்— "கதாநாயகியாக நடித்தவள் இப்படியெல்லாம ஆடலாமா?" என திட்டுவாரோவென பயந்தேன்— ஆனால் புடைவை கட்டியிருந்தாலும ரொம்ப கிளாமராக ஆடினாயெனப் பாராட்டினார்—

இவ்வாறு கூறினார் குயிலி— (ம—10)





## ஏ.வி. எம். தமிழ்ப் படத்திற்கு இசை வழங்கும் பர்மன்

இந்திப் பட உலகில் பிரபலமான இசையமைப்பாளர் ஆர் டி பர்மன் "ஷோலே", "ஜவானி திவானி", "குர்பானி", "ஹம கிஸிஸே ஹம நஹி" உட்பட இவர் இசை அமைத்த பல படங்களின் பாடல்கள் மறக்க முடியாதவை—

கதாநாயகனாக நடிக்க, அவருக்கு ஜோடியாக கௌதமி, ரூபினி ஆகிய இருவரும நடிக்கிறார்கள்—

தமிழ் புத்தாண்டுக்காக வேகமாக தயாராகி வரும இந்த படத்தை எஸ் பி முத்துராமன் டைரக்ட் செய்கிறார்—

முடியாதவை–

இவர் ஏ வி எம தயாரிக்கும "உலகம பிறந்தது எனக்காக" படத்துக்கு இசை அமைக்கி றார்–

...

இந்தப் படத்தில் சத்யராஜ் டைரக்ட் செய்கிறார்–

கதை, திரைகதை, வசனத்தை சித்ராலயா கோபு எழுதியிருக் கிறார்– டி எஸ் விநாயகம ஒளிப்பதிவு செய்கிறார்–

(ம–10)





ரூபினியின் மனதில் உள்ள ஆசைகளைத் தீர்த்து வைக்கும ஆவல் விஜயகாந்துக்கு உண்டு– உண்டு– அவற்றை விசாரித்துத் தெரிந்து கொள்கிறார்– "புலன் விசாரணை" படக் காட்சி–

(ம–10)

ரோமாபுரி ராணியை சோழ மன்னன் சந்தித்துக் காதல் வசப் பட்டானோ? "காவலுக்குக் கெட்டிக்காரன்" படத்தில் பிரபு வும, நிரோஷாவும எழிற் கோலம காட்டும காட்சி–

(ம–10)

# லட்சுமியின் மகள் வீட்டை விட்டு ஓட்டம்

சத்யபாரதி ஒரு அரசியல்வாதி ஆனாலும சத்தியம தவறாத நட க்கும உத்தமன் என்ற பெயர் எடு த்தவன்– இவனுடைய மனைவி சரஸ்வதி ஒரு பத்திரிகையின் ஆசி ரியர்– இந்த தமபதிகளின் ஒரே மகள் கலைச்செல்வி–

கலைச்செல்வி பெயரில் சத்ய பாரதி – சரஸ்வதி (சிவகுமார் –லட்சுமி) வீடு ஒன்று வாங்கி அவள் பெயரில் உரிமைப்பத்திரம எழுதியும எந்த நிலையிலும பெற்றோரை விட்டுப் பிரிந்து செல்ல மனமில்லாமல் உரிமைப் பத்திரத்தையே ஏற்க மறுத்தவள் கலைச்செல்வி (ஐஸ்வர்யா)

"திருமணம ஆனால் கூட கண வனுடன் செல்ல மாட்டேன் உங் களுடனேயே குடியிருப்பேன்!" என்று விடாப்பிடியாக கூறிய கலைச்செல்வி திடீர் என்று ஒரு நாள் மனம மாறினாள்–

"எனது தந்தை சத்யபாரதி மீது கொலைக் குற்றம சுமத்தப் பட்டு உள்ளது– அவர் குற்றவாளி என்பதை நிரூபித்த பின்புதான் இந்த வீட்டு வாசல் படியில் கால் வைப்பேன்" என்று பெற் றோரை உதறிவிட்டு வீட்டை விட்டு வெளியேறினாள். கலைச் செல்வி. தாயின் கெஞ்சலும கண் ணீரும கலைச்செல்வியின் மனதை மாற்றவில்லை வீட்டை விட்டே வெளியேறினாள்–

சிவகுமார் லட்சுமி, ஐஸ்வர்யா நடித்த இந்த காட்சி சிவசந்திரன் கதை திரைக்கதை வசனம எழுதி முக்கிய வேடம ஒன்றிலும நடிக் கும கவிதசித்ரா பிலிமஸ் நிலா யுங்கள் ஜெயிக்கட்டும" என்ற படத்துக்காக படமானது–

நாகேஷ் ஜெய்கணேஷ் எஸ் எஸ் சந்திரன். கோவை சரளா, ராஜலட்சுமி மற்றும பலர் நடிக் கிறார்கள்–

(ம–10)

# படஉலகில் விசேட வசதி விரும்பாத ரஜனிகாந்த்

ஒரு படத்தில் கதாநாயகனாக நடித்தவர் கூட தனக்கென்ற தனி ஒப்பனை, உடை அலங்கார நிபுணர்களை ஏற்படுத்திக் கொள் ளும் இந்தக் காலத்தில் "சூப்பர் ஸ்டார்" என்ற புகழ்பெற்ற ரஜனிகாந்த் மட்டு இதற்கு விதி விலக்கு– அவர் நடிக்கும் கமபனி ஒப்பனை (மேக்கப்) உடை அலங்கார நிபுணர்களையே பயன்படுத்திக் கொள்கிறார்– தனக்கென்ற எந்த விசேட வசதியையும் தேடிக் கொள்வதில்லை– நடிகர்களில் இவர் ஒரு தனி ரகம்தானே!

ஒன்றிரண்டு படங்களில் நடித்ததுமே "கால்ஷீட்டு" கவனிக்க, கார் கதவு திறந்துவிட மணிக்கு ஒரு தரம் பழரசத்தை பக்குவமாக ஊற்றிக் கொடுக்க என்று ஆட்களை நியமித்துக் கொள்ளும் இன்றைய சினிமா உலகில் இந்த பந்தாவுக்கு அடிமையாகாத ஒரு சிலரில் ராம ராஜனையும் குறிப்பிடலாம்– 2 டஜன் புதுப் படங்களில் நடித்துக் கொண்டிருந்தும அவரு டைய "கால்ஷீட்டு" விவகாரத்தை கவனித்துக் கொள்வது அவர்தான்– இதில் அவருடைய மனைவி நளினியின் தலையீடும் இல்லாதது வியப்பானதே!

(ம–10)




அருண நடிகை ரகசியத் திருமணம் செய்து கொண்டா ராம– ஆடமபர மாளிகை வாசம் புரியும அருணா தனது தஙகையையும் வாரிசாக பட உலகில் புகுத்தி உள் ளார்– இதே வாரிசுக்கு இப்போதே ஒரு படத்தில் நடிக்க ஊதிய "ரேட்" 2 லகராம– இது நடிகை கேட்கும "ரேட்" டுதானாம– அறிமுகமாகும நேரத்திலேயே இப்படி "ரேட்" ஏற்றமா? ஏற்றத்துக்கு ஏற்ற திறமை அப்படி என்னதான்

★

வில்லனாக அறிமுகமாகி இன்று முன்னணி கதாநாய கன்களில் ஒருவராகத் திகழும் "வாத்தியார் வீட்டுப் பிள்ளை" நாயகனுக்கு இந்திப் படம் ஒன்றில் வில்லனாக நடிக்க அழைப்பு வந்ததாம்– நடித்தால் இவர் கேட்கும லட்சஙகளை அள்ளிக் கொடுப்பதாகவும் இந்திப் பட அதிபர் சொல்ல, "லட்சஙகளுக்காக நடிப்பவன் நான் அல்லன் அதுவும இந்திப் படத்திலா? எனது லட்சியமே இன்று போல் தாய் மொழிப் படத்தில் கதாநாயகனாக நடிப்பதே! என்று மறுத்துவிட்டாராம்–

★

அடிக்கடி சென்னையில் இருந்து பெற்றோரைப் பார்ப்பதற்கு பம்பாய் பறந்து செல்லு நடிகை ரூபம சமீ பத்தில் ஏமாந்த நிகழ்ச்சி ஒன்று நடந்துள்ளதாக கேள்வி– பம்பாயில் இருந்து சென்னை புறப்படும் விமானத்துக்கு குறிப்பிட்ட நேரத்தில் வந்து சேர முடியாததால் 2 தடவை கோட்டை விட்டுவிட்டாராம்–

★

இதயத்தை திருடாதே என்று வந்துள்ள ஆங்கில நடி கையின் பொழுதுபோக்கே இரு பிரபல நடிகர்களுக்கு "போன்" செய்து பட "சான்ஸ்" கேட்பததானா – அதுவும அவர்களுடன் ஜோடியாக நடிக்கும் ஆசையை ஆங்கிலத்தில் பேசி கொட்டித் தீர்க்கிறாரா – இதயத்தை திருடி குழப் பத்தை ஏற்படுத்தாமல் "சான்ஸ்" பிடித்தால் சரி–

(ம–10)

# திசை மாறிய வாழ்க்கை

இர்ஃபானா ஜெப்பார்

என்ன மகன் தொழுதிட்டு வந்து மீண்டும் படுக்கிறீங்க... இன்றைக்குக் கடைக்குப் போறதில்லையா?!" அன்னையின் கேள்வி மனதில் உறைக்க, சிந்தனைச் சூழலிலிருந்த தன்னை விடுவித்துக் கொண்ட வஸீர் தாயின் முகத்தை அண்ணாந்து பார்க்கிறான்—

"ம... போதும் வேண்டும் உம்மா. கொஞ்சம் தலையிடியாயிருந்தது அதான் சாய்ந்து கொண்டிருந்தேன்" இனிமையான அவன் குரல் இதமாய் ஒலிக்கிறது—

வறுமையென்னும் வற்றாத நதியினிலே வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கும் அவன் மனதில் தான் எத்தனை ஆசைகள்! கனவுகள்! கற்பனைகள்! அயோக்கியத் தனங்களும், அவலங்களும் மலிந்துவிட்ட இந்நாகரிக யுகத்தில் அவன் ஒரு அதிசயப் பிறவி, பிறர்க்கு உதவ வேண்டும் ஏழை எளியோரின் துயர் துடைக்க வேண்டும் என்ற இலட்சிய வெறி கொண்ட ஓர் இளைஞன் அவன்—

ஏழைக் குடித்தனக்காரர்களுக்கு மத்தியில் தான் அவன் வாழ்கிறான்— சுற்றிலும் வறிய மக்கள், தன்னாலியன்ற உதவிகளை அவர்களுக்குச் செய்வதற்கு அவன் என்றுமே பின்னடைந்ததில்லை—

இறையச்சமும், தைரியமும் மிக்க அவன் மேல் எல்லோரும் மிகுந்த அபிமானம் வைத்திருந்தார்கள்—

தலைநகரில் பிரபலமான வர்த்தக நிறுவனமொன்றில் அவன் சாதாரண ஒரு ஊழியன் சொற்பத் தொகையை சம்பளமாகப் பெற்றுக் கொண்டாலும் செலவைச் சுருக்கிக் கொண்டு மற்றவர்களுக்கு உதவுவான்—

தாயையும் மகனையும் கொண்ட அச்சிறிய குடும்பத்தில் அவர்களுக்குத் தேவை அதிகமிருக்கவில்லை— என்றாலும் அவனுக்குத் தன்னுடைய இலட்சியத்துக்குப் பணம் அதிகம் தேவைப்பட்

றையும், பக்தியும் அவனது வசிகரமான பேச்சும், சிரிப்பும் அவனிடம் குடிகொண்டிருந்த கம்பீரமான அழகும் முதலாளியைக் கவர்வதற்கு உறுதுணையாயின—

அவர் எல்லாவிதமான சலுகைகளையும் வஸீருக்கு அளித்திருந்தாலும் அவன் தனக்கென்று எதையும் பெற்றுக் கொண்டதில்லை!

தனக்கும் பணமிருந்தால்... எளியவர்களுக்கு வசதிகளை செய்து கொடுக்கலாம் என்று தான் அவன் எண்ணுவான் அவ

த்தமானான்— கிடைத்ததைச் சாப்பிட்டுவிட்டு அன்புத் தாயின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு வீட்டை விட்டு வெளியேற வாசலுக்கு வந்தான்—

ஓ!... பக்கத்து வீட்டு ராஹிலாவின் கலங்கிய விழிகள் சாளரத்தில் பதிந்து நின்ற பரிதாபம் அவன் நெஞ்சை உலுக்கியது—

முப்பத்தைந்து வயதைக் கடந்து விட்ட பின்னரும், தனக்கென்று ஒரு இல்வாழ்க்கை அமையாதா? என்று இலவு காத்த

ஹாஜியாரின் உடல் நிலை வரவர மோசமாகிக் கொண்டிருப்பதை அறிந்த வஸீர் இறைவனிடம் அவருக்காகப் பிரார்த்திக்கத் தொடங்கினான்...!

மஜீத் ஹாஜியாருக்கு ஒரே ஒரு மகள் மட்டும்தான்— அவரது தொழிலை கொண்டு செல்லக் கூட அவருக்கு ஒரு ஆண் வாரிசு இருக்கவில்லை— மனேஜரின் கண்காணிப்பில் தான் நிறுவனம் ஓடிக் கொண்டிருந்தது—

அன்று வஸீருக்கு ஒரு "டெலி

அயராத உழைப்பினால் மஜீத் ஹாஜியாரின் சொத்துக்கள் பன்மடங்கு பெருகின—

பணப் பெருக்கத்திலும் புழக்கத்திலும் அவனது இலட்சிய தாகங்கள் அமிழ்ந்து விட்டன என்று தான் சொல்ல வேண்டும்— ஏழை எளியோரை வாழவைக்க வேண்டும் என்ற அவனின் எண்ணங்களைப் பற்றி நினைக்கவே அவனுக்கு நேரம் கிடைக்கவில்லை—

சராசரி பணக்காரன் எண்ணுவதைப் போல்... இன்னும் இன்னும் பணம் தேட வேண்டும் என்ற குறியில் இருந்தானே தவிர தன்னுடைய "பழைய" கொள்கைகளைப் பற்றியே எண்ணிப் பார்க்க மறந்து விட்டான்—

அவனின் போக்கைக் காணக் காண அவனுடைய தாய்க்கு அடக்க முடியாத வியப்பேற்பட்டது தன் மகன் வஸீர் தானா இது? உம்மா, உம்மா என்று தன்மேல் உயிரையே வைத்திருந்தவன் எத்தனை விரைவில் மாறிப்போனான்?] அவன்

## ஐயனைப் பாடிடுவேன்

— சோமலிங்கம்


காதலைப் பாடிக் களைத்து விட்டேன் இனி
கன்னியர் தமமை நான் பாடேன்
சாதலை அண்டிய காலத்தில் நிதம
சல்லாபம தனை நான் பாடிவிட்டால் பெரு
மோதலை இங்கு கண்டிடுவேன் பலர்
முனிந்தும எனையே தூற்றிடுவார்
ஆதலினாலே அதை விட்டு என்
ஆண்டவன் தன்னைப் பாடுகிறேன்

★

கன்னியர் தமமைப் பாடிய வாயால்
கண்ணனை நினைத்து பாடுகிறேன் நான்
பின்னால் திரிந்த பெண் தொடர்பறுத்து
பீதாமபரனைத் தேடுகிறேன் இந்த
மண்ணில் எதுவும நிரந்தரம இல்லை
மாதவன் அழியாப் பொருள் அவனின்
தன்மையில் இனிமேல் வாழ்ந்திடுவேன் எந்த
தையலர் உறவும தேவையில்லை

★

வார் அணி கொங்கை மாதரைப் பாடிய
வாயால் கண்ணனைப் பாடுகிறேன்
சீருக்கெல்லாம முதல் திருமால் என்று
தெரிந்த பின் பெண்களைப் பாடுவனா?]
ஆர் என்ன சொன்ன போதிலும எந்தன்
ஐயனை நிதமும பாடிடுவேன் நான்
சேர் இடம அறிந்து சேர்ந்து விட்டேன் இனி
தெய்வத்தை மறந்த நான் பாடேன்.



னுடைய பாதங்கள்... இப்போது காரின் சொகுசில் ஏனோ தானோ என்று சில நேரங்களில் தான் செல்வான்... ம... நேரமில்லையாம!

அன்றொரு நாள்... அபூர்வமாக ஆபீஸைவிட்டு நான்கு மணியளவில் வீடு திரும்பியிருந்தான் வஸீர்... "கோர்ட் ஸூட்" சகிதம வாசலைக் கடக்கையிலே... கதிரையில் அமர்ந்திருந்த தாயைக் காண அதிர்ந்து போனான்—

"ஏனும்மா இப்படி இளைச்சுப் போய்ட்டீங்க சாப்பிடுறதில்லையா?" பரிவோடு வினவினான் தனயன்— தாயின் விழிகளில் நீர் சுரந்தது "அதெல்லாம ஒன்னுமில்லப்பா வயசாயிட்டுதில்லையா அதான்"

ஓ... என்றவன்... கொஞ்சம இருங்கோ வந்திடுறேன் என்று கூறிவிட்டு மாடிப்படியில் தடதடவென ஏறிவிட்டான்— மகனின் வருகைக்காக பல மணி நேரம காத்திருந்தார் அந்தத் தாய்—

அலங்காரமான தோற்றத்துடன் மகன் இறங்கி வருவதைக் கண்டு ஸ்தம்பித்துப் போனார்

அப்போது நேரமிருக்கவில்லை— பாவம! தாய் உடனே போகக் கிளம்பினாலும் மருமகள் அவரை அன்று இரவு தங்கும்படி வற்புறுத்தினார்—

அன்று இரவு பலவித சிந்தனைகளுக்கு மத்தியில் உறக்கமின்றிப் புரண்டார் அவர் ஹாலில் கேட்ட ரிஸீவரின் மணிச்சத்தம அவரை திடுக்கிட வைத்தது "உம்மா" என்ற ரஸ்னாவின் அலறலினால் பாய்ந்து ஓடினார்—

"மகள்... என்னமமா நடந்தது?" தாயும மாமியும வினவினர் "மாமி... அவர்... போன ஃப்ளைட் விபத்தாயிடுச்சாம ஆபத்தான நிலையில் பலரை ஆஸ்பத்திரியில் ..சேர்த்திருக்கார்களாம" வென்று கதறினாள் அவள்— யாருக்கு யார் ஆறுதல் கூறுவது? தன் அன்பு மகனுக்கு அந்தத் தாயின் இருதயத்தின் அடித்தளத்திலிருந்து பிரார்த்தனைக் கசிவுகள் ஆரமபமாகின...

நாட்கள் வாரங்களாகி... மாதங்களாகின... நீண்ட கால ஆஸ்பத்திரி வாசத்துக்குப் பின்



றுக்குத் தன்னுடைய இலட்சியத்துக்குப் பணம் அதிகம் தேவைப்பட்டது—

உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, வாழ இல்லறமின்றி எத்தனையோ ஏழைக் குடும்பங்கள் பரிதவிக்கின்றன... பொருளாதாரப் பிரச்சினைகள் அவர்களை எத்தனை தூரத்துக்கு வாட்டுகின்றன என்பது அவனுக்கு நன்கு தெரியும்! இருந்தாலும் என்ன செய்ய! அவற்றை நிவர்த்தி செய்ய பணம் அவசியமல்லவா?

அவன் தொழில் பார்க்கும் நிறுவனத்தின் அதிபர் அவன் மேல் நல்ல நம்பிக்கை வைத்திருந்தார்— அவனது நாணயமான போக்கும் ஐந்து நேரத் தொழுகையில் அவன் காட்டும் அக்கறையும் அவனது கொள்கைகள் இமயமளவு உயர்ந்தாலும் அதை நிறைவேற்ற ஒரு தம்பியேனும் பணம் அவனிடமிருக்கவில்லை என்றாலும் மனம் தளர்ந்துவிடவில்லை—

தனக்கும் ஒரு நல்ல காலம் பிறக்கும் அப்போது தன் இலட்சிய வாழ்வை தொடரலாம் என்று அவன் திடமாக எண்ணினான்—

சுவர்க் கடிகாரம் எட்டு மணியைக் காட்டிவிட்டு ஓய்ந்தது— திடுக்கிட்டு விழித்த வஸீர் தொழிலுக்குப் போவதற்கு ஆயத்தமானான்—



## சிறுகதை

...கிளியாக எதிர்பார்த்து நிற்கும் ராஹிலாவின் கதை பரிதாபமானதுதான்!

ராஹிலாவைக் காணும் போதெல்லாம் வஸீரின் இதயத்தை வேதனை கீறி ரணப்படுத்தும்— அவன் கூட ராஹிலாவுக்கு எத்தனையோ வரன்களைக் கொண்டு வந்தான் தான் அவளது வயதைச் சுட்டிக்காட்டியும், பணமில்லாததும் அவள் திருமணத்துக்குத் தடைகளாகின—

ராஹிலாவின் குடும்பத்தில் ஐந்து குமர்கள், இரண்டு பேரை, எப்படியோ கரையேற்றிவிட்டார்கள்— பின்னால் வந்தவர்கள் தான் கரை தெரியாமல் தத்தளித்தனர்—

பணமிருந்தால் இவர்களை எப்படியாவது கரை சேர்க்கலாம் என்று வஸீர் எண்ணினான் பணம்தான் இன்று அவன் மனதில் பெரும் கேள்விக் குறியாக எழுந்தது—

புன்சிரிப்பொன்றை உதிர்த்து விட்டு தெருவில் இறங்கி நடக்கத் தொடங்கினான்— வாழ்வு மலராமல் இருக்கும் பல ஏழைக் கன்னியரை அவன் மனம் ஆகரமித்திருந்தது—

அன்று அவன் தொழிலகத்துக்குப் போகும் போதே மிகுந்த பரபரப்பாக இருந்தது— செய்தியைக் கேட்டு அவன் அதிர்ந்து போனான்— ஆம்! அவன் முதலாளி மாரடைப்பு ஏற்பட்டு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தி தான், ஒன்றும் பார்க்கவில்லை அவன் ஆஸ்பத்திரிக்கு விரைந்தான்—

முதலாளி மஜீத் ஹாஜியார் ஆஸ்பத்திரிச் சகங்களுடன் பிரக்ஞையற்ற நிலையில் கட்டிலில் கிடந்தார்— அன்று அவன் அடைந்த துன்பத்துக்கு அளவேயில்லை—

நாட்கள் நகர்கின்றன மஜீத் ... போன் கால்" வந்திருந்தது மஜீத் ஹாஜியாரை வைத்திருந்த ஆஸ்பத்திரியிலிருந்துதான் அவனை அவசரமாக ஆஸ்பத்திரிக்கு வரும்படி அழைப்பு விட்டிருந்தார்கள்— என்னவோ ஏதோ என்றபடி அவன் ஹாஸ்பிடலுக்கு விரைந்தான்—

உறவினர்கள் புடைசூழ மஜீத் ஹாஜியார் கட்டிலில் கிடந்தார்— அவர் மனைவியும், மகளும் அழுதபடி நின்றனர் வஸீரை நோக்கிய ஹாஜியார் அருகில் வரும்படி சைகையால் அழைத்தார்—

கண்ணீரோடு அவரை நோக்கினான் வஸீர்..." வஸீர்... என்ட மகள நீதான்பா மணமுடிக்கணும்... செய்வியா... வஸீர்" திக்கித் திணறி அவருடைய வார்த்தைகள் மிகவும் சிரமத்துடன் வெளிப்பட்டன—

சிந்திக்கவும்... அவகாசமின்றி வெறுமையாகத் தலையாட்டினான் அவன்... "என்ட சொத்துக்களையெல்லாம்... உன்னிடம் ஒப்படச்சிட்டேன்..." வார்த்தைகளை முடிக்கு முன்பே அவர் நாக்கு இழுத்துக் கொண்டது எல்லோரும் கதறி அழுதனர்—

அடுத்த நாள் அவருடைய உயிரும் பிரிந்து விட்டது— அனாதையாகிக் கிடந்த மஜீத் ஹாஜியாரின் மகள் ரஸ்னாவும் அவர் மனைவியும் அவன் பொறுப்பில் விழுந்தனர்—

காலச் சக்கரம் மெல்ல மெல்லச் சுழல்கிறது— மஜீத் ஹாஜியார் காலமாகி ஒரு வருடம் கழிந்த பின்னர் எளிமையான முறையில் ரஸ்னாவை தன்னுடைய வளாக்கிக் கொண்டான் வஸீர்—

பங்களா அவனின் வாசஸ்தலமாகியது— தாயை தன்னோடு வசிக்க எவ்வளவோ அழைத்தும் அவர் மறுத்துவிட்டார்— பணக்காரச் செழிப்பில் நிறையவே வளர்ந்து விட்டான் அவன்— அவனது தாயைப் பார்க்க வருவதைக் கூடக் குறைத்துக் கொண்டான்—

அப்போதெல்லாம் அவனின் ஆசைகளும் அபிலாஷைகளும்... ஏழை மக்களின் வாழ்நிலை ஓரளவாவது நிவர்த்தி செய்ய வேண்டுமென்பதில் தான் இருந்தது இப்போதெல்லாம் அவன் எவ்வளவு பணத்தை எந்தக் கம்பனியில் முதலீடு செய்தால் இரட்டிப்பான இலாபம் பெறலாம் என்று எண்ணுவதில் கண்ணும் கருத்தாய் இருந்தான்—

என்ன விந்தையான உலகம்! மனிதனை பணம் இத்தனை தூரம் பலவீனப்படுத்தி விடுகிறதா...? பணமும் இன்றி அந்தஸ்தும் இன்றி பொறுப்புக்களுமின்றி சாதாரண ஒரு மனிதனாக அவன் வாழ்ந்த போது... அவனது எண்ணங்களும் கொள்கைகளும் புவித்திரமானதாய் இருந்தன— சிந்தித்துத் தெளிவு பெறக் கூடிய ஓர் உன்னத வாலிபனாய்த்தான் அவன் அப்போது மிளிர்ந்தான்—

ஆனால்... திடீரென அவன் அந்தஸ்து உயரப் போய் அவன் கொள்கைகளும் எண்ணங்களும் காற்றோடு கலந்து விட்டன! தன் அன்புத் தாயைக் கண்டு சுகம் விசாரிக்க வேண்டும் என்றோ! அன்பு மனைவியுடனும் குழந்தையுடனும் மகிழ்ச்சியில் குதூகலிக்க வேண்டுமென்றோ அவனுக்குத் தோன்றவில்லை— பணம்! பணம்! இது ஒன்றுதான் அவன் இலட்சியம்...

பக்கத்து வீட்டு ராஹிலாவின் பரிதாபமான விழி நீரைத் துடைக்க வேண்டும் என்றும் பல நாளாய் கனவு கண்டவன்...?. ராஹிலா என்ன! ஆயிரம் ஆரிபாக்கள் கூட அவன் மனதை விட்டு மறைந்து விட்டனர்—

புனிதமான அதான் ஓசையில் பாதங்கள் தளர பள்ளியை நோக்கி வீறுநடை போட்ட அவ... ...டன் மகன் இறங்கி வருவதைக் கண்டு ஸ்தம்பித்துப் போனார். "ஓ... உம்மா... ஏழு மணி ஃப்ளைட்ல சிங்கப்பூர் போறேன்ம... அவசரமாகப் போக வேண்டியிருக்கு...வரட்டுமா உம்மா" பதிலுக்குக் கூட காத்திருக்காமல் போய்விட்டான்—

தாய் வந்த காரணத்தைக் கூட அறிந்து கொள்வதற்கு அவனுக்கு ... மாதங்களாகின... நீண்ட கால ஆஸ்பத்திரி வாசத்துக்குப் பின் அன்று தான் வஸீர் "டிஸ்சார்ஜ்" ஆகி வீடு வந்தான்— ஒரு காலை இழந்த நிலையில்!!

இப்போது அவனுக்கு பூரண ஓய்வு! கட்டிலே தஞ்சம்! தாயின் பணிவிடைகள் முதுமையான கோலத்திலும் அவனை வரவேற்றது—

இப்போதுதான் அவன் கடந்து போன வாழ்க்கையை நினைத்துப் பார்க்கத் தொடங்கினான் தான் செய்து விட்ட பாவத்துக்குப் பிராயச்சித்தமாக எதையும் செய்யத் தீர்மானித்தான்—

காலங்கடந்த பின்னே ஏற்பட்ட ஞானோதயம்! பயன்...? காலந்தான். பதில் சொல்ல வேண்டும்!

(த)

# நற்பணி செய்குபார்

— சத்தார் எம். ஆஸாத்

கொண்டவன் தன்னை விட்டுக்
கொள்கையில் மாற்றங் கொண்டு
கண்டவன் பின்னால் ஓடிக்
கற்பையும் பறி கொடுத்து
உண்டிடக் கூழு மின்றி
ஓவெனக் கதறி நிற்கும்
மங்கையே! உனது வாழ்வை
மாய்ப்பதால் என்ன லாபம்?

★

தவறினை உணர்ந்து விட்டாய்!
சரிசரி இனியும் அந்தக்
கவலையை மறந்து விட்டுக்
களிப்பினை நெஞ்சிற் கொள்வாய்!
அவமானம் என்று உன்னை
அழித்திட நீயே எண்ணல்
தவறிலும் தவறு! அதனால்
தற்கொலை வேண்டாம் பெண்ணே!

★

குற்றங்கள் செய்வோ ரெல்லாம்
குறுகிய எண்ணங் கொண்டு
தற்கொலை புரிந்து விட்டால்
தழைக்குமா உலக வாழ்வு?
மற்றவர் கதையை விட்டு
மனத்தினைத் தூய்மை யாக்கி
நடந்தவை மறந்து பாகும்!

# டிவி டவர் உயரம் டில்லியில் உண்டு

இந்தியாவிலேயே மிக உயரமான டி வி டவர் டில்லியில் பிதம்புரா என்ற இடத்தில் நிறுவப்பட்டுள்ளது,

1988 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் திகதி முதல் இது செயல்பட ஆரம்பித்துள்ளது,

இந்த டி வி டவரின் உயரம் 235 மீட்டர், குதுப்மினாரைப் போல் மூன்று மடங்கு உயரம், இதன் மேலே சுழலும் உணவகம் இருக்கிறது, 158 மீட்டர் உயரம் வரை "லிப்ட்" வசதி உள்ளது,

அதற்குப் பிறகு 700 படிக்கட்டுகளில் ஏறி டவரின் உச்சியை அடைய வேண்டும், மேலே இருந்து டில்லி முழுவதையும் பார்க்கலாம்.

120 கிமீ சுற்றளவு வரை டி வி நிகழ்ச்சிகள் இதன் மூலம் ஒளிபரப்பப்படுகின்றன,

## கனிவளங்கள்

சோவியத் ஊரல் பகுதியான அல்தாப்பில் பல வருடங்களாக கனிவளங்கள் பெறப்பட்டு வந்தன, நாட்டுக்குத் தேவையான தங்கம், பொன், மற்றும் விலை மதிப்புள்ள இயற்கைச் செல்வங்களை இப்பகுதி பெருமளவில் கொண்டுள்ளது.

பின்னர் ஒரு சில காலமாக இப்பகுதிகள் புறக்கணிக்கப்பட்டிருந்தன. மீண்டும் இங்கு ஆராய்ச்சி அகழ்வு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன, வெளிநாட்டுக் கம்பனிகள் உதவியுடன் நவீன தொழில் நுட்பங்கள் இந்த நடவடிக்கைகளுக்காக உபயோகிக்கப்படுகின்றன

(ம)

## மணிக் கவிதை

### ...துநாள்!

இதய வேதனை தரும்
இறுக்கமான சுமையினால்
கற்பனைக்கும் கலக்கும்!
இடையூறுகள் விரைவாய்
இங்கு விருந்தாகிப் போனதோ?
எதிர்ப்புகளின் உறுதிதான்
எம் இணைப்புக்கு அச்சாணி!
எனவே இப்பொன்னாளில்
என் துணிவு வாழ்த்துக்கள்!

★ ந சந்திரக்குமார்

### கூ(அ)ச்சம்!

அன்பு வைத்தேன் அவனில்
அகம் மகிழ்ந்தேன் மனதில்!
பார்த்துப் பழக எண்ணம்
பார்வை எனக்கு நாணம்!
தழுவி மகிழக் கூச்சம்
...தயல் எனக்கு அச்சம்!
...பசிக் குலவத் துடிப்பு
...பேதை எனக்குப் பிடிப்பு!

★ ராஜேஸ்வரி

### சமர்ப்பணம்!

இயற்கையிலே அழகு நிலா
இதயத்தேரில் நீ உலா!
தேவியுந்தன் தரிசனம்
தேடுகிறேன் தினம் தினம்!
உந்தனது சம்மதம்
உடனே நான் சமர்ப்பணம்!

★ ஜி சதீஷ்

### சம உரிமை!

சமஉரிமை கேட்டு
சஞ்சலம் வேண்டாம்!
சத்தியமாய் சொல்கிறேன்
சகோதரியுன் பங்களிப்பு
சமவுரிமைக்கு சான்றாகட்டும்

★ ஹமீட் எம் பௌசான்

### புரியாத புதிர்!

லஞ்சம் வளரத் துணை புரிவது
நீங்கள் தானே!
உங்களுக்கு புரிய ...
அவர்களுக்கு... ...
வேற வழி தெரிந்து விடும்!

★ பாத்திமா ரமசீன்

### பாதி மனிதர்!

பஞ்சமிகு வேளையில்

# நல்ல குணம்

குளத்தூரான்

முன்னொரு காலத்தில் அமுதினி, குமுதினி என்று இரு சகோதரிகள் வாழ்ந்தனர். குமுதினி அக்கா. அமுதினி தங்கை. இவர்களுக்கு அம்மா கிடையாது. அம்மா இறந்து போய் விட்டாள். அப்பா மட்டும் இருந்தார். அவர் வயதானவர்.

இவர்களோடு அவர் வாழவில்லை. தூரத்திலிருந்த ஒரு கிராமத்தில் மகனோடும் மருமகளோடும் வாழ்ந்து வந்தார்.

குமுதினிக்கும் அமுதினிக்கும் இடையில் குணத்தில் நிறைய வித்தியாசம் இருந்தது.

குமுதினி ஒரு சுயநலக்காரி. தான்தான் நல்லா இருக்க வேண்டும், தனக்குத்தான் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று மனப்போக்கு உடையவள். நாலு நல்ல வார்த்தை பேசி, யாரோடும்



நடந்து போய்க் கொண்டிருந்தாள்.

"எனக்கு ஒரு உதவி செய்வாயா?" என்று கூப்பிடும் குரல் கேட்டது. குரல் வந்த திசையை நோக்கினாள். கொடி முந்திரிகை ஒன்று அவள் கண்ணுக்குத் தட்டுப்பட்டது.

"நீயா என்னைக் கூப்பிட்டாய்?" என்று கேட்டாள் அமுதினி.

"ஆமாம்" என்ற கொடி முந்திரிகை, "எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்" என்று கேட்டது.

"என்ன உதவி செய்ய வேண்டும்?" என்று அமுதினி கொடி முந்திரிகையிடம் கேட்டாள்.

"என் கொடியில் பல பாரம் தாங்காமல் அலங்கோலமாகத் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அதைக் கொஞ்சம் கத்தரித்து சரிப்படுத்தி விடேன்" என்று கொடி முந்திரிகை கேட்டது. "நான் வருகிறேன்" என்று பயணம் சொல்லி விட்டு நடந்து போய்க் கொண்டிருந்தாள். வெகு தூரம் போயிருப்பாள்—

"எனக்கு ஒரு உதவி செய்வாயா?" என்று ஒரு குரல் கேட்டது. குரல் வந்த திசையைப் பார்த்தாள்— அவளைக் கூப்பிட்டது ஒரு ஓடை—

"நீயா என்னைக் கூப்பிட்டாய்?" என்று ஓடையைப் பார்த்துக் கேட்டாள்.

"ஆமாம் நான்தான் உன்னைக் கூப்பிட்டேன்" என்றது ஓடை.

"என்ன உதவி செய்ய வேண்டும்?" என்று கேட்டாள் அமுதினி.

"நான் சலசலவென்று வேகமாக ஓடி கடலோடு கலக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஆனால் என்னுடைய ஆசைக்குத் தடையாக இருக்கி

பொருட்களை ஓர் எருதின் முதுகில் வைத்துக் கட்டினாள். எந்த வகையிலும் கீழே விழாத வகையில் அழகாகக் கட்டினாள்.

அமுதினி எருமையைக் கூட்டிக் கொண்டு ஊரை நோக்கி நடந்தாள். ஓடையின் பக்கமாக நடந்து கொண்டிருக்கும் போது "எனக்கு உதவி செய்த பெண்ணே கொஞ்சம் நில்" என்ற குரல் கேட்டது. ஏற்கனவே கேட்டுப் பழகியதால் அது ஓடையின் குரல் என்று அவளுக்குத் தெரிந்து விட்டது.

"என்ன விஷயம். ஏன் என்னை நிற்கச் சொன்னாய்?" என்று கேட்டாள் அமுதினி.

"என் வேண்டுகோளைக் கேட்டு எனக்கு மனம் கோணாமல் உதவி செய்த உனக்கு ஒரு பரிசு தரப் போகிறேன்" என்றது ஓடை.

"எனக்குப் பரிசா?" என்று கேட்டாள் அமுதினி.


"என் அன்பளிப்பு இதோ பார்— என் மீது மிதந்து வருகிறது எடுத்துக் கொள்"

அமுதினியின் பார்வை ஓடையின் மீது சென்றது. ஒரு பட்டுச் சேலை மிதந்து வந்தது. வெள்ளிச் சரிகையால் அழகழகாகப் பூக்கள் நெய்யப்பட்டிருந்தன.

"எடுத்துக் கொள்" என்று அன்போடு அந்த ஓடை சொல்லவே. அதை எடுத்தாள். சுருட்டி முறுக்கி ஈரத்தைப் பிழிந்தாள். பிறகு, "ஓடையே மிகவும் நன்றி" என்று சொல்லிக் கொண்டு எருமை மீது அந்தப் பட்டுச் சேலையை வைத்தாள். ஊரை நோக்கி நடந்தாள். நடந்து போய்க் கொண்டிருந்தாள்.

"எனக்கு உதவி செய்த பெண்ணே கொஞ்சம் நில்" என்று ஒரு குரல் கேட்கவே அவள் திரும்பிப் பார்த்தாள். அத்திமரம். "எனக்கு நீ உதவி செய்தாய். உனக்கு ஒரு அன்பளிப்புத் தரப் போகிறேன்"

### மறைந்திருப்பது என்ன?



தம்பி தங்கைகளே! மேலே உள்ள யானை இருக்குமிடம் முற்றுப் பெறாமல் அப்படியே நிற்கிறது— எங்கே இலக்கங்களை இணைத்து பூர்த்தி செய்யுங்கள் பார்க்கலாம்—

"நானும் அப்பாவைப் போய் பார்க்க வேண்டும். அமுதினியைப் போலவே, இல்லை இல்லை அவளைவிட பல மடங்கு கூடுதலாக பொருட்களை எடுத்துக் கொண்டு வர வேண்டும்" என்று எண்ணிக் கொண்டாள் குமுதினி. மறுநாள் நன்றாக உடுத்திக் கொண்டு வெளியே கிளம்பினாள்.

நிறைய பொருட்களைக் கட்டி ஏற்றிக் கொண்டுவர வேண்டும் என்ற ஒரே நினைப்போடு நடந்து போனாள் குமுதினி. வேகு வேகென்று ஓட்டமும் நடையுமாகப் போனாள்.

"எனக்கு ஒரு உதவி செய்வாயா?" என்ற குரல் கேட்டுத் திரும்பினாள். அங்கே கொடி முந்திரிகையைக் கண்டாள்.

"என் கொடிகளில் பல பாரம் தாங்காமல் அலங்கோலமாகத்

...டாள்.

குமுதினி வந்த காலோடு ஊருக்குத் திரும்பி நடந்து போனாள். நடந்து போகும் போது ஓடையைக் கண்டாள். ஓடையில் அழகான பட்டுச் சேலை ஒன்று மிதந்து வருவதைக் கண்டாள்.

உடனே குமுதினி அதை எடுக்க ஓடையில் இறங்கினாள். பட்டுச் சேலை ஓடையின் நடுவுக்கு ஓடியது. அவளுடைய கைக்கு அகப்படாமல் பட்டுச் சேலையை இழுத்துக் கொண்டு போய் விட்டது. ஏமாற்றத்தோடு கரைத் ஏறி விட்டாள்.

போய்க் கொண்டிருந்தபோது அத்திமரத்தைக் கண்டாள். அத்தி மரத்தின் கிளையில் ஒரு முத்துமாலை தொங்குவதைக் கண்டாள். அந்த முத்துமாலை

## பாதி மனிதர்!

பஞ்சமிகு வேளையில்
பஞ்சமா பாதகம்...
ஏற்றமிறைத்த நாட்டிலே
ஏறுக்குமாறான நடத்தை...
நாற்றமெடுத்த சமூகத்தில்
நாகரீக போதை...
ஆதிமனிதர் காலம் நோக்கி
"பாதி மனிதர்" பயணம்!

★ வத்தளைவாசி

## யோசிக்கிறேன்

அன்று என்னிடம யாசித்தாய்
அதனால் உன்னை நேசித்தேன்!
இன்று யாரிடமோ யாசிப்பு
அதனால் நான் யோசிக்கிறேன்!

★ எஸ்செல்மெம ஹனிபா

## மனதாழம்!

அன்பு என்ற சொல்லுக்கு
அவளை மனதில் பதித்தேன்!
கனவிலும் நனவிலும்
அவள் அழகை ரசித்தேன்!
ஆனால்
கடலாழம அறிகிறேன் – அவள்
மனதாழம் முடியவில்லை!

★ ஆர் வை நாதன்

## அமாவாசை!

வானில் இன்று நிலவில்லை...
அமாவாசையாம் இன்று!
இனியவளே நீ வரவில்லை
அதனாலன்றோ நிலவில்லை!

★ ஏ எஸ் எம றியாட்

## நீ வேண்டும்!

உன்னைக் கண்டாலோ
உள்ளமதில் பூரிப்பு!
காணா விட்டாலோ
மனதில் பெரும தவிப்பு!
உன்னை அடைவதே
என் வாழ்வின் விருப்பு!

★ எஸ் எச் எம சக்காப்

## தொடர்கதை!

துடிக்கும் என் நெஞ்சில்
துயரம் ஒன்று தான்
தொடர் கதையாகிறது!

★ செல்வி பர்ஸானா




அன்பாகவும பண்பாகவும இருக்க மாட்டாள்.

எந்த ஒரு சின்ன விஷயத்தையும பொறுத்துக் கொள்ள மாட்டாள். கடுகடுவென முகத்தை வைத்துக் கொண்டு சிடுசிடுவெனச் சண்டைக்குப் போவாள். — பொல்லாதவள்.

அமுதினியோ நேர்மாறான குணம கொண்டவள். எவரோடும மலர்ந்த முகத்தோடு இனிக்க இனிக்கப் பேசுவாள். எந்த சந்தர்ப்பமாக இருந்தாலும சரி, எவராக இருந்தாலும சரி, எதற்காகவாவது உதவி கேட்டு வந்தால் — "மாட்டேன்" என்று சொல்லி தட்டிக்கழிக்க மாட்டாள் .

ஒரு நாள் அமுதினிக்கு தன் அப்பாவைப் பார்க்க வேண்டும என்ற ஆசை உண்டானது. குமுதினியிடம போனாள்.

"அக்கா அப்பாவைப் பார்க்க எனக்கு ஆசையாக இருக்கிறது. நீயும வாயேன். இருவரும சேர்ந்து போய் பார்த்து விட்டு வருவோம" என்று கூப்பிட்டாள்.

"நீ வேண்டுமானால் போ நான் வர மாட்டேன். எனக்கு அப்பாவைப் பார்க்க வேண்டும என்ற ஆசையும இல்லை; அவசியமும இல்லை"

குமுதினிக்கு அவள் அப்பா மீது கொஞ்சம கூட பாசமில்லை. அதனால்தான் அவள் தட்டிக்கழித்தாள்.

"சரி அக்கா. நீ வரவில்லை என்றால் பரவாயில்லை. நான் மட்டும அப்பாவைப் பார்த்து விட்டு வருகிறேன். நான் இரவு தங்க மாட்டேன். எப்படியும வந்து விடுவேன்" என்று சொன்னாள் அமுதினி.

உடன் திரும்ப வேண்டும என்ற நினைப்போடு பயணப் பட்டாள். வெகு வேகமாக கொடி முந்திரிகை சொன்னது.

அமுதினி தொங்கிக் கொண்டிருந்த கொடிகளை ஒடித்து அப்புறப்படுத்தினாள்.

"அப்...பா...டி... இப்போ மிகவும சுகமாக இருக்கிறது" என்று பாரத்தை இறக்கியவன் எப்படி மூச்சு விட்டுக் கொள்வானோ அதைப் போல பெருமூச்சு விட்டுக் கொண்டது கொடி முந்திரிகை.

"நான் வருகிறேன்" என்று பயணம சொல்லி விட்டு அமுதினி நடந்தாள். அவள் நடந்து போய்க் கொண்டிருக்கும போது இன்னொரு குரல் அவளைக் கூப்பிட்டது.

"எனக்கு வந்து கொஞ்சம உதவி செய்வாயா?" அந்தக் குரல் அவளைக் கூப்பிட்டது. குரல் வந்த திசையைப் பார்த்தாள். அங்கே ஒரு அத்திமரம இருப்பதைக் கண்டாள்.

"நீயா என்னைக் கூப்பிட்டாய்?" — அமுதினி கேட்டாள்.

"ஆமாம நான்தான் உன்னைக் கூப்பிட்டேன்" — அத்திமரம.

"அத்தி மரமே உனக்கு நான் என்ன உதவி செய்ய வேண்டும?"

"என் கிளை ஒன்று ஒடிந்து தொங்குகிறது பார். அந்தக் கிளையை அப்படியே விட்டு விட்டால் வெயிலில் காய்ந்து செத்துப் போய் விடும. அதை சேர்த்து கட்டி விடேன்" என்று தயவோடு கேட்டது.

"ஐயோ பாவம" என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டு "அத்திமரமே நீ கேட்டுக் கொண்டபடியே நான் உனக்கு உதவி செய்கிறேன்" என்றாள் அமுதினி.

ஒடிந்து தொங்கிய கிளையைத் தூக்கிக் கட்டிவிட்டு, "இப்போ சரியா?" என்று கேட்டாள் அமுதினி.

"சரி" என்பதற்கு அறிகுறியாக அத்திமரம தன் கிளயை ஆட்டிக்

றது. இந்தக் கற்களும மணற் குவியலும, காய்ந்த இலைச் சருகுகளும" என்றது.

அமுதினி பார்த்தாள்— அங்கே உருளை உருளையான கற்கள் கிடந்தன. ஒரே திட்டாக மணல் குவியல் கிடந்தது— காய்ந்த இலைச் சருகுகள் ஏராளமாகச் சிக்கிக் கிடந்தன.

கற்களைப் பொறுக்கிப் பொறுக்கிப் போட்டாள். மணலை அள்ளி அள்ளிக் கரையில் கொட்டினாள். சருகுகளை எடுத்து எடுத்து வீசினாள்— தடையாக இருந்த எல்லாவற்றையும அகற்றியதும ஓடை கலகலவென்று சிரித்தபடியே மளமளவென்று ஓடியது. "நான் வருகிறேன்" என்று சொல்லி விட்டுப் பயணப் பட்டாள்—

அவளுடைய அப்பா இருக்கும கிராமத்தை நோக்கி நடந்தாள். சிறிது நேரத்தில் அண்ணன் வீட்டை அடைந்தாள். அங்கே அவளுடைய அண்ணனும அண்ணியும இல்லை. வயலுக்கு வேலை செய்யப் போயிருந்தனர். அப்பா மட்டுமதான் இருந்தார்.

அமுதினியைக் கண்டதும அவளுடைய அப்பாவுக்கு ஒரே ஆனந்தமாகிப் போய் விட்டது.

அப்பாவோடு அன்போடும ஆசையோடும கதைத்தாள். சாயங் காலத்திற்குள் வீட்டுக்குப் போய்விட வேண்டும என்ற எண்ணத்தில் அமுதினி புறப்படத் தயாரானாள்.

அமுதினி உடனே திருமபுவதில் கவலைப்பட்ட அவளுடைய அப்பா மனதை தேற்றிக் கொண்டு அமுதினிக்கு நல்ல பாத்திரப் பண்டங்கள் கொடுத்தார். விரித்து படுக்க பஞ்சணை மெத்தை கொடுத்தார்— குளிரடித்தால் போர்த்திக் கொள்ள அருமையான கமபளம கொடுத்தார். பயனுள்ள பொருட்கள் எத்தனையோ கொடுத்தார்.

"என்ன அன்பளிப்பு?"

"இதோ பார்" — என்று கிளையை ஆட்டிக் காட்டியது. அந்தக் கிளையில் ஒரு முத்து மாலை தொங்கியது.

"மிகவும நன்றி" என்று சொல்லிக் கொண்டு எருமையைக் கூட்டிக் கொண்டு ஊரை நோக்கி நடந்தாள்.

"எனக்கு உதவி செய்த பெண்ணே கொஞ்சம நில்" என்ற குரல் கேட்டது. அது கொடி முந்திரிகையின் குரல் என்பது அவளுக்குத் தெரிந்து விட்டது.




"கொடி முந்திரிகையே என்னை ஏன் நிற்கச் சொன்னாய்?" என்று கேட்டாள்.

"எனக்கு உதவி செய்த உனக்கு அன்பளிப்புத் தரப் போகிறேன். கொத்துக் கொத்தாய் முந்திரிகைப் பழங்கள் பழுத்துத் தொங்குகின்றன. எடுத்துக் கொள்" என்றது.

எருமை மீது இருந்த கூடையை எடுத்தாள். அதில் கொஞ்சம பழங்களைப் பறித்துப் போட்டாள்.

"மிகவும நன்றி. நான் போய் வருகிறேன்" என்று அவள் சொல்லி எருமையைக் கூட்டிக் கொண்டு போனாள். வீட்டை அடைந்தாள். இவ்வளவு பொருட்களோடு அமுதினி வருவதைக் கண்ட குமுதினிக்கு பொறாமை பொங்கிக் கொண்டு வந்தது.

அக்கா குமுதினி எல்லாவற்றையும பார்த்து தலை கால் புரியாத சந்தோஷமடைவாள் என்று எண்ணினாள். ஆனால் அதற்கு மாறாக பொறாமையால் வெந்து போனாள்.

அதைக் கொஞ்சம கத்தரித்துச் சரிப்படுத்தி விடேன்" என்று கேட்டது.

"போ போ எனக்கு அதற்கெல்லாம நேரமில்லை. நீ அலஙகோலமாகக் கிடந்தால் என்ன அழகாகக் கிடந்தால் எனக்கென்ன?" என்று எரிச்சலோடு பேசிக் கொண்டு நடந்தாள்.

இவ்வாறு அத்திமரமும, ஓடையும குமுதினியிடம உதவி கேட்டன. ஒன்றுக்கும உதவி செய்யாமல் தன்பாட்டிலே போனாள் குமுதினி.

அவள் அப்பா இருக்கும கிராமத்தை அடைந்தாள். வீட்டு வாசலில் காலடி எடுத்து வைத்தாள்.

அவள் அப்பா அங்கே இல்லை. அவளுடைய அண்ணனும அண்ணியுமதான் இருந்தனர். குமுதினியைக் கண்டதும அவளுடைய அண்ணனுக்கும அண்ணிக்கும கோபம பொத்துக் கொண்டு வந்தது.

"அமுதினி வந்து அப்பாவை ஏமாற்றி எதை எதையெல்லாமோ அள்ளிக் கொண்டு போனதோடு நல்ல ஒரு எருமையையும கூட்டிக் கொண்டு போய் விட்டாள்.

இப்போது இருக்கிறதையெல்லாம அள்ளிக் கொண்டு போக நீ வந்திருக்கிறாயாக்கும? போ வெளியே... போ... வெளியே. அப்பா உன்னைக் கண்டால் இருக்கிறதையெல்லாம தூக்கித் தூக்கிக் கொடுத்து விடுவார். போ வெளியே மரியாதையா போ வெளியே" என்று அவளுடைய அண்ணி விரட்டி விட்

தொங்கிக் கொண்டிருந்தது.

உடனே அதை எடுக்கும ஆசையோடு அந்தக் கிளைப் பக்கம போனாள். முத்து மாலையை எடுக்கப் போகும போது அந்த அத்திமரக் கிளை அவள் தலையில் ஓங்கி ஒரு அடி அடித்தது. "ஆ அமமா" என்று அலறினாள்.

ஏமாற்றத்தோடு நடந்து போனாள். தலை வேறு அடி பட்ட காரணத்தால் வீங்கிக் கொண்டது. வேதனையோடு நடந்து போனாள். நடந்து போகும போது கொடி முந்திரிகையைக் கண்டாள்.

கொடி முந்திரிகையில் பழங்கள் கொத்துக் கொத்தாய் தொஙகின. பழங்களைக் கண்டதும அவலோடு பறித்துத் தின்ன ஓடினாள். கைக்கு எட்டியதைப் பறிக்கப் போனாள். முகத்தில் ஒரு இடி இடித்துவிட்டு மேலே போய் விட்டது.

அங்குமம ஏமாற்றத்தோடு நடந்து போனாள் குமுதினி.

நடந்த களைப்பு ஒரு பக்கம. பசி ஒரு பக்கம. அடிபட்ட வேதனை ஒரு பக்கமாக நடந்து போனாள். குமுதினி வீட்டை அடைந்தாள்— குமுதினியின் நிலையைக் கண்டு அமுதினி அதிர்ந்து போனாள்.

"அக்கா, என்னக்கா நடந்தது?" என்று பதறியபடி கேட்டாள். குமுதினி விவரத்தை சொல்லத் தொடங்கினாள்— பாதிக் கதையைக் கேட்டதுமே விஷயம புரிந்து விட்டது.

"இரு அக்கா— முதலில் சாப்பிடு" என்று சொல்லி சாப்பாடு வைத்தாள். அடிபட்ட இடஙகளுக்கு ஒத்தடம கொடுத்தாள். படுக்கையை விரித்து தூஙகுமபடி சொன்னாள். அமுதினி தனக்கு நடந்ததையும சொன்னாள்—

அமுதினியின் நல்ல குணத்திற்கு என்ன நடந்தது என்பதையும, தனது பொல்லாத குணத்திற்கு என்ன கிடைத்தது என்பதையும உணர்ந்து கொண்ட குமுதினி அன்று தொடக்கம அமுதினியின் குணத்தைப் பின்பற்றி நல்லவளாக மாறி விட்டாள். (த)

# ஜெயலலிதாவுக்கு துரோகமா?

## "ஒரு நாளும் இல்லை" என்று வீரப்பன் உறுதி

ஜெயலலிதாவுக்கு துரோகம் செய்ய மாட்டேன் என்று ஆர். எம் வீரப்பன் கூறினார்.

எம் ஜி ஆர் பிறந்தநாள் விழாவில் வீரப்பன் கலந்து கொண்டு பேசியதாவது—

அ தி மு க தலைமைக் கழகத்தில் புரட்சித் தலைவி அருமை சகோதரி ஜெயலலிதா எம் ஜி ஆரின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார்.

நான் லட்சாதிபதியோ கோடீஸ்வரனோ அல்லன்! நான் உழைத்து ப்பிழைப்பவன்- மற்றவர்கள் தோளில் ஏறி சவாரி செய்பவன் அல்லன்!

எம் ஜி ஆரின் புகழால்தான் கருணாநிதி வாழ்ந்தாரே தவிர கருணாநிதியால் எம் ஜி ஆர் வாழவில்லை!

பாம்புக்கும் பால் வார்ப்பார் எம் ஜி ஆர். ஆனால் அந்தப் பாம்பு படம் எடுத்து ஆடினால் அந்தப் பாம்பையே அடிப்பார் எம் ஜி ஆர்!

எம் ஜி ஆரின் உறவு கருணாநிதியை உயர்த்தியதே தவிர கருணாநிதியால் எம் ஜி ஆர் உயரவில்லை!

கட்சியில் பதவி கிடைக்காத சில தொண்டர்கள் எங்களை நட்டாற்றில் விட்டு விட்டீர்களே என நினைக்க வேண்டாம். என்னுடைய இணைப் பொதுச் செயலாளர் பதவி பொறுப்பைத் துறந்து சகோதரி ஜெயலலிதா தலைமையில் கட்சித் தொண்டனாகவும் தயார்!

வீரப்பன் யார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். பதவிக்காக நான் இல்லை! எம் ஜி ஆரின் புகழ் வளர்ப்பதற்காக என் தாய் என்னை இங்கே வந்து சேர்த்திருக்கிறாள்.

இந்த வீரப்பனால் ஜெயலலிதாவுக்கோ வேறு எந்தத் தலைவருக்கோ சிறு துளி துரோகம் கூட நடக்காது!

இவ்வாறு வீரப்பன் கூறினார்.

(ம—10)

# கோலமயிலும் குருவிகளும்

"உங்களிடம் இருந்தால் கோல மயில், வெளியேறினால் குருவியா" என்று அ தி மு க துணைப் பொதுச் செயலாளர் காளிமுத்துவுக்கு ஆலடி அருணா கேள்விக்கணை விடுத்து உள்ளார்.

சென்னை மாதவரத்தில் தி மு க பொதுக் கூட்டம் நடந்தது. இதில் ஆலடி அருணா கலந்து கொண்டு பேசினார்.

அவர் பேசியதாவது—

தேர்தலில் தி மு க தோற்றது. ஒரு தொண்டன் கூட கட்சியில் இருந்து விலகவில்லை. அ தி மு க வெற்றி பெற்றது. அதன் தலைவியே, கட்சியும் வேண்டாம், அரசியலும் வேண்டாம் என்று ஓடுகிறார், அவரை இழுத்துப் பிடித்து நிறுத்தி இருக்கிறார்கள், மூத்த தலைவர்கள் அந்த முகாமில் இருந்து வெளியேறுகிறார்கள்.

வெற்றி பெற்ற கட்சிக்கு இந்த விபத்து ஏன்?

உடல் நலத்திற்காக, ஓய்வு எடுக்க விரும்பும் தலைவர்கள், கடற்கரை பகுதிகளில் மலைச் சாரலில் — மக்கள் நடமாட்டம் இல்லாத இடத்தில் தங்குவார்கள் என்று தான் நாம் கேள்விப் பட்டு இருக்கிறோம். ஆனால் நடிகை ஜெயலலிதா ஓய்வு எடுக்க ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குப் போகிறார். நட்சத்திர ஹோட்டல் ஓய்வு எடுக்கும் இடமல்ல. உல்லாசத்திற்கும், சல்லாபத்திற்கும் உள்ள இடம்.

வெளியேறிய தலைவர்கள் மீது சோமசுந்தரம் பழி சுமத்துகிறார். நண்பர் காளிமுத்து கிண்டல் செய்கிறார், குருவி குடித்து சமுத்திரம் வற்றி விடாது என்று கேலி செய்து இருக்கிறார், வெளியேறிய தலைவர்கள் சாதாரணமானவர்கள். குருவிகள் என்றால் அந்த குருவிகளுக்கு ஏன் பொதுச் செயலாளர் பொறுப்புகளைக் கொடுத்தீர்கள்? உங்களிடம் இருந்தால் கோல மயில் வெளியேறினால் குருவியா?

காளிமுத்து குருவிகள் என்றார், அண்ணன் வீரப்பன் அவர்கள் கோபுரத்தில் இருந்து கீழே விழுந்த பொம்மைகள் என்று ஹண்டே, ராகவானந்தம் பற்றி கூறியிருக்கிறார். உண்மையில் அவர்கள் பொம்மையும் அல்லர். அண்ணா தி மு க கோபுரமும் அல்ல அ தி மு க ஒரு அலங்காரப் பந்தல்.

— இவ்வாறு கூறினார் ஆலடி அருணா.

(ம-10)

# உஷா ராஜேந்தர் உயிருக்கு ஆபத்து

பழனி தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் உஷா ராஜேந்தர் "எனது உயிருக்கு ஆபத்து. எனவே எனக்கு பாதுகாப்பு கொடுங்கள்" என்று போலீஸில் புகார் கொடுத்துள்ளார்.

பழனி நாடாளுமன்றத் தேர்தலில் டி ராஜேந்தரின் தாயக மறுமலர்ச்சிக் கழகம் சார்பில் உஷா ராஜேந்தர் போட்டியிடுகிறார்.

அவருடன் டி ராஜேந்தரும் சென்று பொதுக் கூட்டங்களில் பேசி ஓட்டுக் கேட்கிறார்.

கட்சி தேர்தல் அலுவலகத்தை நோக்கி நான் வந்து கொண்டிருந்த போது சுமார் 25 தி மு க வினர் மோட்டார் சைக்கிள்களிலும் காரிலும் என்னைப் பின் தொடர்ந்து வந்தனர்.

அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அவர்கள் என்னை கொலை செய்யும் நோக்கத்துடன்தான் பின் தொடர்ந்து வந்தனர். அஞ்சா நெஞ்சனும் எங்கள் கட்சியின் தலைவரும் எனது அன்புக் கணவருமான டி ராஜேந்தரைப் போல நானும் துணிச்சலுடன் தேர்தல் அலுவலகத்தைத் திறந்து வைக்க தேர்தல் அலுவலகம் அருகே சென்றேன்.

அப்போது தி மு கவினர் தேர்தல் அலுவலகத்திற்குள் அத்துமீறிப் புகுந்து டி ராஜேந்தர் நற்பணி மன்ற நிர்வாகிகளைத் தாக்க முயன்றனர். இதில் எங்கள் கட்சி உறுப்பினர் ஒருவர் தாக்கப்பட்டார்.

என்னை பயங்கர ஆயுதங்களால் கொலை செய்ய முயன்றனர். நல்ல வேளையாக எனது கட்சிக்காரர்களால் நான் காப்பாற்றப்பட்டேன்.

இவ்வாறு உஷா டி ராஜேந்தர் கூறினார்.

(ம—10)

# சென்னை கோட்டையை அ. தி. மு. க. பிடித்து விடும்!

"சென்னை கோட்டை அ தி மு கவுக்கு டில்லி செங்கோட்டை காங்கிரஸுக்கு" என்று காளிமுத்து கூறினார்.

அ தி மு க வீரவணக்க நாள் பொதுக் கூட்டம் சென்னை திருவல்லிக்கேணியில் நடந்தது. கூட்டத்தில் அ தி மு க துணைப் பொதுச் செயலாளர் காளிமுத்து எம் பி கலந்து கொண்டு பேசியதாவது—

இந்தி ஆதிக்கம் இப்போதும் நடமாடிக் கொண்டுதான் இருக்கிறது! தமிழ்நாட்டில் இந்தி வேண்டாம் என்று முன்பு கருணாநிதி போராடினார். அதற்காக தொலைக்காட்சிப் பெட்டியை உடைத்து நாடகம் ஆடினார். இப்போது என்னவென்றால் தொலைக்காட்சிப் பெட்டியை தடவிக் கொடுக்கிறார். காரணம் அவருடைய முகம் தொலைக்காட்சியில் தெரிவதுதான்!

இந்தி ஆதிக்கம் செலுத்துகிறது என்று முன்பு கூறிய கருணாநிதிக்கு இப்போது தொலைக்காட்சியில் புகுத்தப்படும் இந்தியை எதிர்க்க தெம்பு இல்லை திராணி இல்லை!

இந்தியை எதிர்க்கக் கூடிய மிகப் பெரிய பட்டாளம் தி மு கவில் இல்லை! அங்கு இருப்பது நொண்டிக் குதிரையும் நோயாளிப் பட்டாளமும்தான்!

1980 இல் தேர்தலில் அ தி மு க 2 இடம்தான் வெற்றி பெற்றது. உடனே கருணாநிதி "கோட்டையை விட்டு கோடம்பாக்கம் போங்கள்" என்று எம் ஜி ஆரை சொன்னார். ஏளனம் செய்தார். எள்ளி நகையாடினார். எம் ஜி ஆர் செல்வாக்கை இழந்து விட்டார் என்று கத்தினார். கதறினார்.

ஆனால் இப்போது ஒரு இடத்தைக் கூடப் பெறாத மானம் கெட்டவர்கள் மக்கள் கருத்துக்குப் புறம்பாக ஆட்சி நடத்துகிறார்கள்!

வி பி சிங் ஆட்சி இப்போது ஆட்டம் கண்டு விட்டது! பஞ்சாப் பிரச்சினை கொழுந்து விட்டு எரிகிறது! காஷ்மீர் பிரச்சினை பரவுகிறது!

தேசிய முன்னணி ஆட்சியை மக்கள் தூக்கியெறிந்து விடுவார்கள். இனி சென்னை கோட்டை எங்களுக்குச் சொந்தம். செங்கோட்டை காங்கிரஸுக்குச் சொந்தம்!

இவ்வாறு காளிமுத்து கூறினார்.

(ம—10)

# அறுவை டி.வி. நிகழ்ச்சியை நிறுத்த சுலபமான வழி

டி வியில் நிகழ்ச்சிகள் பார்க்கும் பொழுது அநேகம் பேருக்கு எரிச்சல் வரும். டி வியைப் போட்டு உடைக்கலாமா, டி வி நிகழ்ச்சித் தயாரிப்பாளரை உதைக்கலாமா என்றெல்லாம் எரிச்சல், கோபம் சிலபேருக்கு வரும்.

அத்தகைய கோபிஷ்டர்களைத் திருப்திப்படுத்தவும் அதே நேரத்தில் டி விக்கும் எந்த ஆபத்தும் ஏற்படாத வகையில் புதிதாக செங்கல் வடிவில் ஒரு கருவியை பிரிட்டனில் கண்டுபிடித்துள்ளார்கள்.

இந்த "செங்கல்"லைத் தூக்கி டி வி ஸ்கிரீன் மீது எறிந்தால் நிகழ்ச்சி நின்று விடும். இன்னொரு "செங்கல்"லைத் தூக்கி எறிந்தால், நின்று போன டி வி நிகழ்ச்சி தொடரும்.

இந்த "செங்கல்"லுக்குள் பேட்டரியில் இயங்கும் ஒரு ரேடியோ டிரான்ஸ்மீட்டர் பொருத்தப்பட்டிருக்கும். ஒரு டிரெமளர் சுவிச். ஒரு ஆட்டோமேடிக் வைப்ரேட்டர் இதில் இருக்கும்.

முதல் முறை "செங்கல்" டி வி ஸ்கிரீனில் பட்டால் நிகழ்ச்சி நிற்கவும், மறுமுறை பட்டால் நிகழ்ச்சி தொடரவும் மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு ஏற்பாடுகள் உதவும்.

அடி...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய சக்தி மண்டேலாவுக்கு ...

வுக்கு இப்போது நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள்.

எவலினுக்கு மண்டேலாவின் கிளர்ச்சியாளர் கணவனாக ... தொடர்புகள் ...

போலவே புரட்சி எண்ணம் கொண்டவர்கள்.

மண்டேலா சுதந்திரப் பறவையாகி விட்டார். தென் ஆப்ரிக்க மக்கள் ...

# இனப்பூசல் மலிந்..

(14 ...

# ஒட்டகம்

கூடிய சக்தி மண்டேலாவுக்கு மட்டுமே உண்டு என்று கருது கிறார்கள் பல தேவாத தென் ஆபிரிக்க வெள்ளை இனத்தவர்.

நெல்சன் மண்டேலா குடும்ப வாழ்விலும் பல துயரங்களைச் சந்தித்தவர்,

இவரது முதல் மனைவியின் பெயர் எவலின் நொடி தம சங்கா, மண்டேலாவின் சட்டப் படிப்புக்கு பண உதவி செய்து வந்த இவர் தாதியாகக் கடமை யாற்றிவந்தார். இவர்களது மூத்த பிள்ளை கார் விபத்தில் சிக்கி மரணமடைந்தார். மகள் குழந் தையாக இருக்கும் போதே இறந்து போனார். மண்டேலா கிளர்ச்சியாளர் களுடனான தொடர்புகள் சிறிதும் பிடிக்க வில்லை. இதன் அடிப்படையில் ஆரம்பித்த மனக்கசப்புகள் இறுதியில் பிரிவில் போய் நின் றது. முதல் தடவையாக அவர் மீது வழக்கு பதிவாகி நான்கு ஆண்டுகளாக அவர் மீது விசா ரணை நடைபெற்று வந்த போது தான் ரொமசாமோ வினி மடிக்கிசெலாவை (வினி மண் டேலா) மணந்து கொண்டார். இவர் மூலம் பிறந்த இரு புதல் வியரான செனானி, சின்ட்ஸி ஆகிய இருவரும் தாயைப் பறவையாகி விட்டார். தென் ஆபிரிக்க மக்கள் மட்டுமின்றி உலக மக்கள் கூட இன்று அவர் பின்னால் அணி திரண்டு விட்ட னர். நீண்ட காலத்தின் பின்னர் தென் ஆபிரிக்காவில் ஒரு மாபெரும் திருப்பம் விரைவி லேயே நிகழப் போவது மிகவும் நிச்சயமாகி விட்ட நிலையில், அதை மண்டேலா எப்படி நிர்ண யித்து வழி நடத்தப்போகிறார் என்பதை முழு உலகுமே ஆவ லோடு எதிர்பார்த்துக் கொண்டி ருக்கிறது.

(ம-032)

## பொல்லாத....

(17 ஆம பக்கத் தொடர்ச்சி)

புறக்கோட்டைக்கு செல்ல வேண்டும்- புறக்கோட்டைக்கு சென்று திரும்பி வருவோமென நினைத்துக் கொண்டேன்-

...யில் ஒரு சதமுமில்லையென் பது ஞாபகத்திற்கு வந்தது பரவா யில்லை அவளுடன் கதைதது விட்டு நடந்து வந்தால் போகு தென நினைத்துக் கொண்டேன்-

பஸ் புறக்கோட்டையில் நின் றது- பிரயாணிகள் இறங்கிக் கொண்டிருந்தார்கள்- அம்மா... சிறுபிள்ளையொன்றின் குரல் கேட்டு வெளியில் பார்க்கிறேன்-

அப்பிள்ளை அவளைப் பார் த்து கையசைத்துக் கொண்டு நின் றது- பிள்ளையின் பக்கத்தில் வாட்டசாட்டமான ஒரு இளை ஞன்- அது அந்த இளைஞனின் பிள்ளைதானென்பது பார்த்து மாத்திரத்திலேயே எனக்குப் புரிந் தது-

அப்படியானால் அவள் அந்த இளைஞனின் மனைவி எனக்கு உடம்பெல்லாம் வியர்த்தது- அவள் பஸ் வண்டியை விட்டு இறங்கி அப்பிள்ளையைத் தூக்கி னாள்-

"...வேண்டாம நாளைப் ..." என்ற முது மொழி நினை ...ங்கவனாய் அவர்கள் ... எதி... யா... கட்டினேன் என் ...க்கிற்கு ஐந்து ... நடந்தாக வேண்டுமே- ...(த)

# மண்டேலா...

(9 ஆம பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அந்த செய்திகளுக்கு அவலமான செய்தியாக இருக்கும்- அல்லது பேரதிர்ச்சி தரக்கூடியதாக இருக்கும்-

காலை 5-30 மணிக்கே கண் விழித்து விட வேண்டும்- படுத் திருந்த கம்புளியை சுருட்டி வைத்து விட்டு சிறையில் தொங்கப்பட்டிருந்த அடை யாள அட்டையை ஜன்னலூ டாக சிறைக் காவலர்கள் கண் களுக்குத் தெரியக் கூடியதாக நீட்டிக் கொண்டிருக்க வேண் டும- நாங்கள் உடுத்தித் தயா ராக இருக்கிறோமா என்று ஒரு தடவை நோட்டம் விட்டுச் செல்வார்கள்- இதன் பின்னர் எங்கள் சிறைக்கதவுகளைத் திறந்து விடுவார்கள்- முகம் கைகால் கழுவி காலைச் சாப் பாட்டுக்குத் தயாராக வேண் டும்-

சோளக் கஞ்சியுடன் ஒரு கரண்டி சீனி கொடுப்பார்கள்- கொஞ்ச காலம் கழிந்த பின் னர் சிறிது பால்மா கொடுத்தார் கள்- ஒரு கப் சூப் அல்லது காப்பி கொடுத்தார்கள்- அதன் பிறகு வேலைக்கு கூட் டிக் கொண்டு போவார்கள்- குவியல் குவியலாகக் கிடக்கும் சுண்ணாம்பு அல்லது கல்லை ...ரி எடுக்கும் கரிண்டியால் அள் ... போட வேண்டும்-

சிலவேளை கிறிஞ்சல்களைப் பொறுக்க கடற்கரைக்கு எங் களை அழைத்துப் போவார்கள் அல்லது நிலத்தில் களை பிடுங்க கூட்டிப் போவார்கள்- வெறுங் கைகளால் அல்லது மண் வெட்டி கொடுத்துச் செய்யச் சொல் வார்கள்-

சுத்தியல் ஸ்க்ரு ட்ரைவர் சிவுளி இவை எங்கள் கைபட் டதே இல்லை - இவற்றைக் கொண்டு தச்சு வேலையோ குழாய்கள் பழுது பார்க்கும் வேலையோ செய்ய அனுமதிப்ப தில்லை- இக்கருவிகள் எங்கள் கைகளில் அகப்பட்டால் நாங் கள் தப்பித்துப் போய் விடுவோ மென்று நினைக்கிறார்கள்-

நெல்சன் மண்டேலாவும் நானும் - நான் இந்தச் சிறைக்கு வருவதற்கு முன்பே நெருங்கிய நண்பர்களாகப் பழகியவர்கள் அவர் அடைபட்டுக் கிடந்த அதே சிறையில் என்னையும் சேர்த்தார்கள்- அதனால் இன் னும் நெருக்கமாகி விட்டோம்- அவர் அற்புதமான மனிதர்"

— இவ்வாறு கூறினார் தென்னாபிரிக்க இந்தியரான எம் டி நாயுடு-

அவரது பேச்சிலிருந்து றொபன் தீவின் ஒருநாள் வாழ் க்கையே பலநாள் நரக வாழ்க் கையாக இருக்கும போது பல வருடங்களை சகித்துக்கொண்டு சிறையில் வாழ்ந்த நெல்சன் மண் டேலாவின் பொறுமையை விவரிக்க வார்த்தை தான் உண்டோ?

(ம)

(14 ஆம பக்கத் தொடர்ச்சி)

கும- இங்கு இந்தப் பகுதிகளைச் சேர்ந்த இன மக்களை விட வும் வெளி இன மக்கள் எண் ணிக்கை அதிகமாக உள்ளது-

இதர சோவியத் குடியரசுக ளைச் சேர்ந்த மக்கள் எஸ்தோ னியாவுக்குள் வருவதற்கும் பதிவு செய்து கொள்வதற்கும் குறியீடுகள் நிர்ணயிக்கப்பட வேண்டுமென எஸ்தோனிய இயக்கப் பிரதிநிதிகள் கூறி வருகின்றனர்-

இந்தப் பிரச்சினைகள் எல் லாவற்றிலும் அனைத்துத் தரப்பு களும் நல்ல அடிப்படைகளைக் கொண்ட நிலைப்பாடுகளை வைத்துள்ளன- அனைவருக்கும பொதுவான ஒரு சிந்தாந்த அடிப்புடையை கண்டறிந்தால் மட்டுமே இந்த இனப் பூசல் களைத் தீர்க்க முடியும்-

இந்தப் பூசல்களுக்குத் தீர்வு காண பின்வரும வழிகளைப் பின்பற்றலாம்—

* பழிவாங்குதல் காலகட் டத்தின் போது வேறு இடங்க ளுக்கு கொண்டு போய்க் குடி யமர்த்தப்பட்ட மக்களுக்கு உடைமைகள் நஷ்டஈடுகள் சலுகைகள் அளிப்பது சம்பந் தமாக தனக்குள்ள பொறுப்பை அரசு அங்கீகரிக்க வேண் டும்-

இத்தகைய நடவடிக்கை மூலம் கிரீமிய வகை இனப் பூசல்களுக்குத் தீர்வு காண இய லும்-

சோவியத் குடியரசுகளில் சுய நிர்ணயக் கோட்பாடுகள் சுய நிர்வாகக் கோட்பாடு களை சோவியத் மத்திய அரசு அறிமுகம செய்ய வேண்டும்- இதன் வாயிலாக பால்டிக் வகை இனப் பூசல்களுக்கு தீர்வு ஏற்பட முடியும்-

* சோவியத் யூனியனில் பிர தேசங்களைப் பிரித்த முறை குறித்தும் நிர்வாக அமைப்புக்க ளைப் பிரித்த முறை குறித்தும மறுபரிசீலனை செய்து உரிய திருத்தம் செய்ய வேண்டும-

[ம]

# ஒட்டகம் நல்ல உதவி

மது பானத்தை "உள்ளே தள்ளியதால்" தள்ளாடிய ஒட்ட கத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு இருக்கிறீர்களா?

இல்லையென்றால், ராஜஸ் தான் மாநிலத்தில் உள்ள பொலீ ஸ்காரர்களைக் கேளுங்கள், கதை கதையாகச் சொல்வார் கள்.

கள்ளச் சாராயம காய்ச்சுபவர் கள், சாராயக் கேன்களை ஒட்ட கங்களின் மேல் வைத்து அனுப்பு வது வழக்கம.

ஏற்கனவே பழக்கப்பட்டவை ஆதலால், அவை போக வேண் டிய இடத்திற்குப் போய் விடும, இதில், அவை வேகமாகப் போக வேண்டும என்பதற்காக தண் ணீரோடு கசிப்பையும கலந்து குடிக்க வைத்து விடுவார்கள்.

ஒட்டகமும "பட்டை" அடித்து விட்டு "ஜம" என்று நடக்கும, இதில் விசேடமென்ன என்றால், இந்த "ஸ்பெசல்" ஒட்டகங்களுக்கு, காக்கிச் சட் டையைப பார்த்ததும, "அலர்ஜி" ஏற்பட்டு விடுமாம!

எதிர்வரும பொலீஸ்காரர்க ளுக்கு கிடைக்கும அடி நெத்தி அடிதான்! இப்போது ராஜஸ்தானில், ஒட்டகங்களைக் கவனிப்பதற் காவே கூடுதலாக பொலீஸார் நியமிக்கப்பட்டு இருக்கிறார் கள்!

(ம-10)

# கடற்கொள்ளைக்காரர் ஓயவில்லை

கடற் கொள்ளைக்காரர்கள் என்றதும நமக்கு டார்ஸானும பாண்டமுமதான் நினைவுக்கு வருவார்கள். ஆனால் 18ஆம நூற்றாண்டிலும கூட கடற் கொள்ளைக்காரர்கள் இந்த சமுத்திரத்திலும திரிந்து வந்த னர்.

இலங்கைக்கும இந்தியாவுக் கும வந்து பல்வேறு பொருட் களை எடுத்துச் செல்லும வாணிப கப்பல்கள் இக்கொள்ளைக்கா ரர்களின் இலக்குகளாக இருந் தன.

ஆனால் கடற் கொள்ளைக்கா ரர்கள் எல்லாம பழங்கதை என்று நினைத்துவிட வேண் டாம. இப்போதுகூட கொடு மைக்குப் பேர் போன இக்கடற் கொள்ளைக்காரர்கள் அதே கொடூரத் தன்மையுடன் கமகா காக்குதல்களை நடத்தியே வருகி றார்கள்.

மலேசியா, கமபோடியா மற்றும தாய்லாந்து ஆகிய நாடுக ளுக்கு இடைப்பட்ட கடல், தாய்லாந்த விரிகுடா என அழைக்கப்படுகிறது. இக்குடாக் கடலில் கடற் கொள்ளைக்கா ரர்கள் அதிகம.

பல்வேறு நாடுகள் சுற்றிவர இருப்பதால் வர்த்தக கப்பல் போக்குவரத்து இங்கு அதிகம. இதனால் கடற் கொள்ளைக்கா ரர்களும மிகுதி.

இக்கடற் கொள்ளைக்காரர் களின் கொடூரத் தன்மைகள் நாம கேள்விப்பட்டுள்ள கொடூ ரங்களுக்கு கொஞ்சமும குறைந் தவை அல்ல. சில ஆண்டுகளுக்கு முன்னர் வியட்நாமில் இருந்து சீனர்கள் விரட்டப்பட்ட போது ஆயிரக்கணக்கானோர் புகலிடம தேடி படகுகளில் நாட்டை விட்டு வெளியேறினர்.

கடல் விபத்துகளில் சிக்கி வழியி லேயே இறந்தனர். மேலும பலரை, மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக கடற் கொள்ளைக்காரர்கள் தாக்கி, இந்த அகதிகளிடம இருந்தவற்றையெல்லாம பறித் துக் கொண்டு அவர்களைக் கண்டம துண்டமாக வெட்டிக் கொலையும செய்தனர். ஏராள மான வியட்நாமிய பெண்கள் இக்கடற் கொள்ளைக்காரர்களி னால் முரட்டுத்தனமாகக் கசக் கிப் பிழியப்பட்டனர்.

சமீபத்தில் நடந்த விடயம இதற்கு ஒரு சான்று.


தாய்லாந்த கடற்கரையில் பதினொரு பெண்களின் நிர் வாண சடலங்கள் சமீபத்தில்

இவர்களில் பெருமபாலோர் ஒதுங்கின. இவர்களது கழுத்து களில் நைலான் கயிறு கட்டப் பட்டிருந்தது. முரட்டுத்தனமா கக் கற்பழிக்கப்பட்டிருந்தனர் என்பதற்கான அடையாளங்கள் உடலில் காணப்பட்டன.

வியட்நாமில் இருந்த படகு களில் வெளியேறிய அகதிகள் கூட்டம ஒன்றைச் சேர்ந்தவர் களே இவர்கள் என்று நமபப்படு கிறது. இப்பெண்களின் உடைமை களைக் கவர்ந்து கொண்ட கடற் கொள்ளைக்காரர்கள் இவர் களைக் கசக்கி முகர்ந்து விட்டு கழுத்தில் கயிற்றைக் கட்டி கடலில் இறக்கி யிருக்கிறார்கள்.

மூச்சுத்திணறி இறக்கும வரை கடலில் இமுத்துச் சென்று விட்டு அவர்கள் இறந்ததும கயிற்றை விட்டு விட்டு சென்றிருக்கிறார் கள். கொடுமைகளுக்குப் பேர் போன இந்த கடற் கொள்ளைக் காரர்கள்!

(த-032)



# காதலி தேடிக் கொடுத்த மனைவி

ஆர். இராஜலிங்கம்

— 7 —

**தாய்** கூறிய விஷயத்தைக் கேட்டு தேன்மொழி ஒரேயடியாக மகிழ்ந்து போய்விடவில்லை— மாறாகக் கவலைக்குள்ளானாள்—

தன்னைப் பூப்போல வைத்து வளர்த்து ஆளாக்கிய தாயை விட்டுப் பிரியு காலம் வந்து விட்டதே என்றுதான் அவள் கவலைப்பட்டாள்—

நற்குணம் கொண்ட ஒரு ஏழை தனக்குக் கணவனாக வாய்க்க வேண்டும் என்றுதான் அவள் இவ்வளவு காலமும கனவு கண்டு கொண்டிருந்தாள்— அதற்குக் காரணம் படாத கஷ்டமெல்லாம் பட்டு தன்னை வளர்த்த ஆளாக்கிய தாயை அவரின் அந்திய காலத்திலாவது தன்னுடன் வைத்து சந்தோசமாக வாழ வைக்க வேண்டும் என்னும ஆசையால்தான்—

பணக்கார சம்பந்தத்தால் அந்த ஆசை நிறைவேறாமல் போய்விடுமோ என்று அவள் மிகவும் கவலைப்பட்டாள்—

தாயின் வார்த்தைக்கு மறுப்புக் கூறியும் அவளுக்குப் பழக்கமில்லை—

தன் தாய் மிகுந்த சந்தோசத்துடன் கொண்டு வந்திருக்கும இந்த சம்பந்தத்தை தான் உதறித் தள்ளிவிட்டால் அந்தத் தாயின் மனம் எவ்வளவு வேதனைப்படும் என்றும் அவள் கவலைப்பட்டாள்—

தாய்க்கு என்ன மறுமொழி சொல்வது என்று புரியாமல் அவள் தவித்துக் கொண்டிருந்தாள்—

அவளின் நிலை பார்வதிக்கு

தக்கு மேல பெரிய இடத்துல போய் சம்பந்தம வைச்சா அதனால ஏதும கஷ்டங்கள் ஏற்படுமோன்னு தான் யோசனையா இருக்கு"

வேண்டாம்— உனக்குப் பிடிச்சிருக்கான்னு மட்டும் சொல் அம்மா!"

"பிடிக்கிறதுக்கு என்ன மா இருக்கு— எனக்கு நல்லததானே

"அதுவா? அது ஒரு நன்றிக் கடன் அம்மா!"

"என்னம்மா சொல்றீங்க நன்றிக்கடனா? அப்படீன்னா?"

"எல்லாம உன்னோட நல்ல குணத்துக்குக் கிடைச்ச நன்றிக்

"ஏதோ நன்றிக்கடனா ! உன்னோட தோழி உனக்குச் செலுத்துறதா சொன்னா— நான் என்னத்தக் கண்டேன்"

"தோழியா? யாரும்மா அது?"

"பிரேமினி! உன்னோட ஒன்னா படிச்சவளா !"

பார்வதி இப்படிச் சொன்னதும் தேன்மொழி மிகுந்த அதிர்ச்சிக்குள்ளானாள்— பிரேமினி எனக்கு நன்றிக்கடன் செலுத்சகிறாளா? அப்படியானால்...! அவளுடைய மனம் பல்வேறு சிந்தனைக்குள்ளானது—

"அம்மா! ஒரு மாதிரியா இருக்கே— பிரேமினி உன் தோழி தானே?" பார்வதிதான் கேட்டாள்—

"ஆமா! தோழிதான்— ஆனா...?"

"ஆனா என்ன மா?"

அவ ஒரு காலத்தில எனக்கு நெருங்கிய தோழியாத்தான்

## இதயத்தைக் கிளறாதீர்!

— சிரண்டிதாசன் —

முட்டி வனத் தேன்மலரில்
முகர வந்த வண்டெனவே!
வட்ட எழில்க் கரு நயனம
வட்டமிட ஆலயத்தில்
கட்டு இளம காளையிவன்
கண்டு உனை மனம நெகிழ
தட்டியொரு மாரனெழத்
தான் வந்த நோக்கமென்ன?

★

எட்ட நான் நிற்கையிலே!
எந்தனையே நீ பார்த்து
திட்டமுடன் உன்னுடைய
சினேகிதிகள் புடைசூழ
மட்டமெனைத் தட்டவோ
மதியழகே நகை செய்தாய்
கிட்டாத இடம வளரும
கிளியணைக்க நான் முயலேன்

★

கோயிலுக்கு வருவதெல்லாம
கும்பிடவா? நீயில்லை
வாயடித்து அங்கு பல
வம்புகளைப் புரிந்திடவா?
தாயினத்தின் பெருமைகளை
தரணியிலே தூக்காமல்
காயத்தைப் புண்ணாக்கும
கவர்ச்சிகளை ஏற்காதீர்!



லது செய்ய மாட்டாளோன்னு நினைக்கிறியாம்மா? அவளுக்கு நீ செய்த ஏதோ ஒரு நல்ல காரியத்துக்காகத்தான் நன்றிக் கடன் செலுத்த விரும்பறாளாம்— பிரச்சினையை மறந்திருக்கலா இல்லையா அம்மா!"

"இருக்கலாமதான்— ஆனா அவ அப்படி மறக்கக் கூடியது இல்ல— அதுதான் யோசிக்கிறேன்"

"போம்மா! நீ ஒரு வைத்தியக்கார பள்ள— பாடசாலையில நடக்கிற பிரச்சினையை எல்லாம நினைச்சிக்கிட்டு இருப்பாங்களா? உம்... சரி... சரி... உனக்கு விருப்பமில்லாட்டி விட்டுப் போடலாம்— அவ ஏதோ கெடுதி செய்றான்னு நினைச்சி பயப்படுற போல—"

"இல்ல மா நான் அப்படி பயப்படல்ல— என்ன எனக்கு யாராலயும் கெடுதி செய்ய ஏலாது— கடவுள் அப்படியொரு கஷ்டத்த எனக்குத் தரமாட்டார் என்று நான் நினைக்கிறேன்" இப்படி தேன்மொழி கூறினாள்—

தித்தபோது ஏன் என்னுடன் சரியாக முகம் கொடுத்துப் பேசவில்லை? ஏதோ கடமைக்காக இரண்டு வார்த்தைகள்தான் பேசினாள்—

பழைய சம்பவத்தை மறந்துவிட்டு நான்தான் அவளுடன் சிரித்துப் பேசினேன்— ஆனால் அவள் என்னை அலட்சியம செய்வது போல் இருந்ததால் தான் நானும் பேச்சைக் "கட்" பண்ணிக் கொண்டேன்—

ஆனால் இப்போது எனக்கு நன்றிக்கடன் செலுத்தப் போவதாக அம்மாவிடம சொல்லியிருக்கிறாள்— இது எப்படி

தொடர் கதை


தாள்—

அவளின் நிலை பார்வதிக்கு மிகுந்த சங்கடத்தை ஏற்படுத்தி விட்டது—

அவள் கேட்டாள்—

"ஏம்மா! தேன்மொழி என்ன அப்படி யோசிக்கிற? உனக்கு இந்த சம்பந்தம் பிடிக்கலையா? பிடிக்காட்டி சொல்லி விடு அம்மா! விட்டுப் போட்டுடுவோம்!"

"இல்லம்மா— நான் அப்படிச் சொல்லல்ல" நம்ம அந்தஸ்



"அந்தஸ்து என்னம்மா அந்தஸ்து— உன்னோட அழகுக்கும் குணத்துக்கும் முன்னால அவங்க அந்தஸ்து எம்மாத்திரம்— நீ அதுக்கெல்லாம் கவலைப்பட

நீங்க செய்வீங்க— அது சரிம்மா இந்த சம்பந்தம் உங்களுக்கு எப்படி கிடைச்சிச்சுதுன்னு சொல்வீங்களா?"

கடன்தானம்மா!"

"என்னோட நல்ல குணத்துக்கா? என்னம்மா சொல்றீங்க எனக்கு ஒன்றும் விளங்கலையே?"

இருந்தா! ஆனா அதுக்குப் பிறகு ஏற்பட்ட ஒரு பிரச்சினையில் அவளும் நானும் பிரிஞ்சிட்டோம்!"

அதுக்காக அவ உனக்கு நல்

படி தேன்மொழி கூறினாள்—

உண்மையில் பிரேமினி தனக்கு நன்மைதான் செய்கிறாளா என்ற தேன்மொழிக்குச் சந்தேகமாகவே இருந்தது—

அம்மா சொன்னதுபோல் பள்ளியில் நடந்த பிரச்சினையை மறந்திருப்பாளோ? ஆனால் அவள் அப்படி மறக்கக் கூடியவள் அல்லவே—

அப்படி சிலவேளை மறந்திருந்தால்.... நீண்ட காலத்துக்குப் பின்பு அன்று என்னைச் சந்

நம்புவது?

ம்... இனியும் நான் பேசாமல் இருந்தால் வெள்ளம் தலைக்கு மேல் போய்விடும் — ப

எதற்கும் ஒரு தரம் போய் அவளைச் சந்தித்துவிட்டு வந்தால் நல்லது—

இப்படி தீர்மானித்துக் கொண்டாள் தேன்மொழி—

(தொடரும்)

# ஓயாத பரீட்சை

— அ. சௌரிதாசன் —

உயர்தரப் பரீட்சை காண
 உவகையாய் சென்ற காலை
வியந்திடு(ம்) வகையில் அங்கோர்
 வேல்விழி யாளைக் கண்டேன்!
செயமெலாம் அவளா லன்றோ?
 செய்கைகள் களிப்பை யூட்டும்!
அயர்விணை விரட்டி யோட்டும்
 அழகியாள் கவர்ச்சிப் பேச்சு!

★

பக்கலில் அமர்ந்த அந்தப்
 பாவையின் பருவம் பூத்த
மொக்குகள் இரண்டும் என்னை
 மோகத்தில் ஆழ்த்தி வைக்க
சொக்கினேன் அவளின் தேகச்
 சுகம்பெற நினைக்க லானேன்
தக்கவள் தன்னை என்பால்
 தந்திட விரும்பு வாளா?

★

பரீட்சையே எழுத வந்த
 பாவையை மனைவி யாக்கி
பரீட்சையே செய்ய எந்தன்
 பாழ்மனம் நினைத்த தன்மை
ஆதலால் ஆசை தன்னை
 அஞ்சலில் தீட்டி வைத்துக்
காதலாய் கொடுக்க வென்றே
 கடைசியில் முடிவெ டுத்தேன்!

★

இறுதிநாள் பரீட்சை வேளை
 இதயத்தில் நிலைத்த மாதை
நெருங்கினேன் அஞ்சல் ஒன்றை
 நீட்டினேன் ஏற்றாள் மங்கை
மறுமொழி வாயால் தந்தாள்
 "மன்னிக்க வேண்டும் என்னை
ஒருத்தரை விரும்பி யுள்ள
 ஒருத்தியான்" என்றாள் சென்றாள்!

# பலன் கூறும் பல்லிகளுக்கு நல்லகாலம் இல்லையா?

## அவற்றையே ருசித்து விழுங்குகிறார் ஒருவர்

பல்லி எச்சம் பட்டால் உடம்பில் பற்று வரும் என்பதும் பல்லி விழுந்த உணவு விஷமாகி விடுமென்பதும் வீணான கற்பனை என்கிறார் ரிக்‌ஷா தொழிலாளி குப்பன்!

இவர் பல்லி சாப்பிட ஆரம்பித்த கதையும் ருசிகரமானது தான்!

ஒருநாள் தாம்பரத்தில் நண்பர்களுடன் டீ குடித்துக் கொண்டிருந்தார்— அப்போது சத்துணவுக்கூடத்தில் பல்லி விழுந்த உணவை சாப்பிட்ட ஐம்பது குழந்தைகளுக்கு வாந்தி மயக்கம் என்ற செய்தி பேச்சில் அடிபட்டது—

உடனே குப்பனுக்கு ஒரு ஆசை— நாமும் பல்லியை சாப்பிட்டுப் பார்த்தால் என்ன? உடனே ஒரு பல்லியை பிடிக்க முயற்சி செய்ய வால் மட்டுமே கையில் சிக்கியது— உடனே லபக்கென்று அதை வாயில் போட்டு ருசி பார்த்தார்— ஏதோ உப்புக் கரிப்பது போல் இருந்தவுடன் பல்லி வாலை வாயிலிருந்து எடுத்து ரொட்டி வாங்கி அதனுடன் சேர்த்து விழுங்கி விட்டார்—

இந்தச் சாதனை வேகம் நாளுக்கு நாள் வளர்ந்தது— பல்லியை பார்க்கும் போதெல்லாம் அதைப் பிடித்துச் சாப்பிட வேண்டுமென்ற வெறி வந்தது— வால் கால் தலை உடல் என பகுதி பகுதியாக பிய்த்து ரத்தம் சொட்ட சொட்ட சாப்பிட ஆரம்பித்தார்— பின்னர் 1980ஆம் ஆண்டு நண்பர்கள் முன்னிலையில் முதன் முதலாக முழு பல்லியை உயிருடன் சாப்பிட்டார்—

இந்த பல்லி தின்னும் ஆசை தற்போது மேலும் வளர்ந்து பூரான் கரப்பான் பூச்சி என வளர்ந்து கொண்டே போகிறது— விரைவில் பாம்பையும் சாப்பிட இருக்கிறார் இவர்!

"கடந்த எட்டு ஆண்டாக பல்லி சாப்பிட்டு வருகிறேன்— என்னுடைய உடலில் எந்தவித பாதிப்பும் இதனால் ஏற்படவில்லை— ஆரம்பத்தில் சாதனைக்காக சாப்பிட்ட நான் இன்று பல்லி மாமிசம் ருசிக்கவே சாப்பிடுகிறேன்—

பல்லி சாப்பிடுவதை என் வீட்டில் யாரும் கண்டிப்பதில்லை மாறாக ஊக்கப்படுத்துகிறார்கள்—

பல்லி சாப்பிட்டு எனக்கு எந்த எதிர் விளைவும் ஏற்படாததால் ஒருநாள் பூரான் ஒன்றைப் பிடித்துச் சாப்பிட்டேன்— அதுவும் ஒன்றும் செய்யவில்லை— பொதுவாக பூரான் விஷத் தன்மை வாய்ந்தது என்பார்கள்— பிறகு கரப்பான் பூச்சியைப் பிடித்துச் சாப்பிட்டேன்— இதுவரை எத்தனை பல்லி சாப்பிட்டேன் என்ற கணக்குத் தெரியவில்லை—

"சிறுவயதிலிருந்தே மாமிசத்தை பச்சையாக சாப்பிடப் பிடிக்கும், ஆடு, மாடு, கோழி, பன்றி போன்ற மிருகங்களின் இறைச்சிகளை வேக வைக்காமல் பச்சையாகவே சாப்பிடுவேன்." என்றார் குப்பன்.

குப்பனுடைய செய்கை அதிசயத்தை தந்த அதே சமயத்தில், விஞ்ஞான பூர்வமாக இதை ஆராய வேண்டிய ஆர்வமும் எழுந்தது:

—

தாம்பரத்தில் உள்ள இந்த மிஷன் ஆஸ்பத்திரிக்கு குப்பனை அழைத்துச் சென்று குப்பன் உடலை பரிசோதித்த போது, பல திடுக்கிடும் உண்மைகளைக் கூறினார்.

"பல்லியில் விஷமே இல்லை. பல்லியின் உருவம் அருவெருப்பாக உள்ளதால் பலரும் பல்லியை வெறுக்கின்றனர். பல்லி, விஷத் தன்மை இல்லாதது என் குப்பன் ஆதாரபூர்வமாக நமக்கு காட்டுகிறார், உணவில் பல்லி விழுந்ததால் வாந்தி மயக்கம் ஏற்படுகிறது என்பதெல்லாம் வெறும் வதந்தி, பல்லி, விஷம் என்ற உணர்வே பலருக்கு மயக்கத்தையும் அலர்ஜியையும் உருவாக்கி விடுகிறது.

"அதே போல பூரானில் குண்டூசி முனை அளவுதான் விஷம் உள்ளது. இதனால் மனிதனுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. சோதனை செய்தவரையில் குப்பனின் உடலில் விசேஷமாக எந்த விஷமுறிவும், ரத்த அணுக்களும் இல்லை.

"குப்பனும் நம்மைப் போல ஒரு சாதாரண மனிதராகத் தான் இருக்கிறார், ஆனால் ஒரு மனோதத்துவ நிபுணரைப் பார்த்து குப்பன் ஆலோசனை பெறுவது நல்லது.

"பச்சை மாமிசம் சாப்பிடுவது நல்லது அல்ல! பச்சை மாமிசத்தில் கிருமிகள் இருக்க வாய்ப்பு உள்ளது. எனவே நோய் பரவும் அபாயமும் உள்ளது. இதைத் தவிர்க்கத் தான் மாமிசத்தை சமைத்து சாப்பிடுகிறோம். பல்லி விஷயத்தில் மூட நம்பிக்கையை தவிர்த்து அதுவும் ஒரு சாதாரண பிராணி என்பதை அனைவரும் உணர வேண்டும்." என்றார் டாக்டர் நாராயண மூர்த்தி,

(ம—10)

# மனையும் மங்கையும்

# பெண்களின் ஆரோக்கியமான வாழ்வுக்கு யோகாசனம்

## நிலையான அழகினை தரும்

### என்கிறார்கள் உடற்கூறு நிபுணர்கள்



ஆகார விஷயங்களில் உப்பு புளிப்பு காரம் இவைகளை மிதமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

யோகாசனம் செய்வதால் பெண்கள் பல நன்மைகளை அடையலாம்.

அளவான அழகான மார்பகம் குறைந்த இடை நளின நடை ஒளிமிக்க கண்கள் குறைந்த சதைப் பிடிப்பு என்றும் இளமையாக உடலில் நல்ல மணம் பெறலாம்.

பெண்கள் யோகாசனம் பழகுவது நன்மையாகும்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் நோயற்ற வாழ்வு வாழ பெரும்பான்மையான பெண்கள் முயற்சி எடுப்பதில்லை.

மேலை நாடுகளில் பெண்கள் ஆரோக்கியமாக அழகாகத் திடமாக வாழ யோகாசனத்தை பெரிதும் விரும்புகிறார்கள். அதைப் பயிலுகிறார்கள். சிலர் கீழைத்தேசங்களுக்கு வந்தும் பயில்கிறார்கள்.

சமுதாயத்தில் பெண்களின் பொறுப்பு மிக முக்கியமானது. அநேகமான பெண்கள் விஞ்ஞானிகளாகவும் ஆசிரியர்களாகவும் பொறியியலாளர்களாகவும் கடமைபுரிந்து வருகிறார்கள்.

சிலர் பொலீஸ் அதிகாரிகளாகவும் கடமையாற்றி வருகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளில் விண்வெளிக்கு அனுப்பப்பட்

குழந்தைகளை கவனிப்பது கணவருக்கு பணிவிடை செய்வது போன்ற பல்வேறு பணிகளை பெண்கள் கவனிக்க வேண்டியுள்ளது.

இவ்வளவு பொறுப்பையும் ஏற்றுள்ள பெண்கள் ஆரோக்கியமாக நோயின்றி வாழ்வது முக்கியம் அல்லவா?

இதற்கு யோகாசனம் பெண்களுக்கு பெரிதும் உதவும்.

பெண்களாக பிறந்த ஒவ்வொருவரும் தாம் பேரழகிகளாக வாழ வேண்டும் என்று நினைக்கிறார்கள். பிறர் ஏறெடுத்துப் பார்க்கும் நிறைந்த பொலிவும் அழகும் பெற வேண்டும் என்றும் நினைப்பதுவும் உண்டு.

ஆண்களை விட பெண்கள் வயதாகி விட்டாலும் உடலைப் பற்றி அதிக அக்கறை காட்டுகிறார்கள்.

ஆரோக்கியத்தையும் நிலையான அழகையும் அடைய யோகாசன வழிமுறை அவசியமானது.

இதனை வெகு சில பெண்களே அறிந்திருக்கிறார்கள்.

பனை செய்கின்றார்கள்.

உடல் உள்ளுறுப்புகள் திடமாயிருந்தால்தான் ஆரோக்கியமாக வாழ முடியும். இதனை தினமும் ஒரு சில நிமிடங்கள் சில யோகாசனங்களை செய்வதால் பெற முடியும்.

பெண்களுக்குக் கவர்ச்சி என்பது ஒப்பனைகளால் பெறுவதாகும். இந்தக் கவர்ச்சி தற்காலிகமானது. விரைவில் மறைந்துவிடும்.

பெண்களுக்கு கவர்ச்சியை விட அழகு என்பது உடலில் தோன்ற வேண்டும். இது நிலையானது.

வயதானாலும் பெண்கள் கவர்ச்சி மட்டுமின்றி அழகுடன் இருக்கச் செய்வது யோகாசனம் ஒன்றுதான்!

இப்பொழுது உயர்தர நடுத்தர வகுப்புப் பெண்கள் சாதாரணமாக உழைப்பே இல்லாத நிலையில் வாழ்கிறார்கள். பெண்கள் சாதாரணமாக அரிசி அரைத்தல் மாவாட்டல் போன்ற காரியங்களுக்குக் கூட இயந்திரங்களை பாவிக்

தடுப்பது நல்லதல்லவா? நோய் வராமல் ஆரோக்கியமாக வாழ முன்காப்போனாக யோகாசனங்கள் இருக்கின்றன.

உடலில் உள்ள உறுப்புக்கள் சரியாக இயங்கினால் பிட்யூட்டரி தைராய்ட் தைமஸ் நுரையீரல் இதயம் குடல்கள் இவைகளை நன்கு இயங்க வைக்கும்.

இவைகளை ஒழுங்காக யோகாசனம் ஒன்றுக்குத்தான் இயங்க வைக்க முடியும்.

சக்தி யோகாசனம் மஸ்திகாசனம் புரிவதாசனம் பாத ஆசனம் பரியங்காசனம் ஆகிய ஆசனங்கள் பெண்களுக்கு உரிய ஆசனங்கள்.

ஆஸ்துமா ரத்த அழுத்தம் மாதவிடாய் சம்பந்தப்பட்ட நோய்கள் இவைகளைக் குணப்படுத்த யோகாசனம் உதவி புரியும்.

தினமும் ஒரு சில நிமிடங்கள் யோகாசனங்களுடன் தீர்க்கமான மூச்சுப் பயிற்சியும் செய்வதால் பல நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.

யோகாசனம் எந்த வயதிலும் செய்யலாம். அதிகாலையில் காலைக் கடன்களை முடித்து விட்டு குளித்தபின் சாப்பாட்டுக்கு முன் 10 நிமிடங்கள் செய்தால் போதுமானது.

காற்றோட்டமான இடமாக இருக்க வேண்டும். மாதவிடாய் காலங்களிலும் கர்ப்பமுற்றிருக்கும் காலங்களிலும் செய்யக் கூடாது.

[ம—455]

# இரண்டாவது குழந்தை பிறக்கப் போகிறதா?

ஐரோப்பிய நாடுகளில் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட முதல் பெண்மணி யோகாசனம் பயின்றவர்—

பெண்கள்தான் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் பெரும் பொறுப்பை ஏற்றுள்ளார்கள்—வீட்டில் உணவு சமைப்பது முதல்

இதனை வெகு சில பெண்களே அறிந்திருக்கிறார்கள்—

பெண்கள் பெரும்பாலும் ஆடம்பரமான வாழ்க்கையையே விரும்புகின்றார்கள்—ஆடம்பரமான அலங்கார செயற்கை பொருட்களினால் அலங்கார சின்னங்களாக ஒப்

போன்ற காரியங்களுக்குக் கூட இயந்திரங்களை பாவிக்கிறார்கள்—

இதனால் பெண்கள் பெரும்பான்மையாக நோய்வாய்ப்படுகிறார்கள்—

நோய் வந்த பின் கவனிப்பதைவிட நோய் வராமலேயே

# ஆண்மைத் தோற்றம் பெண்மைக் குணம்

பெண் வேடமிட்ட ஆண், பெண் தாய்மையுடன் கூடிய அலிகள் நிறையப் பேர் உண்டு. ஆனால் வெளியே ஆண் தோற்றத்துடனும், உள்ளே பெண்மையின் குணங்களுடனும், லட்சத்தில் ஓரிருவர் தான் இருப்பார்கள்.

அப்படிப்பட்ட ஒருவரான பெண்ணரசி என்பவர் மதுரை மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள கள்ளிப்பட்டியில் இருக்கிறார், இவருக்கு தற்போது 39 வயது. இந்தப் பெண்ணரசி, தன்னுடைய அண்ணிகள் கொடுமை தாளாமல் 11 வயதில் வீட்டை விட்டு வெளியே வந்து விட்டார்.

தெருவில் தாரை தம்பட்டம் முழக்கி கூத்தாடும் ஆட்களிடம் புகலிடம் பெற்றார்.

மழை வெய்யிலுக்குக் கூட பள்ளிக் கூடத்தின் பக்கம் ஒதுங்காத பெண்ணரசிக்கு கேள்வி ஞானம் அதிகம்!

எதையும் கேட்ட மாத்திரத்தில மனதில் பதிய வைத்துக் கொள்ளும் இவருக்கு கிராமிய பாடல்கள் பலவும் அத்துப்படி!

பாடலும், ஆட்டமும் போட்டு ... யையே ஏழு நாள் சொல்லக் கூடிய திறமை உண்டு. இது போல கிராமியக் கதைகளை கைவசம் நிறையவே வைத்துள்ளார்.

பருவம் அடைந்து இளமை பூரித்து பொங்கிய நாட்களில் ராஜு என்பவருடன் குடும்பம் நடத்தி ஒரு பெண் குழந்தையையும் பெற்று பின் குழந்தையை நோய்க்கு பறிகொடுத்து விட்டார்.

ஏழு ஆண்டு காலம் குடும்பம் நடத்திய இவருக்கு, திடீரென முகத்தில் வளர்ந்த தாடி, மீசை, கருதா வாழ்க்கையில் சோதனைப் படலத்தை துவக்கின.

இப்படியே கொஞ்சம், கொஞ்சமாக வெளியே ஆண் தோற்றம் வரவே கணவர் உட்பட அனைவரும் பெண்ணரசியுடன் உள்ள தொடர்பை துண்டித்துக் கொண்டனர்.

அன்று முதல் இன்று வரை அநாதையாக, ஊர் ஊராகச் சுற்றி, சோறு கண்ட இடத்தில் சாப்பிட்டும். திண்ணை கண்ட இடத்தில் தூங்கியும் காலத்தைக் கழித்து வருகிறார்.

இரவு நேரங்களில் தாரை, தப்பட்டை செட்டுகளுடன் கூப்பிட்ட இடத்திற்குச் சென்று ஆடல் பாடலுடன் கூடிய கூத்து நடத்துகிறார், பகலில் கூலிக்கு மாரடிப்பார், களை எடுப்பார். குறி சொல்வார், இப்படி இரவு பகலாக உழைத்தாலும், வரும் வருமானத்தில் கூழ் மட்டுமே வயிறாற குடிக்க முடிகிறதாம்!

தனக்கு இன்னும் பெண்மையின் உணர்வுகள் பொங்குவதாகவும், எல்லாப் பெண்களைப் போலவே மாதாந்திர தொந்தரவுகள் உட்பட அனைத்தும் உண்டு என்கிறார், பெண்ணரசி, இதனாலேயே இவர் அலிகளுடன் சேரப் பிடிக்காமல் தனித்தே இருக்கிறார்.

தினமும் தவறாமல் ஷேவ் செய்து கொள்கிறார், காலில் செருப்பு அணிவது கிடையாது, மாடு, குதிரை பூட்டிய வண்டிகளில் ஏறுவது கிடையாது, கேட்டால் "ஏற்கனவே செய்த பாவம் தான் இந்த பாடுபடுகிறேன். இதில் இந்தப் பாவத்தை வேறு சுமக்க வேண்டுமா?" எனக் கேட்டு கண்கலங்கினார்.

(ம-10)

# முதல் பிள்ளையுடன் நன்கு நடந்துகொள்ளுங்கள்

குழந்தைகளை சமாளிப்பது தற்போதைய தனி கில்லாடித்தனம் வேண்டும், அது அம்மணிகளுக்கு கை வந்த கலைதான் என்றாலும் முதல் குழந்தைக்கு அவர்கள் கொடுக்கும் பராமரிப்பு டானிக் எந்த அளவுக்கு உள்ளது என்பதை இரண்டாவது பிறந்தவுடன் தான் தெரியும்,

இரண்டுக்கும் இடையே போதிய இடைவெளி இல்லை என்றால் தம்பதிகள் பாடு சொல்லவே தேவை இல்லை.

இரண்டாவது குழந்தை பிறந்தவுடன் அதன் பேரில் கூடுதல் கவனம் செலுத்துவது எல்லா தம்பதிகளுக்கும் இயற்கையானது தான்.

இருந்தாலும் இரண்டாவது பிறந்தவுடன் முதல் குழந்தை மனதில் ஒருவித அச்சம் ஏற்படுகிறது, பொதுவாக இதை நாம உடனடியாகக் கண்டு பிடிக்க முடியாது,

இதுவரை தன்னிடம் அன்பாக இருந்த பெற்றோர், இன்னொரு குழந்தையிடம் அன்பு செலுத்துகின்றனர், என்று ஒரு குழந்தை உணரும்போது, காரணமில்லாத வெறுப்பு அக்குழந்தையிடம் ஏற்படுகிறது.

தன்னிடம் பெற்றோருக்கு அன்பு குறைய புதிய குழந்தை தானே காரணம் என்று அந்தப் பிஞ்சு மனம் நினைக்கிறது, பெற்றோரைக் கண்டு ஆத்திரப் படுகிறது, குழந்தையை வெறுக்கிறது,

இதன் காரணமாக அடம் பிடிக்கும் போக்கு, முதல் குழந்தையிடம் அதிகமாகிறது, சரியாகச் சாப்பிடாது,

அழுகையை சமாளிக்க படாதபாடு பட வேண்டும். முதல் இரண்டாவது குழந்தைகளே சமாளித்து செல்வது தான் பெற்றோரின் கஷ்டமான பொறுப்பு,

நமது சமூக கட்டமைப்பில் பெண் குழந்தையை விட ஆண் குழந்தை பெறுவதைத்தான் பெரும்பாலோர் விரும்புகின்றனர்.

மனைவிக்கு இரண்டாவதும் பெண் என்று தெரிந்தவுடன் முகம் சுளித்து அதன் மீதான அக்கறையை குறைத்துக் கொள்ளும் கணவன்மார்கள் இருக்கத்தான் செய்கின்றனர்,

ஆண் குழந்தை மீது அதிக பாசத்தை கண்மண் தெரியாமல் காட்டி அதன் வளர்ச்சியையும் இவர்கள் கெடுத்து விடுகின்றனர்.

பெண் குழந்தையைக் கவனிக்காமல் புறக்கணித்து அதன் முன்னேற்றத்தையும் தடுத்து விடுகின்றனர்.

பெண் ஆண் இருவருமே சமம் என்ற இந்தக் காலத்தில் பெண் குழந்தையை வெறுக்கும் கணவன்மார்களைத் திருத்த நிச்சயமாக ஒரு வழி வேண்டும்,

இரண்டாவது குழந்தை சில நாட்களுக்கு அவ்வப்போது விருந்தினர் வருவார்கள், குழந்தையை கொஞ்சுவார்கள், பரிசு தருவார்கள்.

அந்தச் சமயத்தில் முதல் குழந்தையைத் தட்டிக் கொடுத்து சமமான அன்பைப் பொழிந்து அதன் மனம் மாறாமல் நடந்து கொள்ள வேண்டியது பெற்றோரின் முக்கிய கடமை.

இதில் யாரும் அலட்சியமாக இருந்து விடக் கூடாது.

இதோ மேலும் சில யோசனைகள்;

1 இரண்டாவது குழந்தை பிறக்கப் போவதை முதல் குழந்தை அறிந்திருக்க வேண்டும். அதன் சில மாதம் முன்பாகவே "உனக்குத் தம்பி (அல்லது தங்கை) பாப்பா பிறக்கப் போகிறான்" என்று சொல்லி வைக்க வேண்டும். குழந்தை பிறக்கப் போவதை எக்காரணம் கொண்டும் சஸ்பென்சாக வைக்கக் கூடாது,

2 இதை அடிக்கடி சொல்லி நினைவில் ஏற்ற வேண்டும்; "பாப்பாவை நீதான் கவனிச்சுக்கணும், அம்மாவுக்கு அதிக வேலை இருக்கும் இல்லையா? அதனால் பாப்பாவை நீ பாத்துக்கணும்," என்பது போல அம்மணிகள் தங்கள் முதல் குழந்தையிடம் அன்பாக சொல்லி வைக்க வேண்டும். இதனால் குழந்தைக்கு ஒரு ஈடுபாடு ஏற்படும்.

3 இரண்டாவது குழந்தை பிறந்தவுடன் உலகத்தை மறந்தவர்களாக சிலர் கொஞ்சி பாசத்தைப் பொழிவார்கள், அதுவும் பிள்ளையாய் இருந்து விட்டால் அவ்வளவு தான். இந்தப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்.

முதல் குழந்தையையும் அருகில் வைத்துக் கொண்டு சமமாக அன்பைப் பொழிய வேண்டும். என்ன பெயர் வைக்கலாம் என்பதில் இருந்து பலவிதத்திலும் கேள்வி கேட்டு அதற்கு ஒரு ஈடுபாட்டை வளர்க்க வேண்டும்.

4 அம்மா செல்லமாக வளர்ந்து விட்ட குழந்தையாக இருந்து விட்டால கஷ்டம்தான், ஆனால் முதல் குழந்தை மீது அதிக அன்பைக் காட்டி மனதை மாற்றலாம். கணவன்மார்களை மனைவிமார்கள் சொல்ல வேண்டும். அப்பாவுடன் மார்க்கெட், கடைவீதி என்று வெளியில் அனுப்பலாம்.

5 முதல் குழந்தை பிடிவாதமாக இருக்கிறது என்று பதட்டம் அடையக் கூடாது, அன்பை காட்டினால் தானாக வழிக்கு வரும், தம்பதிமார்களுக்கு பொறுமைதான் வேண்டும்.



பாரில் சிறந்த பரிசுகளை
எதிர்
பார்த்துக் களித்திடும்
வேளையிலே
பூவில் சிறந்த மலர்களைக்
கொண்டிங்கு
பூக்கட்டி ஆடும் சிறுமியிவள்
நேரில் மலர்களைப் பார்த்து
மகிழ்ந்தும்
நித்திலப் புன்னகை பூத்து
நின்றாள்.

— ஷிமாளா முஸ்தால்


இந்த வழிகளைப் பின்பற்றி வாருங்கள், எந்தக் குழந்தையும் சமர்த்தாக வளரும், உங்களுக்கு தொந்தரவைத் தராது, ஆத்திரம் யாரையும் திருத்தாது, அன்பைக் காட்டி எதையும் வெல்ல முடியும்,

அம்மணிகளே! உங்கள் எண்ணப்படி குழந்தை வளர வேண்டுமானால், உங்கள் குறிக்கோள் நிறைவேற வேண்டுமானால் பொறுமையும். அன்பும் தான் ஆயுதம்.

(த-10)



# தாயும் சேயும்



# உண்மையான நேசத்தை விரும்பும் குழந்தைகள்

## பெற்றோர் அதற்கு வழிகாட்ட வேண்டும்

குழந்தைகள் தமது இளவயதில் பிறர் மீது தீய எண்ணங்களையோ, நோக்கங்களையோ கொண்டிருக்க மாட்டாது. எதிலுமே அன்பையும், பாசத்தையுமே எதிர்பார்க்கின்றன.

பிள்ளைப் பராயத்திலிருந்தே பிறரது அரவணைப்பை நாடுகிறது. அந்த அரவணைப்பில் சுகமடைகின்றது. பிறரது நட்பை உண்மையான நேசத்தை விரும்புகிறது.

இந்நேசத்துக்குக் குறுக்கே பெற்றோர் தடையாக இயங்கக் கூடாது. தமது கடமை அதுவாகவிருந்தாலும் அலுப்போ, சலிப்போ காட்டாமல் பிள்ளையினை மகிழ்விப்பது பெற்றாரது பணியாகும். ஆனால், எமமுள் பலர் அதனை உணர்வதுமில்லை. நினைப்பதுமில்லை.

சிறார்கள் எத்தகைய பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள்? அதனை எவ்வாறு தாக்கலாம்? எந்த ரீதியில் உற்சாகப்படுத்தலாமென்று சிந்திக்க வேண்டும்.

பெரியவர்கள் வீட்டில் குழந்தைகள் முன் தம்முடைய கோப தாபங்களை மறந்து செயலாற்றல் வேண்டும்.

அவர்களின் முன்பு அன்புடனும், பண்புடனும், மரியாதையுடனும் நடத்தல் அவசியம். அதேபோல வெளியார் மத்தியிலும் பெற்றார்கள் இவ்வாறு நடக்கும் போது பிள்ளைகளும் சுயமாகவே நல்ல, உயரிய பண்புகளை பழகிக் கொள்ள வழிவகுக்கிறதல்லவா?

குழந்தை மகிழ்ச்சியுடன், கலகலப்பாக இருந்தால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்.

பெற்றாருக்கும், உற்றாருக்கும் தொல்லை இராது. தமது கடமைகளைச் செவ்வனே மேற்கொள்ள உறுதுணையாயிருக்கு

கருமத்தை சரியாகச் செய்ய முயற்சிப்பதோடு அதனது மனமும் மகிழ்ச்சி கலந்ததாக, கலக்கம், சலனமற்ற மனதுடன் செயல்படுமல்லவா?

மகிழ்ச்சியே மனநிறைவுடன் குழந்தையினை ஊக்குவிக்கும் ஒரு சாதனமாகும்.

மகிழ்ச்சியுடனிருக்கும் குழந்தை துருதுருப்புடனும், கலகலப்பான முகத்துடன் இங்குமங்கும் ஓடி குறும்புகள் செய்யும் போது, கவலையில் ஆழ்ந்திருக்கும் பெற்றாராகிய எம்மைக் கூட குதூகலத்தின் உச்சிக்கே கொண்டு செல்கின்றதென்றால், பிள்ளைச் செல்வத்தின் சிறப்புத் தான் என்னே?

அந்தளவிற்கு எம நோய் தீர்க்

— சாவி/பா செல்வம்

கும மருந்தாகவும் பிள்ளையின் செயற்பாடுகள் காணப்படுகின்றதனை எமமுள் அநேகர் மறந்து விடுகின்றோம.

ராகிய எமது மடத்தனம புலனாகும்.

எனவே பிள்ளைகளை அன்பான பண்பான், இனிய சொற்களால் வசப்படுத்தலே சிறந்தது. இதனால் பிள்ளையின் அறிவு மேம்பட வழிவகுக்கிறது.

அத்துடன் பிள்ளையின் மனதில் புத்துணர்வு எண்ணம உருவாகிறது.

குழந்தை தன் வளர்ச்சிக் கட்டத்தில் எமது பொருளாதாரத் தகுதிக்கேற்ப அதற்கு விளையாட்டுப் பொருட்களை வாங்கிக் கொடுத்துவிடல் வேண்டும். இத்துடன் எமது கடமை நின்றுவிடவில்லை.

அதனைக் கையாளுகின்ற விதம, புதுப்புது நுட்பமுறைகளையும சொல்லிக் கொடுத்தல் வேண்டும. இதனால் பெற்றா



அத்துடன் பிறர் துணையின்றி தனது கருமத்தை தாமே செய்ய முற்படும போது, பெற்றார் அதற்குக் கைகொடுத்து அதனது செயற்பாடுகளைத் தூண்டுவிக்க வேண்டும.

இவ்வாறு அதனது செயற்பாடுகள் கிரமமாக அமையுமபோது, எம்மைப் பார்த்தே அது தனக்குள்ள விதிமுறைகளை வகுத்துக் கொள்ளும. அந்த விதிமுறைகள் அயலவர்களின் செயல்களிலும அனுசரித்தே ஏற்படுமென்பது துணிவு.

எனவே, பெற்றார் கூட அதற்குரிய ஒழுங்கு விதிகளை மேற்கொள்ள பொறுமையுடனும, கண்ணியத்துடனும செயற்படல் அவசியம, அதேவேளை

குழந்தை தனது போக்கிலே செயற்படவும விட்டு விடல் வேண்டும.

குழந்தைகளை நாம அடிமைகளாகப் பாராமல், குடும்ப அங்கத்தவர்களாகப் பார்த்து செயலாற்றினால் குழந்தையின் மனம வலுப்பெறும, அத்துடன் கௌரவ மனப்பான்மையும குடிபுகும.

குழந்தையின் மனம பிஞ்சு மனம். அந்த மனதில் வேதனையோ சோதனையோ குடிபுகக் கூடாது. அவர்கள் தமது நலனை மேற்கொள்ள பெற்றோர் கண்ணும கருத்துமாக எதிர்காலச் செல்வங்களை வளர்த்தெடுப்பது அவசியம.

இறுதியாக பெற்றாரும, குழந்தையும இரு வேறுபட்ட சக்திகள், அது வயதடிப்படையில் தீர்மானஞ் செய்யப்பட்ட பொறுப்பு வாய்ந்த சக்தியாகும.

இந்த இரு வயது முரண்பட்ட சக்திகளுக்கிடையில் சமநிலை காண்பதில் தான் உண்மையான வெற்றி தங்கியுள்ளது.

அது பெற்றாராகிய எமது கரங்களிலேயே தங்கியுள்ளது என்பதனை நாம உணர்ந்து வருங்கால சந்ததியினரின் வாழ்விற்குத் தேவையான நற்கருத்துக்களையும, செயல்களையும மேற்கொள்ள முயற்சிப்போமாக!

(த—408)

## பூச்சி புழுக்களை விரட்டி அடிக்க...

தேளோ, பூரானோ வீட்டுக்குள் வந்துவிட்டால், "ஆய் ஊய்" என்ற கத்தி பயந்த தவிரும

எறும்புப்படை வெற்றிகரமாகப் பின்வாங்கிவிடும.

கும தொல்லை இராது, தமது கடமைகளைச் செவ்வனே மேற்கொள்ள உறுதுணையாயிருக்குமெனின் அது மிகையாகாது.

எனவே பிள்ளைகள் மத்தியில் பெற்றார் நடக்கும முறையே பிள்ளையினது உடல், உள வளர்ச்சியினைத் தீர்மானிக்கும்.

அது மாத்திரமன்றி எமது உண்மையான அன்பையும், நேசத்தையும, நற்பழக்கங்களையும கவர்ந்து அதன்படியே அது செயல்படவும் முற்படுவதனை பல குடும்பங்களில் காண்கிறோம.

பிள்ளைகள் பின்பற்ற வேண்டிய வழிமுறையை அவர்களுக்கேற்றவாறு பயிற்றுவித்தல் அவசியம,

இதனால், குழந்தையும தமது தனை எமமுள் அநேகர் மறந்துவிடுகின்றோம.

சிறார்கள் குழப்பம, தொந்தரவு செய்வது சகஜமே. இது அவர்கள் அறியாத வயதின் பரிபக்குவ நிலை தானே.

எனவே, அவர்கள் ஏதாவது இசகு பிசகான செயல்களை செய்யும போது பலவந்தத்தின் மூலமோ, பயமுறுத்தலின் மூலமோ அடிபணிய வைக்க முற்படக்கூடாது.


இவ்வாறான வழிமுறைகளை நாம நடைமுறையில் செயற்படுத்தும போது பிள்ளையின் மனம், பயம, விரக்தி, கவலை என்பவற்றின் பிறப்பிடமாக மாறி உடல், உள நிலை பாதிப்பினை எதிர்நோக்கும போது தான் பெற்றாரும சொல்லிக் கொடுத்தல் வேண்டும. இதனால் பெற்றாரும, குழந்தையுடன் பழகும வாய்ப்பு கிட்டுவது மட்டுமல்லாது, இருவரும குழந்தையாக பரிணமித்து விடுமபோது ஏற்படும பாசப்பிணைப்பினை எழுத்தில் வடிக்க முடியாது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில், இளம பாலகர் மத்தியில் புதுப் புது ஆவல்களும, துடிப்புக்களும, எதனையும துருவித்துருவி ஆராயும மனப்பான்மையும உருவகிக்கும.

இதனை நாம ஒரு தீய செயலெனவோ அல்லது தொந்தரவு நிலையெனவோ நினைத்து வெறுப்படையக் கூடாது.

மாறாக பிள்ளையின் நியாய பூர்வமான வினாவினை அன்பாக, பொறுமையாகக் கேட்டு விடை பகரல் அவசியம், இவ்வாறான தன்மையில் பிள்ளையின் சிந்தனைத் திறன் மேமபடும எதனையும பகுத்து, வகுத்து, நிதானமாக அறியும உளப்பாங்கு உருவாகும.

இந்த உள உணர்வின் உந்தலினால் தனது வேலைகள் யாதென அறியும மனோபல சக்தி உண்டாகும.



குள் வந்துவிட்டால், "ஆய் ஊய்" என்று கத்தி பயந்து கலவரமடைந்து ஊரைக் கூட்டாதீர்கள். அதன் முகத்தில் மண்ணெண்ணெயைக் கொட்டி விடுங்கள். அது அங்கும இங்கும ஓடமுடியாதவாறு அந்த இடத்திலேயே துடிக்கும, நீங்கள் உங்கள் இஷ்டப்படி தீர்த்துக் கட்டிவிடலாம.

★

தூங்கவும முடியாமல் உட்காரவும முடியாமல் கட்டிலிலும நாற்காலியிலும மூட்டைப்பூச்சிகள் உங்கள் இரத்தத்தை ருசி பார்க்கின்றனவா? விளாகிரி நன்றாக சூடாக்கி ஒவ்வொரு துவாரங்களிலும கொதிக்க கொதிக்க ஊற்றிவிடுங்கள். அவை பரலோகத்திற்கு "பாஸ் போர்ட்" எடுத்துவிடும.

★

சமையற் கட்டிலும, உணவு மேசை, அலுமாரி பக்கங்களிலும கூட்டம கூட்டமாக அணி வகுத்து வருகின்றனவா? உப்பைத் தூவிவிடுங்கள், அந்த பினவாங்கிவிடும.

★

அலுமாரியிலுள்ள நல்ல சேலை துணிமணியையும், புத்தகங்களையும வெள்ளிப்பூச்சிகள் சுவைத்துப் பதம பார்க்கின்றனவா? அவை உயிர்வாழ உங்கள் துணிமணியையும புத்தகங்களையும பலிகொடுப்பதா? கற்பூரத்தை தூளாக்கி இடையில் தூவி விடுங்கள். வெள்ளிப்பூச்சிகள் வரவும செய்யாது, வாயையும வைக்காது.

★

உங்களை வேலை செய்ய விடாமலும, சாப்பிடவிடாமலும உணவு மேசைகளிலும அடுக்களைப் பக்கமும ஈக்கள் மொய்யென்று வந்து சாகசங்கள் காட்டுகின்றனவா? கறிவேப்பிலையை அரைத்துப் பூசிவிடுங்கள், அந்த சாகசவீரர்கள் எல்லாம விளையாட்டைக்காட்ட வேறு பக்கம பறந்து விடுவார்கள். (த)

— ரா சந்திரன் —

# வாசிக்கும் பழக்கத்தை

# பிள்ளைகளுக்கு பயிற்றுங்கள்

மனித குலத்தின் இன்றைய நாகரீக வாழ்வின் வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணம் அறிவு தான்-

அறிவின் வளர்ச்சியின் மூல வித்தே வாசிக்கும் பழக்கம்!

வாசிக்கும பழக்கம் என்பது ஒவ்வொரு மாந்தரிடையே குறிப்பாக பள்ளி மாணவர்களிடையே அவசியம ஒன்றியிருக்க வேண்டியதோர் நற்பழக்கமாகும்-

இந்தப் பழக்கத்தை ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் செல்வங்களுக்குக் கற்பித்தல் இன்றியமையாததாகும-

வீட்டில் பெற்றோரும் பள்ளியில் ஆசிரியர்களும வாசிக்கும பழக்கு மாணவர்களிடையே வளர ஊக்குவிப்பு அளிக்க வேண்டும்-

"இளமையில் கல்" என்ற ஔவை மூதாட்டியின் அமுத வாக்கின்படி இளமையில் வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்வோமானால் இறுதி வரை அப்பழக்கம் நம்மிடையே வேரூன்றி நிலைத்து நிற்கும-

இயன்ற வரை வாசித்தவற்றை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும்-

அறிவு பெருகும் - பொது அறிவு வளரும் - மொழி வளத்தையும் மேன்படுத்திக் கொள்ளலாம-

இதுவே எதிர்காலத்தில் நாம் சிரிய வாழ்வு மேற்கொள்ள தூண்டு கோலாக அமைகிறது-

எனவே வாசிப்புப் பழக்கத்தை மேற்கொள்வோம்-

"ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்" எனும் வாய்மொழியை மனதில் பதிய வைப்போம்- "கேடில் விழுச் செல்வம் ஒருவருக்கு மாடல்ல மற்றயவை" எனும் வாய்மையை உணர்ந்து வாழ்வில் கடைப்பிடித்து உயருவோம்!

எமது வாழ்க்கைக்குக் கல்வி மிக இன்றியமையாதது என்றால் அது மிகையாகாது- "கற்றவர் முகத்தில் கண் என்றும் கல்லாதவர் முகத்தில் புண்" என்பது வான் புகழ் வள்ளுவரின் கூற்றாகும்- ஆகவே கல்வி கண் போன்றது என்பதை உணர வேண்டும்-

மானிடராய் பிறந்த ஒவ்வொருவரும கல்வித் தேர்வில் சிறந்து விளங்க வேண்டும்- கல்விதான் நம் எதிர்கால வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும்-

அன்று மனிதன் வாழ மூன்று அடிப்படைத் தேவைகளே போதுமானதாக இருந்தது-

ஆனால் இன்று மனிதன் வாழ மூன்றும் மட்டும் இருந்தால் போதாது- மற்றத் தேவைகளும அவசியம என உறுதியாகி விட்டது-

நாம் கல்வி கற்றிருந்தால் தான் நாளைய சமுதாயத்தில் தலை நிமிர்ந்து நிற்க முடியும்- நாடே போற்றும் அளவுக்கு ஓர் சிறந்த குடிமகனாக வாழ முடியும்-

"இளமையில் கல்வி சிலை மேல் எழுத்து" - நாம் சிறுவயதிலிருந்து நல்ல முறையில் கல்வி கற்று வந்தால் அது பசுமரத்தாணி போல் நம் மனதில் பதிந்து விடும்-

நாம் இப்பொழுதிருந்தே கல்வியில் சிறந்து விளங்கினால் எதிர்காலத்தில் நல்ல உத்தியோகத்தில் ஈடுபட வாய்ப்பு ஏற்படும்-

நம் வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொள்ள பெரும் உதவியாகவும் இருக்கும்-

கல்வியின் அடிப்படையில்தான் பல நாடுகள் நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டே வருகிறது- இன்று நம் நாடு மிகவும் சுபீட்சமாக இருக்கிறது என்றால் அதற்கு கல்விதான் காரணம்-

ஆரம்பத்தில் கல்வி கற்பதற்கு நமக்கு சிரமமாக இருக்கும்- ஆனால் கற்ற பிறகுதான் அதன் பலன் எப்படிப்பட்டது என்று தெரிய வரும்- ஆகவே மாணவர்களாகிய நாம் அனைவரும் சிறு வயதிலிருந்து கல்வியில் சிறந்து விளங்க கல்வியை ஆர்வமுடன் கற்போமாக!

(த—024)

# ஆட்சித் தலைவரை சாடுகிறார் மனைவி

ஆஸ்திரேலிய பிரதமர் ஒரு சமயம் மகா குடிகாரராக விளங்கியவர் என்றால் இன்றைய ஆர்ஜன்டீன ஜனாதிபதி கார்லோஸ் மென்னம அதிவேகக் கார்களிடமும, அழகு நங்கையரிடமும மனதை பறிகொடுப்பவராக இருந்து வருகிறார்.

பெண் இன்பத்தை எவ்வளவு அள்ளிப்பருகினாலும இவருக்கு சலிக்காது, திகட்டாது. இதை இவர் மனைவியே இப்போது ஒப்புக் கொண்டுள்ளார். சே!

இப்படியும ஒரு ஸ்திரி லோலனா என்று சலித்துக் கொள்கிறார், இவர் மனைவி!

தொடர்ந்து பல ஆசாங்கங்களால் தவறாக வழிநடத்தப்பட்டு வந்த ஆர்ஜன்டீனா இன்று பல தொல்லைகளை எதிர்நோக்கியிருக்கிறது. அவற்றைச் சமாளிக்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும இந்த மன்மத ராசி கொண்ட ஜனாதிபதியின் செல்வாக்கோ தடதடவென சரிந்து கொண்டிருக்கிறது.


ஆமாம், கடந்த செப்டமபரில் 80 சதவீதமாக இருந்த இவரது செல்வாக்கு கடந்த மாதம 34 சதவீதமாகப்படுத்து விட்டது!

(ம-032)

# சிந்தாமணி

தின வெளியீடு "தினபதி" ஞாயிறு வெளியீடு "சிந்தாமணி"

CHINTAMANI சிந்தாமணி

முதலமைச்சர் கருணாநிதியைப் பேச விடாமல் கூட்டத்தினர் குழப்பிய போது அவர்களைப் பார்த்து சிவாஜி கணேசன் கும்பிடுகிறார்— அமைதியாக இருங்கள் என்று பிரதமர் வி பி சிங் சைகை காட்டுகிறார்— (ம—10)

# கருணாநிதியை பேச விடுங்கள்!

...ந்த ஜனதா தள செயல் வீரர்கள் கூட்டத்தில் முதல் அமைச்சர் கருணாநிதிக்கு எதிராக கோஷம் எழுப்பினார்கள்—

சென்னைக்கு வந்த பிரதமர் வி பி சிங் வேப்பேரி பெரியார் திடலில் நடந்த ஜனதா தள செயல்வீரர்கள் கூட்டத்திலும் கல...

...டம் ஆங்கிலத்தில் பேசுவார்கள். அவர் பேச்சை மொழி பெயர்ப்பதற்கும் நேரம் இல்லை. எனவே புரிந்தாலும் சரி, புரியாவிட்டாலும் சரி நீங்கள் அமைதியுடன் கேட்க வேண்டும் என்ற வேண்டுகோள் விடுத்து விட்டு பிரதமர் வி பி சிங்கை பேச அழைத்தார்—

முதல்வர் கருணாநிதி கூட்டத்தினரை பார்த்து என்ன? என்ன? என்று கேட்டார்—

உடனே கூட்டத்தினர் நீங்கள் பேசக் கூடாது, உங்களை பேசவிட மாட்டோம் என்று குரல் எழுப்பினார்கள்—

சிவாஜி இரண்டு கைகளையும் தலையில் வைத்து கும்பிட்டு...

# ராஜீவ் அருகில் செல்வி

"என்னை அரசியலை விட்டு விரட்டவும், அ தி மு கவை உடைக்கவும் கருணாநிதி சதி செய்கிறார்" என்று அ தி மு க பொதுச் செயலாளர் ஜெயலலிதா குற்றம் சாட்டினார். "முறிந்த கிளையில் தொங்கும் தி மு க ஆட்சி விரைவில் கவிழும்" என்றும் அவர் சொன்னார்.

அ தி மு க — இ காங்கிரஸ் சாரபில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக் கூட்டம் சென்னை கடற்கரை சீரணி அரங்கில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி, அ தி மு க பொதுச் செயலாளர் ஜெயலலிதா ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.

பிரதமர் பதவியை இழந்த பிறகு ராஜீவ்காந்தி தமிழகம் வருவது இதுவே முதல் தடவை. அவர் பிரதமராக இருந்த போது போலீஸ் கெடுபிடி மிகவும் அதிகமாக இருக்கும். அளவுக்கு அதிகமாக போலீஸார் குவிக்கப்பட்டு இருப்பார்கள். போலீஸ் அதிகாரிகள் "மெட்டல் டிடெக்டர்" கருவிகளுடன் இங்கும் அங்கும் அலைவார்கள். ஆனால் இப்போது அத்தகைய காட்சிகள் எதையும் பார்க்க முடியவில்லை.

போலீஸார் தடுத்தும் கேளாமல் சில ஆண்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்துக்குள் புகுந்து விட்டனர். அவர்களை போலீஸார் தடியால் அடித்து விரட்டினர். பெண்கள் கூட்டத்துக்குள் புகுந்த ஆண்களை ஒரு...

...தில் சிவாஜிகணேசன் பாரதியார் வேடத்தில் பாடும் சிந்து நதியிசை நிலவினிலே பாடலைப் பாடும்படி துண்டு சீட்டு எழுதி அனுப்பினார். அந்தப் பாட்டைப் பாடத் தொடங்கிய போது கூட்டத்தில் கடும் எதிர்ப்பு கிளம்பியது.

அ தி மு கவினரும், இ காங்கிரஸாரும் "சிவாஜி பாட்டைப் பாடாதே நிறுத்து" என்று கூச்சல் போட்டார்கள். அந்தப் பாடல் நிறுத்தப்பட்டது. "என்னை மன்னித்து விடுங்கள். கூட்டத்தில் யாரோ ஒருவர் சீட்டுக் கொடுத்து அனுப்பினார். எனக்கு எதுவும் தெரியாது" என்று எம எஸ் விசுவநாதன் கூறினார்.

உடனடியாக எம ஜி ஆர் நடித்த "எங்க வீட்டு பிள்ளை" படத்தில் உள்ள "நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்" பாடல் பாடப்பட்டது.

பல அ தி மு கவினர் கை தட்டியபடி ஆடினர். ஒரு வயதான பெண்ணும் கைதட்டி ஆடினார்.

ராஜீவ்காந்தியும், ஜெயலலிதாவும் மேடைக்கு வந்தார்கள். தமிழ்நாடு இ காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி ராஜீவ்காந்தி காலில் விழுந்து வணங்கினார். சட்டசபை இ காங்கிரஸ் கட்சித் தலைவர் மூப்பனாரை மேடையில் காண வில்லை.

ராஜீவ்காந்திக்கு ஜெயலலிதா பொன்னாடை போர்த்தார். ஜெயலலிதாவுக்கு ராஜீவ்காந்தி...



தனக்கு பொன்னாடை போர்த்த ஜெயலலிதாவுக்கு ராஜீவ் காந்தி பொன்னாடை போர்த்துகிறார்— (ம—10)

கூட்டத்தை தடுக்க கருணாநிதி பகிரத பிரயத்தனம் செய்தும் கூட்டம் சிறப்பாக நடக்கிறது,

கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போகிறேன் என்றானாம். தமிழகப் பிரச்சினைகளை தீர்த்து வைக்க முடியாத கருணாநிதி தேசிய பிரச்சினையைத் தீர்த்து வைக்கப் போவதாக சொல்லிக் கொண்டு இருக்கிறார்.

ஜெயலலிதா இருக்கும் மட்டும் தன்னால் எதுவும் செய்ய முடியாது என்பதை உணர்ந்த கருணாநிதி என்னை அரசியலில் இருந்து ஒழிக்க சதி செய்கிறார், அ தி மு கவை உடைக்க இரட்டை இலைச் சின்னத்தை முடக்க சதி நடக்கிறது. இதற்கு கோடிக்கணக்கான பணம் செலவிடப்படுகிறது.

எம எல் ஏக்களை, எம பிக்களை இழுக்க முயற்சி செய்கிறார்கள், பழகிய யானையை வைத்து காட்டு யானையை இழுப்பது போல் அ தி மு கவினரை இழுக்க முயற்சி செய்கிறார்கள். பிள்ளை பிடிக்கும் கூட்டமாக மாறி அ தி மு கவில் இருந்த ஆட்களை இழுக்கிறார்கள்,

நான் சொந்த வேலையாக...

...துவதாக தேசிய முன்னணி அரசு கூறுகிறது.

இட்டுப் ... தனி நபர் உரிமையில் தலையிடுவது நியாயமா? இதுதான் திறந்த வெளி அரசு நடத்தும் லட்சணமா?

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கருணாநிதி இதுவரை சாதித்தது என்ன? ஒரு ஒரு போராளி குழுவுடன் பேசிவிட்டு என் கடமை முடிந்தது என்கிறார்.

இலங்கையில் மாநில கவுன்சிலுக்கு அதிக அதிகாரம் தர வேண்டும். தமிழர் பாதுகாப்புக்கு உத்தரவாதம் கொடுக்கப்பட வேண்டும், அதன் பிறகுதான் இந்திய அமைதிப்படை வாபஸாக வேண்டும்.

இலங்கை தமிழர் பிரச்சினையை தீர்க்க பிரதமர் வி பி சிங் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி ஆலோசனை நடத்த வேண்டும். அதுபோல் கருணாநிதியும் அனைத்து கட்சி தலைவர்கள் கூட்டத்தை கூட்ட வேண்டும்.

தேசிய முன்னணி ஆட்சி ஒரு முறிந்த கிளை. அதை 2 கைகள் தாங்கிக் கொண்டு இருக்கின்றன, ஒரு கை பிடியை விட்டாலும், கிளை கீழே விழுந்து விடும். அந்த முறிந்த கிளையை பிடித்துக் கொண்டு தி மு க கொண்டு...

